Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
ஜனவரி 09 - 15, 2014

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1048



# வன்னிக்குள் நடமாடும் சிவில் பயங்கரவாதம்



# அமெரிக்காவின் அக்கிரமங்களும் நவீன உலகமும்





# தலைநகர் மோகமும் மலையகத்தின் எதிர்காலமும்!

# முள்ளிவாய்க்கால் முடிவு!

இறுதிப் பாகம்

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## ௐ பெண்கள் விரத நாள்

பங்குனித் திங்கள் விரதம் பெண்களால் கடைப் பிடிக்கப்படுவது வழக்கம். இந்நாளில் அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபடுவார்கள். சிறப்பாகக் கண்ணகி அம்மன் ஆலயங்களில் பங்குனி மாதம் பொங்கல் வழிபாடு நடைபெறுவது வழக்கம்.

பெண்கள் அன்று நோன்பிருந்து அபிராமி அந்தாதி முதலிய பக்திப் பாடல்களை படித்து மறுநாள் உதயத்திற்கு முன் பராயணம் செய்தால் நல்லது. இப்படிச் செய்தால் சகல செல்வங்களும் பெற்று வாழ்வர். உத்திரத்தன்று சிவாலயங்களில் சிறப்பு பூஜை, வழிபாடுகள் நடக்கும்.

ஆலயம் சென்று சிவனை வணங்கினால் பெண்களுக்கு மாங்கல்ய நலம் வரும். கணவர்களின் துன்பம், நீங்காத நோய்கள் தீரும். குடும்பத்தில் ஒற்றுமை ஓங்கி குதூகலம் ஏற்படும். மங்கலம் பெருகும். கணவன்–மனைவி இடையே இருந்து வந்த கசப்புகள் நீங்கி அன்பு வளரும் அமைதி நிலவும்.

## ஆன்மீகம் — உயிர்ப்பே அடித்தளம்

ஆலயம் இயேசுவின் கணிப்புப்படி "இறை வேண்டலின் வீடு". (லூக்19'46 அதாவது இறை–வனைச் சந்திக்கும் இடம், இறை உதவியை மன்றாடும் இடம், என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். ஆலயம், கற்றுக்கொள்ளும் இடம். கற்றுக்கொடுக்கும் இடம். இயேசு கோயிலில் கற்றுக்கொடுத்தார். தானும் கற்றுக்கொண்டார். (லூக்19'47)

திருவிழா, பெருவிழாக்களின்போது பங்குத்தந்தை இப்படிச் சொல்வார். கோயில் செபிக்கும் இடம். எனவே ஆடம்பரம் அமர்க்களத்தை தவிர்த்து அமைதியாக செபியுங்கள். கோயிலை சந்தையாக்க வேண்டாம். ஆண்டவனுக்கு செலவு செய்யுங்கள். ஆடம்பரத்துக்காக பணத்தை வீணாக்கவேண்டாம் என்றால் யார் கேட்பார்கள்.

பரிசேயர்களுக்கும் தலைமை குருக்களுக்கும் மறைநூல் அறிஞர்களுக்கும் கோயில், பணம் சம்பாதிக்கும் இடம். தங்கள் பெருமையை புகழை மேடைபோட்டு காட்டுமிடம். அதிகாரத்தையும் ஆணவத்தையும் (ஏழைகள், அப்பாவிகள்) மீது ஏவி விடுமிடம்.

## அல்லாஹ் வழங்கும் அருட்கொடை

நற்கல்வி கற்றோர் நல்லவராவார். ஆம் கல்வியை தேடுங்கள். ஏனென்றால் அல்லாஹ்வின் அருளோடு அதனை தேடுபவர் தூயசெயல் செய்தவராவார். அதை நாடிச் செய்பவர் அல்லாஹ்வை தோத்திரம் செய்தவராவார், கல்வியைப் பற்றி கதைப்பவர் அல்லாஹ்வை புகழ்ந்தவராவார், தகுதியுடையவர்களிடையே அதை செம்மையாக பரப்புபவர் அல்லாஹ்வுக்கு வணக்கம் செலுத்தியவராவார். இன்னும் கல்வி அல்லாஹ்வால் ஏவப்பட்டதையும் விலக்கப்பட்டதையும் பகுத்தறிவு மனிதனுக்கு பிரித்துக் காண்பிக்கிறது.

இத்தகைய அருளுரைகளால் அல்லாஹ் மனிதனுக்குக் கல்வியை கற்க ஏவுகிறான். இவற்றை எல்லாம் இவன் பேனாவென்னும் பெருங்கொடை கொண்டு எழுதி பெருமையடைய வேண்டும். ஐயத் தெளிவுகளுக்காக எம்மிடம் வருபவர்களை அதட்டி அனுப்பிவிடக்கூடாது. அவர்களின் ஐயங்களை போக்கி அகத்தெளிவை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். நல்லறிவு பெற்ற மனிதன் நல்லவனாக வாழும் பொழுது அவன் அல்லாஹ்வின் பிரதிநிதியாகின்றான். இது மனிதனுக்கு அல்லாஹ் வழங்கும் அருட்கொடை.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி 1045



பா ரா ட் டு க் கு ரி ய து

### இலட்சியம்

என் உடலில் – ஒரு
ஊனம் கண்டு – என்
உறவுகள் – என்னை
உதறியபோதும் – என்
உணர்வுகள் ஒன்றும்
ஊனமாகவில்லை,
உழைத்தே – நான்
உயர்ந்திடுவேன் – என்
தாயின் கனவுகள்
நனவாகும் வரை...

வி.தர்ஷி, சூராவத்தை.

### உபதேசம்

கரமில்லா
சடம் இங்கு
உழைப்பின் பெருமையை
உணர்த்தும் காட்சியிது
உழைத்து வாழ வேண்டும்
பிறர் உழைப்பில்
வாழ்ந்திடாதே!

எம்.சி.கலீல், கல்முனை–05

## கவிதைப் போட்டி இல 1048



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22. 01. 2014

கவிதைப் போட்டி இல. 1048
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### உழைக்கும் கரம்

துடுப்பிழந்த படகு போல்
வலு விழந்து நானிந்தப்
பூமிக்குப் பாரமாய்
தாய்க்குச் சோகமாய்
நாட்டிற்கு வேடிக்கையாய்
வாழ்வேன்....
என்றென்னை எண்ணாதீர்
என்றும் நிலைக்கும்
செயல் செய்து
மலைபோல செல்வேன் – இப்
பாரினிலே...

எஸ்.மது, ஏழாலை.

### உதாரணம்

உறுப்பொன்று இல்லாது வாழ்ந்தாலும்
உழைப்பின்றி வாழமுடியாது
என்பதற்கு நீ உதாரணம்
உண்மையில் ஊனம் உள்ளத்தில்தான்
உடலில் இல்லை.

க.கவின்ராஜ், யாழ்ப்பாணம்.

### இதுதாண்டா இறைநியதி

இப்படித்தான் நீ
இருப்பா யென்றோ
இறையவனின்
தீர்ப்பு!
இப்படியும்
இவனிருக்க
இறையவனே கார்ப்பு!
இதுதான் தம்பி – இந்த
மானிட யாக்கையரின் யாப்பு!
இதை மறந்து துடிக்காதீர்!
இறையடிப்பான் ஆப்பு!

பாண்டியூர் – ஸ்வான்.நவநீதன்.

### உழைப்பு

ஊனம் ஒரு குறையில்லை - ஆனால்
உழைப்பின்றி வாழ்வில்லை
இரண்டையும் உணர்த்தும் உனக்கு
ஒரு கையில்லை பரவாயில்லை
உனக்கு உழைப்புண்டு!

பவிராஜ், யாழ்ப்பாணம்.

### ஒரு வழி

கௌரவமுடன் உழைத்துண்ண
உள்ளத்தில் உறுதி பிறந்துவிட்டால்
கரங்கள் இல்லாவிடினும்
வழிகள் பல உண்டு
அதில் இதுவுமொரு வழி!

அ.சந்தியாகோ, கண்டி.

### தன்மானம்

இருகரம் இழந்தும்
இருக்கையை நாடாமல்
திருடாமல்
பொய்சொல்லாமல்
யாசிக்காமல் தன் மானம்
காத்து வயிற்றுப் பசிக்கு
வழி தேடும் இவர் நிலை
விதியா சாபமா கடவுளே!

பீ.எஸ்.ஏ.தாஹிர், காத்தான்குடி -03.

### வேறுபாடு

அபிவிருத்தியும் வீட்டுத்திட்டங்களும்
அவர்களுக்கு நடக்கிறது!
வீடுகள் உடைப்பும்
கோயில்கள் அழிப்பும்
எங்களுக்கு நடக்கிறது!

ந.வர்ஷினி, மட்டக்களப்பு.

## உங்கள் பக்கம்

### பேரூந்து தரிப்பிடம் தேவை

கொடிகாமம் பிரதேசத்தில், A9 பிரதான வீதியில் கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு பஸ் தரிப்பிடம் இல்லாமையால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறித்த வீதியில் பஸ் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்படாமையால் பேரூந்துக்காக காத்துநிற்கும் பயணிகள் வெயிலிலும்; மழையிலும் நின்றே தமது பயணத்தை சிரமத்துடன் மேற்கொள்வதைக் காணமுடிகிறது.

குறித்த வீதியில் பஸ் தரிப்பிடம் என்ற பெயர்ப்பலகை காணப் படுகின்றதே தவிர பஸ் தரிப்பிட நிலையம் இல்லை.

மேலும் இப்பிரதேசத்தில் உள்ளூரிலிருந்தும், தூர இடங்களி லிருந்தும் பிரதான வீதிக்கு வரும் பயணிகள், பேரூந்து வரும்வரை கால்கடுக்க காத்துநிற்பதுடன், சிலர் கடைகளுக்கு முன்பாக நிழல் பார்த்து நின்று பேரூந்தை தவறவிட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

அத்துடன் பாடசாலை மாண வர்கள், அரச அலுவலர்களும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, பயணிகளின் நன்மை கருதி A9 பிரதான வீதியில் பஸ்தரிப்பு நிலையத்தை அமைக்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென மீண்டும் உங்கள் பக்கம் ஊடாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

கொடிகாமம் வாழ். மக்கள்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

## வாசகர் சாலை





### மகிழ்ச்சி

பிரதி வாரம்தோறும் வெளிவரும் முரசின் தகவல்கள் மிகவும் சிறப்பாகவுள்ளது. அதிலும் பெண்கள் பகுதி, அன்புள்ள அம்மா பகுதி, பாப்பா முரசில் வரும் தகவல்கள் என்பன மிக பலனுள்ளதாகவுள்ளது. ஒவ்வொரு வாரமும் புதுப்புதுத் தகவல்களை தாங்கி வருகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது.

இவ்வாறாக தொடர்ந்தும் முரசில் புதுமையான விடயங்கள் வெளிவர வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

துர்க்கா, கோவில் வீதி.

### புதுமை!!!

சுவாரசியமாகவும் புதுமையானதாகவும் தகவல்களை வெளியிடுவதில் முரசு முதன்மையானதாகும். அந்தவகையில் முரசில் வெளியாகும் அனைத்து விடயங்களும் சூப்பர்.

குறிப்பாக அரசியல் கட்டுரைகள், விளையாட்டு, க்ரைம் (குற்றம்), உலக தகவல்கள் பகுதி (பக்கம் 24) என்பன மிகச் சிறப்பானதாகவுள்ளது. இடி அமீன் தொடர்மூலம் அவரைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

குறை என்று ஒன்று சொல்வதற் கில்லை. எல்லா விடயங்களும் தரமானதாகவுள்ளது. பாராட்டுக்கள்!

சனா, நல்லூர்.

### ஜொலிக்கும் முரசு!

**தினமுரசுக்கு பொங்கல் வாழ்த்துக்கள்!**

சவால்களை நிஜங்களாக்கி
காலத்தின் கோலத்தால்
சிக்கித் தவித்த - நீ
தடம்புரளாமல் நீதி வழி
மக்களை நன்னெறிகொண்டு
நல்பாதை காட்டி
உன்னத படைப்பாய்
முத்துக்களாய் ஜொலித்துக்
கொண்டிருக்கிறாய்.

சி.அபி, யாழ்ப்பாணம்.

### அற்புதம்

பிறந்திருக்கும் புத்தாண்டில் முரசு புதிசாய் பிறக்கவேண்டுமென வாழ்த்துகிறேன். முரசினுடைய அனைத்து அம்சங்களும் அற்புதம். லேடீஸ் ஸ்பெஷல், க்ரைம் என்பவை எனக்கு விருப்பமானவை. யசீர் அரபாத்தின் கட்டுரை சென்றவாரம் வெளியாகியது. அவருடைய பல உண்மைகளை சிறப்புறக் கூறியிருந்தார் வேணுகிஷ்ணா. முரசு சுவையூட்டக்கூடிய மசாலாக்களை தரவேண்டும்.

எஸ்.அமீர், தர்ஹாநகர்.

# வடக்கில் திணைக்களங்கள் – செயலகங்களின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை

## சந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



வடக்கு மாகாணசபையின் கீழ்வருகின்ற திணைக்களங்கள் செயலகங்கள் என்பவற்றில் முப்பதாயிரம் பணியாளர்கள் கடமையாற்றிவருகின்றனர். அவர்களின் சம்பளக் கொடுப்பனவிற்காக மட்டும் வருடந்தோறும் 10500 மில்லியன் ரூபா வரையில் ஒதுக்கப்படுகின்றது. ஆனால், குறித்த திணைக்களங்களின் சேவைகள் மக்கள் திருப்தியடையும் வகையில் இல்லை. வடக்கு மாகாணசபை ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் இதே நிலைமைதான் தொடர்கின்றது என அண்மையில் கணடாவளைப்பிரதேச சமுர்த்த உத்தியோகத்தர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் குற்றஞ்சாட்டியுள்ளார.

மேலும், கடந்த காலங்களில் அரச திணைக்களங்களின் சேவையை நாடி மக்கள் வருகை தந்த நிலைமையை மாற்றி மக்களை நாடி திணைக்களங்களின் சேவைகள் சென்றடைய வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டுவருகின்றது. அதன் அடிப்படையில் வாழ்வின் எழுச்சித்திட்டம் அமைந்துள்ளது. வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே இதன் முக்கிய திட்டமாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற நிலையில் 30 வீதமான மக்களுக்கு மட்டுமே வாழ்வின் எழுச்சித்திட்ட உதவிகள் கிடைக்கின்றது. எனவே, அனைவரும் பயன்பெறும் வகையில் அரசியல்ரீதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வாழ்வின் எழுச்சித்திட்டத்தினால் கிடைக்கக்கூடிய அனைத்துவிதமான நன்மைகளையும் மக்களுக்குக் கொண்டு வந்துசேர்க்கும் பொறுப்பு சமுர்த்தி உத்தியோகத்தர்களின் கரங்களிலேயே இருக்கின்றது என்று தெரிவித்தார்.

## எல்லையைத் தாண்டி மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம்: இந்திய மீனவர்களுக்கு அறிவுறுத்தல்

சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவேண்டாம் என்று இந்தியாவின் கிழக்கு பிராந்திய கடலோரக் காவல்படை தளபதி சத்ய பிரகாஷ் சர்மா அறிவுறுத்தியுள்ளார்.

கடலோரக் காவல்படை வார கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை மெரினா கடற்கரையில் கலங்கரை விளக்கம் அருகே 'புரோ சேலஜ்ஞ் 2014' என்ற பீச் கரப்பந்தாட்டப்போட்டி கடந்த செவ்வாய்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இதையொட்டி கடலோரக் காவல்படை கிழக்கு பிராந்திய தளபதி சத்ய பிரகாஷ் சர்மா சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

கடல்வழியாக தீவிரவாதிகள் ஊடுருவுவதைத் தடுக்க தமிழக, ஆந்திர கடலோரப் பகுதிகளில் 30 படகுகள் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளன. புதிதாக 13 ராடர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. கப்பலில் எண்ணெய் எடுத்துவரும்போது எண்ணெய்க் கசிவால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்க கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது.

பருவநிலை மாற்றம் உள்ளிட்ட காரணங்களால் கடலில் தத்தளிக்கும் மீனவர்களும், மக்களும் மீட்புப் பணிக்காக மண்டபம் மையத்தை அணுகலாம். சர்வதேச எல்லையைத் தாண்டிச்செல்வது, மீன்பிடிப்பது குற்றம். ஆகவே, தமிழக மீனவர்கள் எல்லை கடந்து மீன்பிடிப்பதை தவிர்ப்பதன்மூலம் தேவையற்ற அசௌகரியங்களை தவிர்க்க முடியும், என்றார்.

## கடந்த வருடத்தில் சுமார் 5 இலட்சம் கடவுசீட்டுக்கள்!

2013 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் குடிவரவு - குடியகல்வு திணைக்களம் 4 இலட்சத்து 97 ஆயிரத்து 642 கடவுச்சீட்டுகளை விநியோகித்துள்ளதாக திணைக்களத்தின் பிரதான கட்டுப்பாட்டாளர் சூலாணந்த பெரேரா தெரிவித்தார்.

கொழும்பு பிரதான அலுவலகத்தின் ஊடாகவும் மாத்தறை, கண்டி, வவுனியா, பிராந்திய அலுவலகங்களினூடாகவும் இவை விநியோகிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2 இலட்சத்து 83 ஆயிரத்து 25 சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டுகளும் 2 இலட்சத்து 14 ஆயிரத்து 617 மத்திய கிழக்கு நாடுகளுக்குமான கடவுச்சீட்டுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. கொழும்பிலுள்ள பிரதான அலுவலகமூடாக 2 இலட்சத்து 33, 731 சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டுகளும், ஒரு இலட்சத்து 96,277 மத்திய கிழக்கு நாடுகளுக்கான கடவுச்சீட்டுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மாத்தறை பிராந்திய அலுவலகத்திலிருந்து 11,332 சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டுகளும், 2,555 மத்திய கிழக்கு நாடுகளுக்கான கடவுச்சீட்டுகளும், கண்டி அலுவலகத்திலிருந்து 24,873 சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டுகளும் 10,243 மத்திய கிழக்கு நாடுகளுக்குமான கடவுச்சீட்டுகளும் வவுனியா பிராந்திய அலுவலகத்திலிருந்து 13,039 சகல நாடுகள் கடவுச்சீட்டுகளும், 5,542 மத்திய கிழக்கு நாடுகள் கடவுச்சீட்டுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும் சூலாணந்த பெரேரா தெரிவித்தார்.

## மூதூரில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

திருகோணமாலை, மூதூர் அல்-மினா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றுவரும் வளப்பற்றாக்குறையை நிவர்த்திக்குமாறு கோரி அப்பாடசாலையின் மாணவர்களும் மாணவர்களின் பெற்றோரும் இணைந்து பாடசாலைக்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, பாடசாலைக்கு விஜயம் செய்த மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.விஜயானந்தமூர்த்தி பாடசாலையில் நிலவும் அனைத்து வகையான பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வைப்பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்ததைத் தொடர்ந்து கவனயீர்ப்பு போராட்டம் முடிவிற்கு வந்தது.

1960ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப்பாடசாலையானது மிகப்பழமையான கட்டடங்களோடே இன்றுவரை இயங்கிவருகின்றது. இங்கு 16 வகுப்பறைகள் தேவைப்படும் நிலையில் 11 பழமையான வகுப்பறைகளே காணப்படுகின்றன. தளபாடம், விளையாட்டு மைதானம் உள்ளிட்ட பௌதீக வளப்பற்றாக்குறையினாலும் கல்வி, கல்விசாரா ஆளணி வளப்பற்றாக்குறையினாலும் பாதிக்கப்பட்டுள்ள இப்பாடசாலை கல்விப்பெறுபேறுகளில் முன்னேறிவருவது குறிப்பிடத்தக்கது.




## ஹலால் சான்றிதழ் வழங்குவதை நிறுத்தியது ஜம்இயத்துல்

இலங்கையில் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கு ஹலால் சான்றிதழ் வழங்கும் பணியைக் கடந்த டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறுத்திக் கொள்வதாக அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹல்ால் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு எதிராக கடந்த காலங்களில் பொதுபல சேனா, இராவணய சக்தி, போன்றவை மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்கள் கோரிக்கைகள் என்பவற்றின் தொடர்ச்சியாகவே ஜம்இயத்துல் உலமா சபை மேற்கொண்டுள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்த ஆண்டில் இருந்து இலங்கையில் துறைசார்ந்தோர் மூலம் நிறுவப்பட்ட உத்தரவாத நிறுவனம் ஒன்று ஹலால் சான்றிதழ் வழங்கும் வேலையை மேற்கொள்ளுதல், அவற்றைக் கண்காணித்தல் உட்பட அனைத்து விசயங்களையும் செய்யும் என்றே மேற்படி உலமா சபையினால் தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்லாமிய மார்க்கத்தின் வேத நூலான திருக்குர் ஆனில் இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் உண்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் ஏற்றுக் கொள்ளப்படாத இரண்டு பட்டியல்கள் வரையறுக்கப்பட்டுள்ளது. திருக்குர் ஆனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை ஹலால் என்றும், ஏற்றுக் கொள்ளப்படாதவை ஹறான் என்றும் சொல்லப்படுகின்றது.

தானாக இறந்தவை, இரத்தம், பன்றி மாமிசம், ஈருடக உயிரினங்கள் உட்பட சில ஹறான் பட்டியல்களுக்குள் சேர்க்கப்பட்டுள்ளது.

கடல்வாழ் உயிரினங்கள். உண்ணத்தக்கவையாக அங்கீகரிக்கப்பட்டுள்ள அதேவேளை ஏனைய மாமிசங்கள் வெட்டப்படும்போது இறைவனின் பெயரால் வழிபாடு செய்த பின்னரே வெட்டப்படவேண்டும் என்ற வரையறையை திருக்குர் ஆன் வரையறுத்திருக்கின்றது.

இந்நிலையில் மாமிசம் அல்லாத பால்மா, பிஸ்கட் போன்ற உணவுப் பொருட்களுக்கும் ஹலால் முத்திரைப் பதிக்கப்பட்டுள்ளதே? என்ற கேள்வி ஏற்படலாம்.

குறித்த பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் போது ஹறான் செய்யப்பட்ட பதார்த்தங்கள் பயன்படுத்தப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே உணவுப் பொருள் அனைத்திற்கும் ஹலால் சான்றிதழ் வழங்கும் நடைமுறை காணப்படுகின்றது. இதனைப் பல நாடுகளில் அரசாங்கத் திணைக்களங்களே மேற்கொண்டு வருகின்றன.

ஆனால், இலங்கையில் அவ்வாறான நடைமுறைகள் காணப்படவில்லை. ஜம்இயத்துல் உலமா சபை 1927 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஆரம்பத்தில் இச்சபையில் ஹலால் சான்றிதழ் வழங்கும் செயற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

இந்நிலையில் முஸ்லிம் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முஸ்லிம் மக்களிடையே தங்களுடைய பொருட்களை விற்பனை செய்வதற்கும் ஹலால் சான்றிதழ் அவசியம் என்பதைப் புரிந்துகொண்ட முஸ்லிம் அல்லாத உற்பத்தியாளர்கள் ஹலால் சான்றிதழ் பெறுவதற்கு முஸ்லிம் அமைப்புக்களையும் உலமாக்களின் உதவிகளையும் நாடினர். இவ்வாறு ஜம்இயத்துல் உலமா சபை குறித்த சான்றிதழை வழங்க முன்வந்தது.

காலப்போக்கில் இதன் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டு அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற அமைப்பாக மாற்றம் அடைந்து ஹலால் சம்பந்தப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் இச்சபையே மேற்கொண்டு வந்தது. இந்நிலையில் ஹலால் சான்றிதழ் பெறுவதற்காக பெருந்தொகைப் பணத்தை உற்பத்தி நிறுவனங்கள் செலவிடுவதுடன் அவற்றை நுகர்வோரிடம் இருந்தே அறவிடுகின்றது.

இதனால் முஸ்லிம்கள் அல்லாத சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் தேவையற்ற ஹலாலுக்காக அதிக பணத்தை இழக்க வேண்டி ஏற்படுகின்றது என்ற கருத்தை முன்வைத்து பொதுபல சேனாவின் அமைப்புக்கள் போராட்டம் நடத்திவந்திருந்தன. இந்நிலையிலேயே ஜம்இயத்துல் உலமா சபை மேற்படி தீர்மானத்தை அறிவித் துள்ளது.

குறித்த தீர்மானத்தினால் ஹலால் சான்றிதழ் இன்னும் எவ்வளவு காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் என்பது நிச்சயமற்றிருப்பதாக முஸ்லிம் சமூக சமைய ஆர்வலர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

அவர்களின் கருத்துப்படி ஒரு வேளை ஹலால் சான்றிதழ் முற்றாக நிறுத்தப்பட்டாலும் முஸ்லிம் மக்களை அது எவ்விதத்திலும் பாதிக்கப்போவதில்லை. மாறாக முஸ்லிம் உற்பத்தியாளர்கள் வர்த்தகர்கள் நன்மையே அடைவார்கள். மாறாக முஸ்லிம் அல்லாத உற்பத்தியாளர்கள் தங்களது விற்பனையில் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பகுதிகளில் இழக்கநேரிடும்.

எனவே, முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் ஹலால் சான்றிதழ் என்பது அவசியமற்ற ஒன்று என்பதே பெரும்பாலான முஸ்லிம் மக்களின் கருத்தாக இருக்கினறது.

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## எலும்புக்கூடுகளின் அட்சய பாத்திரம்

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நாளாந்தம் அகழப்படும் மனித எலும்புக் கூடுகள் நடைபெற்று முடிந்த பல கோரச் சம்பவங்களுக்கு தடயங்களாகக் காணப்படுகின்றது.

இதுவரை சுமார் 33 மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ள போதும், தொடர்ந்தும் தோண்டுகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வடக்குக் கிழக்கில் இன்னும் தோண்டுகின்ற இடங்களில் எல்லாம் மனித எலும்புக்கூடுகள் வெளிப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கின்றன.

எலும்புக்கூடுகளாகக் கண்டெடுக்கப்படுகின்றவர்கள் நேரடிச் சண்டையில் சாவைத் தழுவியவர்களா, கைதிகளாகி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டவர்களா, அல்லது இன்னும் உறவுகள் தேடி அலையும் காணாமற்போனவர்களின் பட்டியலுக்குள் அடங்குபவர்களா?

இந்தக் கேள்விகளுக்கு மனிதர்கள் எவரும் பதிலளிக்கப் போவதில்லை. எலும்புக்கூடுகள் பதிலளித்த அதிசயங்கள் இன்னும் நிகழவில்லை. ஆனாலும், வடக்குக் கிழக்கு எங்கும் மனிதப் புதைகுழிகளுக்குள் கண்டெடுக்கப்படும் எலும்புக்கூடுகள் அநேகமாக தமிழ் மக்களுடையதாகவே இருக்கும் என்பதை மட்டும் ஊகிக்க முடிகிறது.

ஆயுதம் தூக்கியவர்கள், எதிர்ப்பட்டவர்களையும், எதிர்த்தவர்களையும் போட்டுத் தள்ளியதே போராட்டமாக நியாயப்படுத்தப் பட்டதும், ஆயுதமேந்தி நிற்கும்போது கொலைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் தமக்கே வழங்கப்பட்டுள்ளதான மனநிலையோடு, மனித மிருகங்கள் நடமாடியதும் நமது கடந்த கால வரலாறு.

ஆயுதம் தூக்கிய எல்லாத் தரப்புக்களுமே கொலைகளுக்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. அதில், ஒருசாரார் படையினரையும், இன்னொரு சாரார் புலிகளையும் மட்டும் குற்றஞ்சுமத்துவது நியாயமாகாது.

கண்டெடுக்கப்படும் எலும்புக்கூடு யாருடையது, யாரால் புதைக்கப்பட்டது என்பதை வெறும் பார்வையாளர்களால் தீர்மானிப்பது கடினம். வெளிநாடுகளில் வளர்ந்து வந்துள்ள தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எலும்புக்கூட்டிற்குரிய நபர் எத்தனை வயதையுடையவர்?, எந்தக் காலப் பகுதியில் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்?, எவ்வாறு கொலை செய்யப்பட்டிருக்கின்றார்? என்பது தொடர்பான விபரங்களைக் கண்டறிய வேண்டும். அப்போதுதான், அந்தக் காலகட்டத்தில் குறிப்பிட்ட புதைகுழி உள்ளடங்கியிருக்கும் பிரதேசம் யாருடைய கட்டுப்பாட்டிற்குள் இருந்தது என்பதையும், அந்தக் காலப்பகுதியில் காணாமற் போனவர்கள், கொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பான தகவல்களைச் சரியாகத் திரட்டமுடியும்.

அதுசாத்தியமாகின்றபோது, குறித்த கொலைகளோடு தொடர்புபட்டவர்கள் யார் என்பதையும் திட்டவட்டமாக தெரியப் படுத்த முடியும். அவ்வாறில்லாமல், எழுந்தமானமாக வேறொருவர்மீது பழிகளைச் சுமத்தி, குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கலாம்.

திருக்கேதீஸ்வரம் புதைகுழி விவகாரம் மண்ணோடு மறைக்கப்பட்ட பல மர்ம முடிச்சுக்களை அவிழ்க்கும் ஆரம்பப் புள்ளியாகப் பார்க்கப்படலாம். ஏனெனில், வடக்குக் கிழக்கில் குழிதோண்டுவதற்கு குலை நடுங்கும் அளவிற்கு இன்னும் எலும்புக்கூடுகள் புதைந்து கிடக்கலாம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# வன்னிக்குள் நடமாடும்
# சிவில் பயங்கரவாதம்

புலிப்பயங்கரவாதம் இருந்த வரை வேறு எதிலெல்லாம் பயங்கரவாதச் சாயல் இருந்தது என்பதை யாரும் தெரிந்து கொள்ள முற்படவில்லை. புலிப் பயங்கரவாதம் அழிக்கப்பட்ட பிறகுதான் மற்றைய பயங்கர வாதங்களும் வெளியில் தெரியத் தொடங்கியது.

அரசியல் பயங்கரவாதம், ஊடகப்பயங்கரவாதம், வர்த்தக பயங்கரவாதம், அதிகாரப் பயங்கரவாதம் எனப் பலவித பயங்கரவாதங்கள் இன்று இலங்கையில் உள்ளது. தாம் பயங்கர வாதம் புரிகின்றோம் என்பது சம்மந்தப்பட்டவர்களுக்கே தெரிவதில்லை. அதற்குக் காரணம் அவர்கள் தம்மைத்தாமே முதன்மையானவர்களாகவும், தாமே முடிவை எடுப்பவர்களாக திகழ்கின்றவர்களாகவும் மற்றவர்களின் தலையெழுத்தை தாமே தீர்மானிப்பவர்களாக இருப்பதாக எண்ணிக்கொண்டு ஆளுமை செலுத்துவார்கள். இவை அவரவர் சார்ந்த வளம், வழிமுறை தொடர்பில் வேறுபட்டிருக்கும்.

நாட்டின் தற்போதைய சூழலுக்கு எவ்வாறான பயங்கர வாதம், எவ்வகையில் காரணமாக இருந்துவருகின்றது என்பதை தெரிந்துகொள்வது கடினமாக இருக்காது.

இன்னொரு பார்வையில் இலங்கையில் மேலும் ஒருவகைப் பயங்கரவாதம் வளர்ந்து வருகின்றது. அது அழிந்த பயங்கரவாதத்துக்கு உயிரூட்ட எடுக்கப்படும் முயற்சியாகவும், அழிந்த பயங்கரவாதத்தின் பெயரால் அனுதாபங்களை தேடிக்கொள்ளவும் அரசியல் இலாபங்களைத் தேடிக் கொள்ளவும் திரைமறைவில் எடுக்கப்படும் தவறான முயற்சிகள், பாதிக்கப்பட்ட மக்களின் காயங்களை ஆறவிடாமல் கிளறிவிடுவதும், பழிவாங்கும் உணர்வுகளைத் தூண்டிவிடுவது, போராட்டத்துடன் தொடர்பு பட்டிருந்தவர்களை இயல்பு வாழ்வுக்கு மனரீதியாக மாற விடாமல் அவர்களை மீண்டும் உசுப்பேற்றி அவர்களுக்குள் மீண்டும் பயங்கரவாதத் தீயை மூட்டிவிட எத்தனிப்பதும், இவற்றுக்கு தாமே தலைமை தாங்குவதுபோல் காட்டிக் கொள்வதும்கூட பயங்கரவாதமாகும்.

இதற்குள் ஒரு கிளை பயங்கரவாதமும் மெல்ல வளர்ந்துகொண்டிருக்கின்றது. அதுதான் இலங்கைக்கு வருவோரையும், வரவழைக்கப் பட்டோரையும் இரகசியமாக சந்தித்து உண்மைக்குப் புறம்பாக கதைகள் கூறுவதும், இரகசியமாக சர்ச்சைக்குரிய அல்லது தடைவிதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அவர்களுக்கு வழிகாட்டுவதும், அங்கு அழைத்துக்கொண்டு போவதுமாகும்.

இந்த முயற்சிகளுக்கு தடைகளோ, மறுப்புக்களோ ஏற்படுகின்ற போது அதுவே இங்கு தமிழர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வாழ்க்கை என்றுகாட்டி, தாம் நாளாந்தம் கொடூரமான. அரசுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருப்பதாகவும் காட்டிக் கொள்வதாகும்.

இவையும் நாளடைவில் பயங்கரவாதத்தை நோக்கிச் செல்வதற்கான நகர்வுகளாகும். ஏனெனில் விடயங்களை கையாளத் தெரியாதவர்கள் தமது அரசியல் மற்றும் சுயஇலாப நலன்களிலிருந்து பிரச்சினைகளை அணுக முற்படுவதால் சாதாரண சம்பவங்களும் பயங்கரவாதமாக உருப்பெருப்பம் அடைந்து விடுகின்ற ஆபத்துக்கள் தமிழர் அரசியலில் மிகமிக அதிகமாகவே இடம்பெற்றுவிடுகின்றன.

கடந்த காலத்திலும் அதுவே நடந்தது. பிரபாகரன், பல்வேறு பெயர்களில் தாக்குதல் அணிகளை தன்னகத்தே வைத்திருப்பதாக காட்டிக்கொண்ட போது அதை இலங்கை அரசும், சர்வதேசமும் அது பிரபாகரன் வெளியில் காட்டும் படம் என்று எதுவரை போகும் என்பதோடு இருந்துவிட்டன.

பின்னர் கரும்புலிகள் அணி, தற்கொலைத் தாக்குதல் அணி, கடற் கரும்புலி அணி என்றபோது சற்றுக் கவனிக்கப்படவேண்டிய கட்டத்தை பிரபாகரன் அடைந்துவிட்டதாக எண்ணப்பட்டது. இறுதியில் விமானப்படை என்றதும் எல்லோரும் உசாரடைந்து விட்டார்கள். இதற்கும் மேலாக புலிகள் குறித்து கவலையீனமாக இருந்தால் அது முதலுக்கே மோசமாகிவிடுமென இந்தியா, பிறகு சர்வதேசம், இறுதியில் இலங்கை அரசு என அத்தனை சக்திகளும் வெருண்டு எழுந்து பிரபாகரனுக்கு முடிவுகட்ட களத்தில் குதித்தார்கள்.

பிரபாகரன் எதையும் பரபரப்புக் காட்டாமல் இலங்கை மற்றும் சர்வதேச அரசியல் நகர்வுகளை மிகச்சரியாக கணக்கிட்டு காலத்தை அதற்கேற்றாற்போல் தந்திரமாக நகர்த்தியிருந்தால் பிரபாகரனும், உருவாக்கிய அணிகளும் மேலும் பலமான நிலையில் பாதுகாக்கப்பட்டிருக்கும். பிரபாகரன் விட்டது தவறு என்பதுகூட தமது இருப்பையும், அரசியலையும் வேர் பிடுங்கிவிடும் என்ற அச்சம் பலருக்கு உருவாகி உள்ளது.

சர்வதேசம் பயங்கரவாதியாகப் பார்க்கப்படும்போது தானே தமிழ் மக்களின் தேசியத் தலைவராக திகழ்ந்தார். ஆகவே நாம் செய்வது தவறானபோதும், இனத்தை பாதாளத்துக்குள் தள்ளுவதாக இருந்தபோதும் அதைப்பற்றிய கவலைகளற்று இவர்கள் நடப்பதற்கு அதுவே முன்னுதாரணமாக இருக்கின்றது.

கமரூனின் வருகையை எதிர்பார்த்த அளவுக்கு அவர் எங்கு போகவேண்டும், எவற்றைப் பார்க்கவேண்டும் என்பதை தீர மானிக்க முடியாத கையறுநிலையில் கமரூனின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப வரைந்த கோட்டுக்குள் நின்றதைத் தவிர வேறு எதையும் செய்ய முடிந்திருக்கவில்லை.

சனல்-4 தொலைக்காட்சியின் செய்தியாளரை வன்னிக்கு அழைத்தார்கள். புகையிரதத்தில் வந்து வன்னியை சேர்ந்துவிடுங்கள், மிச்சத்தை நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம். நாங்களே அழைத்துச் செல்வதற்கு முடியாது. எங்களை இந்தப் பொழுதில் கூடுதலாக கண்காணிப்பார்கள் என்று திட்டம் வகுத்தார்கள் அதுவும் அம்பலமாகி பிசுபிசுத்துப் போய்விட்டது.

தமிழகத்து ஊடகவியலாளரை அழைத்துவந்து அவரை நண்பராக கூறியபடி வன்னிக்குள் இரகசிய சுற்றுப்பயணங்களை மேற்கொண்டார்கள். அதுவும் இடை நடுவில் அம்பலத்துக்கு வந்தபோது பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன்தான் அவரை அழைத்துக் கொண்டு திரிந்தார் என்ற செய்தியை மறுக்க முடியவில்லை.

இறுதியாக கனடா நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் அவர்கள் இலங்கை வந்தது. அவரது சொந்த நிகழ்ச்சி நிரலாகவே இருந்தது. அவரை சந்தித்து, “நீங்கள் எதுக்காக வந்திருந்தாலும் தமிழ் மக்கள்மீது கவனம் செலுத்தினால்தானே எங்களை இந்த சிங்கள அரசு பலமானவர்களாக கருதும். நீங்கள் ஒதுங்கிவிட்டால் எப்படி நாங்கள் இங்கே வருகைதரும் வெள்ளைக்காரர்களையே காலில் விழுந்தாவது எம்மை சந்திக்குமாறு கேட்டு சிங்கள அரசுக்கு ஒரு செய்தியை கொடுத்துவிடுகின்றோம். நீங்கள் எங்களுடன் முகம் காட்டா விட்டால் பிறகு யுத்தத்தில் தப்பிய நொண்டி நாயும் எங்களை மதிக்காது” என்று கொடுத்த கயிறை ராதிகாவால் விழுங்காமல் இருக்கமுடியவில்லை.

ராதிகா வலி.வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை பார்வையிட்டார். நல்லூர் கோயிலுக்குப் போனார். மாவிட்டபுரத்தில் இருந்த தனது உறவினர்கள், தெரிந்தவர்களை விசாரித்தார். மூன்றாம் மனிதருக்குத் தெரியாமல் இருந்த ராதிகாவின் நடமாட்டத்தை தலைகீழாக மாற்றும் திட்டம் வன்னியில் சிறீதரனால் தீட்டப்பட்டிருந்தது.

அதற்குள் யாழ்ப்பாணத்திலுள்ள ஊடக திரைக்குள் மறைந்து கொண்டு மாபியா மர்ம மனிதனாக இயங்கிவரும் ஒரு ஊடகவியலாளருக்கு ராதிகா யாழ்ப்பாணத்தில் கூடாரமிட்டிருப்பது தெரியவந்தது. அவர் ஊடகவியலாளராக ராதிகாவைச் சந்தித்தார். அனந்தி எழிலனின் மனைவி, அவர் ஒரு விதவை, அவருக்கு அச்சுறுத்தல் உண்டு, அவர் தமிழ் பெண்களின் தலைவிதியை மாற்றி எழுதப்போகும் பொம்பிளை, பாரதி என்றெல்லாம் ராதிகாவிடம் எடுத்துக்கூறினார். நீங்கள் வேறு எங்கும் போகவேண்டாம். நீங்கள் ஐந்து நிமிடம் ஒதுக்கினால்போதும் அனந்தியை நீங்கள் தங்கியிருக்கும் விடுதிக்கே வரச்செய்யலாம். அழைத்தால் அவர் வருவார் என்றெல்லாம் அனந்திக்காக அந்த ஊடகவியலாளர் அழுத அழுகை சகிக்கமுடியாமல் ராதிகா அதற்கு ஒப்புக்கொண்டார். அனந்தியை சந்தித்தார்.

மேலும் சில மாகாண சபை உறுப்பினர்களும் விடுதிக்கு வருகைதந்து நேரம் கேட்டும் ராதிகா விரும்பவில்லை. சில பாராளுமன்ற உறுப்பினர்களும் ராதிகாவை நெருங்க முற்பட்ட போது, வன்னிக்கு அழைக்கப்பட்டார். ராதிகாவின் வருகையை முன்கூட்டியே தெரிந்து வைத்திருந்தவர் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனாகத்தான் இருக்க முடியும். அவர் திட்டமிட்டு தம்மிடம் மறைத்துவிட்டார் என்று கூட்டமைப்புக்குள் ஒரு புகைச்சல் இப்போதும் உண்டு.

இவற்றிற்கிடையே நோர்வேயில் வசிக்கும் ஜெயபாலன் வருகை தந்ததும் தாயாரின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த முற்பட்டபோது அவர் தமிழ் மக்களின் வீரத்தியாகிய கதையின் முழு உரிமமும் அவருக்கே. அவர் கூட்டமைப்பினரை நாடவில்லை. யாருடைய உள்ளூர் சண்டித்தன பாதுகாப்பை எதிர்பார்க்கவில்லை. அதனால் சும்மா இருந்த ஜெய பாலன் தேசியத் தமிழனாகியதில் கூட்டமைப்புக்கு வருத்தம்தான்.

கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணமெல்லாம் “எங்கள் அப்பன் குதிர்க்குள் இல்லை” என்பதுதான். கூடவே ஆட்களை வைத்துக்கொண்டு இரகசியப்பயணம், நண்பர்களை வரவழைப்பது என்பதெல்லாம் வெளியில் குறிப்பாக பாதுகாப்புத் தரப்புக்குத் தெரியாமல் நடத்திவிட முடியும் என்று நம்புவதை அடி முட்டாள்தனம் என்பதா? அல்லது தாம் செய்யும் இவ்வாறான காரியங்கள் நடைபெறுவது தம்மோடு இருப்பவர்களாலேயே உயர்பீடத்துக்கு போகவேண்டும். அவர்கள் விருந்தினர்களோடு தம்மை இடையூறு செய்யவேண்டும். அதுவே தமது அரசியலுக்கும், புலம்பெயர் புலி ஆதரவாளர்களிடம் அனுதாபமாகவும் எடுபடவேண்டும் என்ற திட்டமா? என்பதும் பார்வையாளர்களுக்குப் புரியவில்லை.

இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்துப்பார்க்கும் ஒரு தரப்பு இலங்கைக்கு வருகைதந்தோர் அதிலும் வடக்குநோக்கிப் பயணித்தோர், அவர்கள் சந்தித்த மனிதர்கள் தொடர்பான விபரங்களை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயத்துடனும், எதிர்காலத்தில் இதுபோன்ற விடயங்களில் தவறு நடந்துவிடாத வண்ணம் கவனிக்கவேண்டிய அவசியத்தையும் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

இனி வன்னிக்குள் மட்டுமல்ல வடக்கு மண்ணில் மக்களையும்; முன்னால் புலி உறுப்பினர்களையும் தர்மசங்கடத்துக்குள் தள்ளிவிட சிலர் கங்கணம் கட்டிக்கொண்டு இறங்கிவிட்டனர். இங்கே அவர்களின் செயற்பாடுகள் அருவருக்கத்தக்கதாக இருந்தாலும் பரவாயில்லை. புலம்பெயர் புலி ஆதரவாளர்கள் மத்தியில் தமிழ்த் தேசியத்தின் காவலனாகவும், சிவில் உடைக்குள் தமிழீழத்தில் நடமாடும் வீரப்புலிப்படையாக அடையாளப்படுத்திக்கொண்டாலே போதும் என்பதுதான் இலக்கு.

மதியூகி
எக்ஸ்ரே ரிப்போர்ட்

# முள்ளிவாய்க்கால் முடிவு



இலட்சியக்காதலனின் தொடர்பைத் தேடிப் பெற்றுக் கொண்டு அவனுடன் தொடர்புகொண்டாள்.

காவியக் காதல்கள் பற்றி புராண இதிகாசங்கள் தோற்றுப் போயிருக்குமென்றுதான் அவளது காதலுக்குத் துணைநின்ற பலர் நினைத்தார்கள்.

மீண்டும் புதுப்பிக்கப்பட்ட காதல் என்றென்றும் வாழும் சாகாதென்ற சத்தியத்தோடு உறவு புதுப்பிக்கப்பட்டது. அவன் வரும்வரை அவள் அவனுக்காகக் காத்திருப்பதாக மீண்டும் சபதமெடுத்தாள். அவனும் அப்படித்தான் அவளுக்குச் சொன்னான்.

2011 வருட ஆரம்பம். புதுப்பிக்கப்பட்ட உறவு மெல்ல மெல்லக் கருகுவது போலிருந்தது அவர்களது காதலுக்குப் பச்சைக் கொடியோடு நின்ற நண்பர்களுக்கு. ஒருநாள் ஒரு வெளிநாட்டுத் தோழி அவளுடன் பேசிய பொழுது அவர்களது காதல்பற்றிக் கேட்டாள் தோழி. அதைப்பற்றி அவள் அக்கறையெடுக்கவில்லை...

என்னை வெளிநாடு எடுக்க முடியுமெண்டா உதவிசெய்தால் நல்லம். உதவ முடியுமா? எனக் கேட்டாள்.

தோழிக்குப் பெரிய குழப்பமாகி விட்டது. இலட்சியக்காதல் இதிகாசக் காதலென்ற தத்துவங்களையெல்லாம் நம்பியிருந்த அவள், பச்சைக் கொடி மட்டுமில்லை அவர்களது திருமணத்திற்கு கட்டாயம் எங்கிருந்தாலும் போக வேண்டுமென்றிருந்தவளுக்கு ஆச்சரியம். அவள் சொன்ன காரணங்களுக்கான தனது தரப்புப் பதில்களைத் தோழி சொன்னாள். எதுவும் எடுபடவில்லை.

தகவல் பல மட்டங்களுக்குப் பரிமாறப்பட்டு இலட்சியக்காதலை வெல்லவைக்கும் பிரயத்தனம் பல பக்கத்தால் நிகழ்ந்தது. எல்லாம் தோற்று கடைசிக் கட்டப் பேச்சுவார்த்தையை சிறையில் இருந்த அவளது காதலனுடன் ஒருவர் நிகழ்த்தினார். முடிவு சுபமாகுமென நம்பிய யாவரின் நம்பிக்கையும் தோல்வியானது.

அவளுக்குப் புதிய வெளிநாட்டு உறவுகள் உதவிகளாகக் கிடைத்தது. அவர்கள் பற்றி அவளது பழைய நட்புகளுக்குப் பெருமையாய்ச் சொன்னாள். ஆபத்தில் அவளுக்காக உதவியவர்களையெல்லாம் அவள் மறந்தாள் போலிருந்தது நிலைமை. உதவுகிறவர்கள் அவளை வெளிநாடு எடுப்பார்கள், அவளுக்கான புதிய நல்வாழ்வைக் கொடுப்பார்கள் என்றெல்லாம் அவள் கனவு காணுகிறாள் என்பதனை மட்டும் புரியமுடிந்தது.

2011 இலத்திரனியல் அச்சு ஊடகங்களில் எல்லாம் அந்தச் செய்தி வந்தது. அது இலட்சியக்காதலனின் விடுதலைச் செய்தி. அந்தச் செய்தியை அவளது நட்புகள் பார்த்த போது உண்மையான காதல் தோற்காதென்று நம்பிக்கையை மீண்டும் வளர்த்தார்கள்.

2011வருட இறுதியாகிவிட்டது. இலட்சியக்காதலன் வெளியில் வந்து 5 மாதங்கள் ஓடிவிட்டது. காதல் புதுப்பிக்கப்படவுமில்லை, முடிவு சுபமாகவுமில்லை. மர்மமானது அந்தக்காதலர்களின் காதல்.

அண்மையில் அந்தக்காதலனின் ஊரவன் ஒருவன் சொன்னான். அவனுக்கு திருமணம் நடக்க உள்ளதாக. பெண் யாரெனத் தோழியொருத்தி கேட்டதற்கு அவன் சொன்ன பெயர் அவன் வரும்வரை காத்திருப்பேன் என்று சொல்லிக் காத்திருந்த காதலியின் பெயரில்லை.

அப்ப அவேடை காதலின்ரை முடிவு முள்ளிவாய்க்கால் முடிவுதானென்றாள் தோழி. அந்த நண்பனுக்குப் புரியவில்லை.

என்னது? முள்ளிவாய்க்கால் முடிவு? முள்ளிவாய்க்காலில என்ன நடந்ததெண்டது ஆருக்கேன் தெரியுமே? இல்ல... அதுதான் இந்தக் காதலின்ரை முடிவு.

நான் கொஞ்சம் ரியூப்லைட், கொஞ்சம் விளக்கமாச் சொன்னால்...? என அவன் இழுத்தான். எட கேணைப்பயலே முள்ளிவாய்க்காலில அப்பிடி நடந்தது, இப்பிடி நடந்தெண்டு ஆளாளுக்கு அலசுறமெல்லே? ஆருக்காவது உண்மை தெரியுமே? தெரியாதெல்லே? முள்ளிவாய்க்கால் முடிவோடை சம்பந்தப்பட்டவையைத் தவிர மற்ற ஒரு குருவிக்கும் ஒரு நாசமும் தெரியாது. அது மாதிரித்தான் நாங்கள் நம்பியிருந்த இந்த இலட்சிய காதல் சோடியைத் தவிர மற்ற ஒருதருக்கும் இலட்சியக் காதல் ஏன் தோற்றதெண்டது தெரியாது. அதுதான் சொன்னன் முள்ளிவாய்க்கால் முடிவு.

(முற்றும்)

# புலிகளின் வதை முகாமில்

## வதை 95

## மணியம்



பலாலி வீதியால் சென்ற இராணுவத்தினரும் பலரைச் சுட்டவண்ணம் சென்றிருக்கின்றனர். அவ்வாறு சுடப்பட்டவர்களில் அரச அதிகாரியான நன்கு பிரபலமான கலா பரமேஸ்வரனும் அவரது மாமனாரும் அடங்குவர்.

பழம் வீதியால் சென்ற இராணுவத்தினர் அரசடி வீதியைக் கடந்து கந்தப் புராண வீதியால் சென்றிருக்கின்றனர். அவர்கள் அவ்வாறு சுட்டுக்கொண்டு சென்றதை பழம் வீதி - அரசடி வீதி சந்திப்பில் குடியிருந்த நில அளவையாளர் என்.தேவராஜன் (இவர் இன்று யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகளுக்காகவும், சமூகத்தில் நீதியை நிலைநாட்டுவதற்காகவும் செயற்பட்டு வரும் சட்டத்தரணி ரெங்கன் அவர்களின் தந்தையார்) பூட்டிய தனது வீட்டுக்கதவுக்கு மேல் இருந்த கிறில் கல்லுக்கூடாக நேரடியாக அவதானித்த வண்ணம் இருந்திருக்கிறார். இந்தச் சம்பவத்தை அவரே என்னிடம் பின்னர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நடந்த நாட்களில் 'மண் சுமந்த மேனியர்' நாடக 'அண்ணாவியார்' (நெறியாளர்) க.சிதம்பரநாதன் தனது துணைவியார் பத்மினியுடன் கந்தப்புராண வீதியில் தெரிந்தவர் ஒருவர் வீட்டின் அறையொன்றில் குடியிருந்து கொண்டிருந்தார். (பத்மினியின் பிறந்தகம் பழம் வீதியில் இருந்தது. ஆரம்பத்தில் அங்குதான் குடியிருந்தனர்) இராணுவம் தமது ஒழுங்கையால் வருவதைக் கண்ட சிதம்பரநாதன் அச்சத்தால் ஓடிச்சென்று மலசல கூடத்துக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக்கொண்டு நின்று கொண்டார்.

ஆனால் இதைக் கண்டு விட்ட இராணுவ வீரன் ஒருவன், துப்பாக்கியை நீட்டிய வண்ணம் அந்த மலசலகூடத்தின் வாசலுக்குச் சென்று நின்றுகொண்டு கதவைத் திறக்கும்படி கூச்சலிட்டான்.

இராணுவத்தினின் ஆக்ரோஷமான குரல் நிச்சயமாக சிதம்பரநாதனை வெடவெடக்க வைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தமது சகாக்கள் 13 பேரை புலிகள் கொலை செய்துவிட்ட நிலையில், ஏனைய இராணுவத்தினரின் அன்றைய மனநிலை எப்படி இருந்திருக்கும் என்பதைச் சொல்லத் தேவை இல்லை. தமது சகாக்களை இழந்தநிலையில் மிகுந்த சினத்துடன் இருக்கும் ஓர் இராணுவச் சிப்பாய் என்ன செய்வான் என்பது சிதம்பரநாதனுக்கும் நன்கு தெரியும். ஏற்கெனவே அந்த இராணுவத்தினர் வழியில் தென்பட்டவர்கள் எல்லோரையும் கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதும் சிதம்பரநாதனுக்குத் தெரியும்.

மலசலகூடத்தின் கதவைத் திறந்தால் நிச்சயமாக வெடிதான். கதவைத் திறக்காவிட்டால், அந்த இராணுவ வீரன் நிச்சயமாகக் கதவை உடைத்துத் திறப்பான். அவனுக்கு உதவியாக இன்னும் பல இராணுவத்தினர் நின்று கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலைமையில் சிதம்பரநாதனின் மனைவி பத்மினி ஓடோடிச்சென்று, அந்த இராணுவ வீரனின் கால்களில் விழாக்குறையாக கெஞ்சி மன்றாடிய பின்னர், அவன் மனம் இரங்கி நீட்டிய துப்பாக்கியை திருப்பிக் கொண்டான். அவனது மனமாற்றத்தால் அன்று சிதம்பரநாதனின் உயிர் காப்பற்றப்பட்டது. இந்தச் சம்பவம் நான் நேரில் கண்டதல்ல. சிதம்பரநாதனே சொல்லித் தெரிந்துகொண்டது. இந்தச் சம்பவத்தோடு ஒப்பிடுகையில், புலிகள் யாரையாவது சுடுவதற்குத் தமது துப்பாக்கியை நீட்டினார்கள் என்றால், அதை ஒருபோதும் திருப்பமாட்டார்கள். ஏனெனில் புலிகள் முன்வைத்த காலைப் பின்வைக்காத கொள்கை வீரர்கள் அல்லவா?)

இந்தச் சம்பவம் சிதம்பரநாதன் இடத்தில் என்ன விதமான தாக்கத்தை உண்டு பண்ணியிருக்கும் என்று என்னால் கூற இயலவில்லை.

ஆனால் இந்தச் சம்பவம் நிகழ்வதற்கு முன்னரே அவர் தமிழ் தேசிய விசுவாசியாக இருந்தார் என்பதை மட்டும் நான் அறிவேன். திருநெல்வேலி தாக்குதல் சம்பவத்தின் எதிர்விளைவாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தலைநகர் கொழும்பிலும், தென்னிலங்கையிலும் வாழ்ந்த தமிழர்கள்மீது இனவன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டதும், அதனால் நூற்றுக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதும், அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டதும் எல்லோரும் அறிந்த சங்கதி. அதை மீண்டுமொருமுறை இங்கு விவரிப்பது எனது நோக்கமல்ல.

இந்த இனவன்செயலின் விளைவாக தமிழ் இளைஞர்களின் பல்வேறு ஆயுதப்போராட்ட இயக்கங்கள் ஆரம்பமாயின. ஆனால் புலிகள் இயக்கம் அதற்குமுன்னரே செயற்பட்டுக் கொண்டிருந்தது. எமது கட்சி தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளுக்காக அரசியல் ரீதியாகப் போராடும் நோக்குடன், 1975ல் 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற வெகுஜன அமைப்பை உருவாக்கி பிரசார வேலைகளை முன்னெடுத்து வந்தது. நாம் எமது முன்னணியை உருவாக்கிய சில மாதங்களில் புலிகள் இயக்கம் உருவாக்கப்பட்டது.

புலிகள் இயக்கத்தை உருவாக்கியவர்கள் முன்னர் தமிழரசுக் கட்சியின் பின்னணியில் உருவாக்கப்பட்ட தமிழ் இளைஞர் பேரவையில் செயற்பட்டவர்களாவர். அவர்கள் மட்டுமின்றி, 1983 இனவன்செயலின் பின்னர் பல்வேறு ஆயுதப் போராட்ட இயக்கங்களை உருவாக்கிய பெரும்பாலோர் தமிழ் இளைஞர் பேரவையில் செயற்பட்டவர்களே. அதனால்தான் அவர்கள் பிற்காலத்திலும், இன்றும் எதிரும் புதிருமான அரசியல் இயக்கங்களாக இருக்கின்றபோதிலும், தமிழ் தேசியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக இருக்கின்றனர். இன்று அநேகமாக எல்லா முன்னாள் ஆயுதப் போராட்ட இயக்கங்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் படிப்படியாகச் சங்கமமாகி வருவதற்கும் இதுதான் அடிப்படைக் காரணமாகும்.

இதில் சிதம்பரநாதன் ஆரம்பத்தில் குறிப்பிட்ட ஓர் இயக்கத்தின் ஆதரவாளராகத் தன்னை இனம் காட்டவில்லை. ஆனால் புலிகள் இயக்கமும் வேறு பல இயக்கங்களும் செயற்படத் தொடங்கியபின்னர், அவர் புலிகள் இயக்கத்தின் விசுவாசியாக மாறிக்கொண்டார்.

இயக்கங்கள் மத்தியில் முற்போக்குத் தேசியம், பிற்போக்குத் தேசியம் என இரு வகையான தேசியப் போக்குகள் குறித்து அந்தக் காலகட்டத்தில் பேசப்பட்டது.

புலிகளைப் பெரும்பாலும் பிற்போக்குத் தேசியவாதிகள் என்றே எல்லோரும் அடையாளப் படுத்தினர். இது ஒரு குழப்பமான வாதமாகும்.

என்னைப் பொறுத்தவரை தேசியவாதம் என்பது ஒன்றுதான் என்று சொல்வேன். ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய இனம் தனது தேசிய உரிமைகளுக்காகப் போராடுவதில் தவறில்லை. அது ஜனநாயகபூர்வமானதாகும். ஆனால் அப்போராட்டம் தேசிய வெறியாகவோ அல்லது தனது இனத்துக்குள் உள்ள ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களின் உரிமைகளை மறுப்பதாகவோ இருந்தால் அது பிற்போக்கானதாகும். அதுதான் தமிழ் தேசியவாதிகளின் போராட்டத்திலும் நடந்தது. அப்போராட்டம் தோல்வியடைந்ததிற்கும், இனிமேலும் தோல்வியடைய இருப்பதற்கும் காரணம் அதுதான்.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம் 84

பா.ராகவன்

**உலகப்** போரை ஒரு சாக்காக வைத்து துருக்கிய ஒட்டாமான்களின் மீது தாக்குதல் நடத்தி, பாலஸ்தீனைக் கைப்பற்றிய பிரிட்டன், அங்கே முதல் முதலில் மேற்கொண்ட பணி என்னவெனில், ஜெருசலேத்தை ஆராய்வது.

யூத, கிருத்தவ, இஸ்லாமியர்களின் ஜெருசலேம். புனித நகரம், புண்ணிய நகரம் என்கிற பிம்பங்களுக்கு அப்பாலும் – பார்க்கும்போதே பரவசம் ஏற்படுத்தக்கூடிய ஜெருசலேம். இந்த ஒரு நகருக்காகத்தானே இத்தனை கலாட்டாக்கள் என்று சற்றே வியப்புற்றார் பிரிட்டிஷ் படைகளின் தளபதி ஜெனரல் அலன்பே. ஆயினும் உடனே சுதாகரித்துக்கொண்டு, ஜெருசலேம் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பிராந்தியங்களிலும் வசிக்கும் மக்களை முழுவதுமாக பிரிட்டிஷ் பேரரசின் விசுவாசக் குடிமக்களாக மாற்றும் முயற்சியில் இறங்கினார்.

அவர் மேற்கொண்ட முதல் நடவடிக்கை, உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பது. யுத்த காலத்தில் ஏற்பட்ட பஞ்சம், யுத்தம் முடிவதற்கு முன்னதாகவே மறையும் விதத்தில் எகிப்திலிருந்து தேவையான உணவுப் பொருட்களை ஜெருசலேத்துக்கு வரவழைக்க ஏற்பாடு செய்தார். க்யூவில் நிற்காமல், முட்டி மோதாமல், அடிதடிக்கு ஆட்படாமல், கேட்கிற அனைவருக்கும் கேட்கிற அளவு உணவுப் பொருள்தரப்படவேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்தது பிரிட்டிஷ் படை.

அதேமாதிரி, தைபோய்ட், கொலரா போன்ற நோய்க்கிருமிகள் அப்போது பாலஸ்தீன் முழுவதும் நீக்கமறப் பரவியிருந்தன. ஏராளமான மக்கள் இந்த நோய்களால் பீடிக்கப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்கள், தடையின்றிக் கிடைக்க பாலஸ்தீனுக்கும் லண்டனுக்கும் சிறப்பு விமான சேர்வீஸ்கள் இயக்கப்பட்டன.

மூன்றாவது காரியம், ஊழல் ஒழிப்பு. அன்றைய பாலஸ்தீனில் கொலராவைக்காட்டிலும் மோசமான கிருமியாகப் பரவியிருந்தது ஊழல். பெரும்பாலும் நீதிமன்றங்களில்தான் இது ஆரம்பித்தது. மிகக் குன்றந்த சம்பளத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த நீதிபதிகள், தீர்ப்பு வழங்குவதற்குமுன்னால் வெளியே பேரம்பேசுவதென்பது சர்வசாதாரணமாக இருந்தது. இதனைக் கவனித்த பிரிட்டன், அதிகாரத்தைக் கையில் எடுத்த உடனேயே பாலஸ்தீன் முழுவதிலும் இயங்கிய நீதிமன்றங்களில் பணியாற்றும் நீதிபதிகளுக்கும் இதர ஊழியர்களுக்கும் அவர்களே நம்ப முடியாத அளவுக்கு சம்பளத்தை உயர்த்தியது. சம்பளத்தை உயர்த்துவதன்மூலம் இலஞ்சத்தைத் தடுக்கலாம் என்பது பிரிட்டனின் கணக்கு. அது ஓரளவுக்கு உபயோகமாகவும் இருந்தது என்பதைச் சொல்லிவிடவேண்டும். பெரும்பாலும் நிலப்பிரச்சினை காரணமாகவே எழுந்த வழக்குகளில் அதற்குப் பிறகு ஓரளவு நியாயமான தீர்ப்புக்கள் வெளிவரத் தொடங்கின.

இதெல்லாம் நடக்க ஆரம்பிக்கும்போதே முதல் உலகப் போர் ஒரு மாதிரி முடிவுக்கு வந்துவிட்டிருந்தது. அடித்துக்கொண்டது போதும் என்று வெர்ஸெயில்ஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு எல்லா தேசங்களும் அவரவருக்கான இலாபங்களுடன் ஊரைப் பார்க்கப் போய்விட்டன. இதில் பிரிட்டனுக்குக் கிடைத்த மிகப் பெரிய இலாபம், பாலஸ்தீன்.

'- பாலஸ்தீனின் ஆட்சி அதிகாரம் பிரிட்டனைச் சேர்ந்தது என்று வெல்ஸெயில்ஸ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. 1919 ஆம் ஆண்டு தேசங்களின் கூட்டமைப்பு (League



ஹெர்பேர்ட் சாமுவேல்



> யூதர்களை வாழவைப்பது ஒன்றே நோக்கம். இதன்பின்னால் பல்லாயிரக்கணக்கான அராபியர்களின் வாழ்க்கையே கேள்விக் குறியாகிறதே என்பது பற்றி பிரிட்டனுக்கு எந்த அக்கறையும் இல்லை. "மனிதர்கள் வீடுகளில் வசிக்கட்டும், நாய்கள் வீதிகளில் சுற்றட்டும்" என்று ஒரு பிரிட்டன் இராணுவ அதிகாரி சொன்னாராம்!
>
> அரேபிய முஸ்லிம்கள் மீது பிரிட்டன் அன்று காட்டிய வெறுப்புக்குக் காரணம் எதுவுமே இல்லை என்பதுதான் விசித்திரம்.

of Nations – ஐ.நா. உருவாவதற்கு முந்தைய கூட்டமைப்பு) ஹெர்பேர்ட் சாமுவேல் என்கிற ஓர் ஓய்வுபெற்ற பிரிட்டிஷ் போஸ்ட் மாஸ்டர் ஜெனரலை பாலஸ்தீனுக்கான தனது ஹை – கமிஷனராக நியமித்து அனுப்பிவைத்தது. இந்த ஹெர்பேர்ட் சாமுவேல் சாதாரணமான மனிதர் அல்லர். போல்∴பர் பிரகடனத்தை வடிவமைத்தவர்களுள் ஒருவர்.

வெளியுறவுச் செயலாளர் போல்∴பரின் பெயரால் அது அழைக்கப்பட்டாலும் அந்த நான்கு வரிப் பிரகடனத்துக்குள்ளே என்னென்ன இருக்கவேண்டும், ஒவ்வொரு விஷயத்தையும் எப்படி வெளிப்படுத்த வேண்டும் என்பதைத் தீர்மானித்த மூளைகளுள் ஒன்று.

எல்லாம் நினைத்தபடியே நடக்கின்ற சந்தோஷத்தில் பிரிட்டன் ஒரு சுற்றுப் பெருத்திருந்தது. பாலஸ்தீனத்து அராபியர்கள்தான் நடுரோட்டுக்கு வந்துவிட்டிருந்தார்கள். ஒரு பக்கம் பிரிட்டன், போல்பர் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் பணியில் யூதர்கள் பாலஸ்தீனை நோக்கி தினசரி ஆயிரக்கணக்கில் வந்து குவிந்துகொண்டிருந்தார்கள். ஏற்கெனவே யூத நிலவங்கி வாங்கிப் போட்டிருந்த இடங்களில் அவர்கள் தமக்கான குடியிருப்புக்களை ஏற்படுத்தத் தொடங்கியிருந்தார்கள். அதுதவிர, புதிதாகவும் –நேரடியாகவும் நிலங்கள் வாங்கி, வீடுகட்டிக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

விசா பிரச்சினைகள் கிடையாது. விசாரணைகள் கிடையாது. எதுவும் கிடையாது. யூதரா?, வாருங்கள் பாலஸ்தீனுக்கு என்று கதவை அகலமாகத் திறந்து வைத்துவிட்டது பிரிட்டன். விசாவே இல்லாத யூதர்கள் கூட அப்போது ஆயிரக்கணக்கில் பாலஸ்தீனுக்கு வந்துசேரமுடிந்தது.

இதெப்படி என்று வியப்பாக இருக்கலாம். ஒரு உதாரணம் காட்டினால் புரியும். பல்வேறு ஐரோப்பிய தேசங்களிலிருந்து எப்படியாவது கட்டை வண்டி பிடித்தாவது பாலஸ்தீன் எல்லைக்கு வந்துவிடுங்கள். அப்படி வந்து சேருபவர்கள் யூதர்கள்தானா என்று மட்டும் பார்ப்பார்கள். எல்லாம் சரியாக இருக்கிறது என்று தெரிந்ததும் ஒரேயொரு ஏஜெண்ட் உடன்வருவார். அவரிடம் ஒரு விசா மட்டும் இருக்கும். எல்லையில் உள்ள செக்போஸ்டில் அந்த ஒரு விசாவைக் காட்டிவிட்டு பத்து டிக்கெட்களை உள்ளே அழைத்துக்கொண்டு போய்விடுவார்.

எல்லையைக் கடந்து அவர்கள் போனதும் ஏஜெண்ட் திரும்பவும் எல்லைக்கு வந்து மீண்டும் அதே ஒரு விசாவைக் காட்டி இன்னும் பத்துப்பேரை அழைத்துப் போய்விடுவார். இப்படி ஆயிரக்கணக்கான ஏஜெண்ட்டுகள், பல்லாயிரக்கணக்கான யூதர்கள்!

வளைப்பதற்கு சௌகரியமான வீதிகளையே வைத்திருந்தார்கள். யூதர்களை வாழவைப்பது ஒன்றே நோக்கம். இதன்பின்னால் பல்லாயிரக்கணக்கான அராபியர்களின் வாழ்க்கையே கேள்விக்குறியாகிறதே என்பது பற்றி பிரிட்டனுக்கு எந்த அக்கறையும் இல்லை. "மனிதர்கள் வீடுகளில் வசிக்கட்டும், நாய்கள் வீதிகளில் சுற்றட்டும்" என்று ஒரு பிரிட்டன் இராணுவ அதிகாரி சொன்னாராம்!

அரேபிய முஸ்லிம்கள்மீது பிரிட்டன் அன்று காட்டிய வெறுப்புக்குக் காரணம் எதுவுமே இல்லை என்பதுதான் விசித்திரம். யூதர்களை சந்தோஷப்படுத்தவேண்டும் என்கிற ஒரே காரணத்துக்காக இப்படியொரு காரியத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள்.

(தொடரும்...)

# திருமண வாழ்வில் நுழையும் முன்...

**அவ்விதம்** ஒரு பெண்ணை ஆடவனுக்கு மணம் முடித்துக் கொடுப்பின் அவன் அவனுக்கு மனைவியாக இருக்கமாட்டாள், அவனுடைய எதிரியாகவே இருப்பாள். இருவரும் ஒருவரையொருவர் வெறுத்து ஒதுங்குவர். எனவே இருவரும் கீரியும் பாம்பும் போன்று வாழ்க்கை நடத்துவர்.

வெளியில் அலுவலாற்றி இல்லம் மீள்வதே கணவனுக்கு நரகத்தில் நுழைவதுபோன்ற உணர்வை உண்டு பண்ணும். எனவே அவன் வேறுதவறான இடங்களில் நுழைய எண்ணுவான். மனைவிக்கும் அவன் வீட்டிற்குள் நுழைவது தன்னுடைய அமைதியைக் குலைக்கவரும் யமன் நுழைவது போன்ற உணர்வை ஏற்படுத்தும். எனவேதான் "உன் கணவன் வருகிறான் என்னும் தொனிகேட்டு இன்புறாத ஒரு பெண்ணின் நிலைமை இழிவுடையது" என்று அறிஞர் ஒருவர் கூறுகிறார். ஆதலின் மனமொத்த திருமணமே இன்பத்திருமணமாகும். மனவொவ்வாத திருமணம் திருமணமேயன்றி வேறில்லை.

எனவேதான் ஷேக்ஸ்பியரும் "கட்டாயத் திருமணம் நரகமேயன்றி வேறென்ன? விரோதத் துடையவும் ஒழியாச் சண்டையுடையவும் காலம் அது. அதற்கு மாறானது இன்பத்தைக் கொணர்கின்றது. வானுலக அமைதியின் முன் மாதிரியாக அது உள்ளது" என்று முழங்கியுள்ளார்.

இறுதியாக ஒரு சிறு மொழி. திருமணம் முடிப்பதில் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்மென்று கருதி அளவுக்கதிகமான எச்சரிக்கையை மேற்கொள்ளவும் கூடாது. டசின் கணக்காகப் பெண்ணைப் பார்த்து "இவள் வேண்டாம், அவள் வேண்டாம்" என்று ஒவ்வொருவருக்கும் ஏதாவது குறையொன்றைக் கூறி அவர்களை இழிவாக ஒதுக்கித் தள்ளி விடவும் கூடாது.


நமக்கு ஒரு பெண் பிடிக்காவிட்டால், "பின்னர் பார்த்துக் கொள்வோம்" என்று வாய்மூடி இருந்துவிட வேண்டுமேயன்றி அவளைப்பற்றி குறைகூறிப் பிறஆடவர்களும் அவளை மணம் முடிக்க அணுகாமல் செய்துவிடக்கூடாது. அவ்விதம் செய்வது பாவங்களிளெல்லாம் பெரும்பாவம் ஆகும்.

பெண் என்று இருந்தால் அவளுக்கேற்ற கணவன் ஒருவன் பிறந்தே இருப்பான். ஆதலின் ஒரு பெண் தனக்குப் பிடிக்காமல் இருப்பாள் என்றால் பிறருக்கும் பிடிக்காமல் இருப்பாள் என்று எண்ணிக்கொள்ள வேண்டாம்.

தனக்கு அந்தப் பெண் வேண்டாம், இந்தப் பெண் வேண்டாம் என்று இழித்துரைத்து நல்ல பெண்ணைத் தேடித் திரிந்து பலர் எந்தப் பெண்ணுடையதோ, பெண்ணைப் பெற்றவர்களுடையதோ சாபத்திற்கிலக்காகி அழகற்ற, அறிவற்ற முட்டாள்களை மணம் முடித்து அவதியுறுவதையும் நான் கண்ணுடுள்ளேன்.

தன்னுடைய மகளுக்குத் தகுந்த வரன் கிடைக்கவேண்டுமென்று அதிகமாக அங்கும் இங்கும் அலைந்து திரிந்து அளவற்ற எச்சரிக்கையுடன் செயலாற்றிய பலர் பின்னர், "ஏன் இவனுக்கு நம் பெண்ணை மணம் முடித்தோம்" என்று வருந்தி நிற்பதையும் அறிவோம். ஆதலின் இளைஞர்கள், "தாரமும் குருவும் தலைவிதிப்படியே" என்பதையுணர்ந்து கழுத்தில் சுருக்கிடுவதும் மனைவியின் கரத்தைப் பிடிப்பதும் விதியின் பலனேயன்றி வேறில்லை என்னும் ஷேக்ஸ்பியரின் கூற்றையும் கூர்ந்து எல்லாவற்றிலும் நிதானமாக நடக்கவேண்டும்.

திருமணம் செய்துகொள்வதற்கு முன்யோசி... யோசி... சரியாக யோசி. திருமணம் செய்தபின் நேசி... நேசி... மனைவியை நேசி. உன் வாழ்வு சிறக்கும்.



சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்

(முற்றும்)




# தலைநகர் மோகமும் மலையகத்தின் எதிர்காலமும்!

**நாட்டின்** பொருளாதாரத்தில் பிரதான பங்குவகிப்பது பெருந்தோட்டத் தொழில் துறையென்றால் அது மிகையாகாது. அந்த தொழில் துறையானது தற்போது சவாலுக்குள்ளாகி வருவதை காணமுடிகிறது. தோட்டங்கள் காடாகிவருவதும், தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறி நகர்ப்புறங்களுக்கு வேலைக்குச் செல்வதும் இவ்வாறான சவால்களுக்கு காரணம் எனலாம்.

தென்னிந்தியாவிலிருந்து பெருந்தோட்டப் பயிர் செய்கைக்கென அழைத்துவரப்பட்ட மக்கள் காடுகளை அழித்து பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கினர். ஆனால் அந்தத் தோட்டங்கள் இன்று முறையான கவனிப்பின்றி காடாகிவருகின்றது.

ஒரு சில தோட்டங்கள் காடாகி மூடப்பட்டுள்ளன. மேலும் சில தோட்டங்கள் காடாகிவருகின்றன. அத்தோடு பல தோட்டங்களில் வாரத்துக்கு இரண்டு மூன்று நாட்களில்தான் வேலை கொடுக்கப்படுகிறது. இதனால் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள இளைஞர், யுவதிகள் வேலை தேடி தலைநகர் உள்ளிட்ட புறநகர்ப் பகுதிகளுக்கு படையெடுக்கின்றனர்.

பெருந்தோட்டங்களில் போதிய வருமானம் இன்மை, நவீன யுகத்திற்கேற்ப தொழிற்துறையில் மாற்றமின்மை மற்றும் தலைநகர் மோகம் போன்ற காரணிகள் இவற்றில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அரச பெருந்தோட்ட யாக்கத்தின் கீழ் இருந்த தோட்டங்கள் தனியார் கம்பனிகளிடம் கையளிக்கப்பட்டதையடுத்து அவற்றில் சில தோட்டங்கள் இவ்வாறான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளன.

மலையக பெருந்தோட்ட புறங்களில் விவசாயத்துக்கு பயன்படுத்தப்படாத சுமார் 38 ஆயிரம் ஹெக்டெயர் தரிசு நிலங்கள் அடையாளம் காணப்பட்டதாக கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அரசாங்கம் அறிவித்திருந்தது. அத்தோடு அந்த நிலத்தை அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்றவகையிலான கருத்துக்களும் பரவலாக காணப்பட்டது.

பெருந்தோட்ட பகுதியில் காணப்படுகின்ற இவ்வாறான காணிகள் பெருந்தோட்டத் துறையினருக்கே வழங்கப்படவேண்டும் என்ற கருத்து பரவலாக முன்வைக்கப்பட்டன.

அதேபோன்று கடந்த மத்திய மாகாண சபைத் தேர்தல் சமயத்தில் மலையகத் தமிழ் கட்சிகளின் தேர்தல் மேடைகளில் தோன்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பெருந்தோட்ட மக்களின் காணிப் பிரச்சினை தீர்க்கப்பட்டு அவர்களுக்கு தனி வீடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அதேபோன்று இவ்வாண்டின் வரவு செலவுத் திட்டத்திலும் பெருந்தோட்ட மக்களின் குடியிருப்புக்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த வீட்டுத் திட்டமானது மாடி வீட்டுத் திட்டத்தின் அடிப்படையிலேயே அமையவுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே அரசாங்கம் இதன்மூலம் மலையக தமிழ் பிரதேசங்களின் சனப் பரம்பலை திட்டமிட்டு குறைப்பதற்கு வழிவகுப்பதாகவே தென்படுகிறது. அதற்கேற்றாற்போல் பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளும் தலைநகர் நோக்கி படையெடுக்கின்றனர். இதுவும் அரசாங்கத்துக்கு சாதகமாக அமையும் நிலைமையே காணப்படுகின்றது.

மலையகத்தில் 38 ஆயிரம் தரிசு நிலங்கள் காணப்படுவதாக கூறும் அரசாங்கம் ஏன் அந்த நிலப்பரப்பில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தனித்தனி வீடுகளை அமைத்துக் கொடுக்கக்கூடாது. எனவே இத்திட்டத்தில் நிச்சயமாக நீண்டகால அடிப்படையிலான உள்நோக்கம் இருக்கவேண்டும்.

50 ஆயிரம் பேருக்கு மாடிவீட்டுத் திட்டத்தில் குடியிருப்புக்களை வழங்குவதாயின் அடையாளம் காணப்பட்டுள்ளதாகக்கூறப்படும் தரிசு நிலங்களை அரசு யாருக்கு பகிர்ந்து அளிக்கப் போகிறது என்ற கேள்வி எழுகின்றது.

பெருந்தோட்டங்களில் உள்ள இளைஞர், யுவதிகள் தலைநகரை நோக்கி படையெடுப்பதால் பெருந்தோட்ட தொழில் துறைக்கு தொழிலாளர் பற்றாக்குறை ஏற்படுவதுடன் தொழில் துறையும் கேள்விக்குள்ளாகியுள்ளது.

எனவே இதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் அரசு மிகவும் சூட்சுமமாக மலையகத்தின் தமிழ் சனப்பரம்பலை குறைக்க நடவடிக்கை எடுக்கலாம். அதன் ஒரு ஆரம்பக் கட்டமாகவே இந்த மாடிவீட்டுத் திட்டத்தை முன்வைத்திருக்க வேண்டும்.

மலையகத்தின் இளைஞர், யுவதிகள் தமது கல்வித் தகைமைகளுக்கு ஏற்ற தொழில்வாய்ப்புகளை தேடி நகர்ப் புறங்களுக்குச் சென்று முன்னேற்றமடைவது வரவேற்கத் தக்க விடயம். அதேவேளை மலையகத்திலிருந்து வெளியேறி நகர்ப் புறங்களில் நிரந்தரமற்ற தற்காலிக கூலி வேலைசெய்துபின்னர் தோட்டங்களுக்குத் திரும்பி அங்கும் நிரந்தர வேலையில்லாமல் நிர்க்கதி நிலைக்குச் சென்று விடக்கூடாது.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சிங்களவர்களை குடியேற்றி தமிழ் பரம்பலை குறைக்கும் வழிமுறைகளை அரசு மிகவும் சூட்சுமமாக மேற்கொண்டு வருகிறது. அதனை தமிழ் தலைவர்கள் நன்கு அவதானித்து செயற்படவேண்டும் வடக்கு - கிழக்கில் மாத்திரமல்லாமல் மலையகத்திலும் அதன் தாக்கம் காணப்படுகிறது.

மறைந்த காமினி திசநாயக்க அமைச்சராக இருந்த காலத்தில் மகாவலித் திட்டத்தை அறிமுகப்படுத்தி அதனை தமிழ் பகுதிகளூடாக ஊடுவித்து அனுப்பி அப்பகுதி மக்களை வேறு இடங்களுக்கு மாற்றி சனப் பரம்பலை மிகவும் சூட்சுமமாக மாற்றினார். ஆனால் அதைவிட மோசமாக இந்த அரசாங்கம் மேற்கொண்டுவருகிறது.

மலையகத்தவர்கள் இந்த உள்ளார்ந்தத்தை சரியாக விளங்கிக் கொள்ளாமல் தலைநகர் மோகத்தில் மலையகத்தைவிட்டு வெளியேறிவருவதால் மலையகத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. எனவே இவற்றை உணர்ந்து மலையகத் தலைவர்கள் மலையகத்தில் புதிய தொழில் வாய்ப்புக்களையும் அல்லது இருக்கின்ற தொழிற்துறைகளில் நவீன மாற்றங்களை ஏற்படுத்தி தொழில்வாய்ப்புக்களை அதிகரிக்கவேண்டும். அதன்மூலமே மலையகத்தைக் காப்பாற்றமுடியும்.

# பதுங்கி இருந்துவிட்டு வருந்துவதால் பயனில்லை!

**ஒவ்வொரு** மனிதனுக்கும் உரிமைகள் மிகவும் முக்கியமானவையாகும். ஒருவரின் அல்லது ஒரு சமூகத்தின் உரிமைகள் உரியவாறு வழங்கப்படாது புறந்தள்ளப்படுவதன் காரணமாக முரண்பாட்டுச் சூழ்நிலைகள் மேலோங்குகின்றன. இதன் பாதக விளைவுகள் பல்வேறு மட்டங்களிலும் எதிரொலிக்கும் என்பதையும் மறுப்பதற்கில்லை. இந்தவகையில் மலையக மக்களின் பல்வேறு உரிமைகள் ஏட்டளவிலேயே முற்றுப் பெற்றுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மொழியுரிமை குறித்து நோக்குகையில் இலங்கையில் தமிழ் மொழி அரச கரும மொழியாக உள்ளது. எனினும் தமிழுக்கு உரிய இடம் வழங்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டியுள்ளது.

அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களில் இருந்துவரும் சுற்று நிருபங்கள் மற்றும் கடிதங்கள் என்பன பெரும்பாலும் தனிச்சிங்கள மொழியிலேயே அனுப்பப்பட்டு வருகின்றமை புதிய விடயமல்ல. பல அரச அலுவலகங்களில் தொடர்பாடல் உத்தியோகத்தர் இல்லாதுள்ளனர். இதனால் பொதுமக்கள் குறிப்பாக தமிழ் மக்கள் கருமமாற்றுவதில் சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். பல இடங்களில் பெயர்ப் பலகைகள் தனிச்சிங்கள மொழியிலேயே காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் தமிழ் அரச கரும மொழிதானா? ஏன்ற சந்தேகம் எழுகிறது. மலையக மக்களின் கல்வி உரிமைகள் கூட எந்தளவுக்கு நியாயமாக கிடைக்கின்றது என்பதில் ஐயப்பாடுகள் மேலெழுந்து வருகின்றன.

வளங்கள் பங்கீடு மற்றும் நிதிப்பங்கீடு தொடர்பில் பாரபட்சம் காட்டப்பட்டு வருகின்றமையை அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. வள மற்றும் நிதி பங்கீடுகளின் நியாயமற்ற பகிர்வு முறை காரணமாக மலையக தமிழ் பாடசாலைகள் பின்னடைவு காணும் அபாயத்தை எதிர் நோக்கிவருகின்றன.

இலங்கையில் பல பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றன. எனினும் மலையக மாணவர்களுக்கென்று தனியான ஒரு பல்கலைகழகம் இல்லாதது பெரும் குறையாக உள்ளது. இக்குறை உடன்டியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது மலையகப் புத்திஜீவிகளின் கருத்தாக நெடுநாட்களாக இருந்து வருகின்றது. இவ்வாறான புறக்கணிப்பு நிலைமை தொடருமானால் மலையகக் கல்வியின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

மலையக அரசியல் தொழிற்சங்கங்கள் மலையகத்தின் கல்வி உரிமைகள் மீறப்படுவது குறித்து தெரிந்திருந்தும் வாய்மூடி மௌனியாக இருப்பது வருந்தத்தக்க விடயமாகும். இதனை கருத்திற்கொண்டு மலையக கல்வி அபிவிருத்திக்கு காத்திரமான பங்களிப்பை வழங்க அரசியல் தொழிற் சங்கவாதிகள் முன்வர வேண்டும் உரிமைகள் பறிபோகும்போது தட்டிக் கேட்காமல் வெறுமனே இருந்துவிட்டு பின்னர் வருந்துவதால் பயனில்லை.

## தேயிலை ராச்சசி

நீல மலைகள் வெட்டி
நிறைய நாள் பதியம் வைத்து
கானு பொத்தி வாய்பொத்தி
கண்ணுக்குள் வளர்ந்தவளே அடீ
சிங்கார சிறுக்கி நீ வித்தாரக் கள்ளி நீ
கேடு கெட்ட பாதகியே! தேயிலை ராச்சசியே

சின்னக்காளை பெரியக்காளை
மச்சக்காளை மருதுக்காளை
கண்டி மலைப்பொட்டிலிலே
காடழித்து மேடழித்து
புல்லுவெட்டி மண்ணுவெட்டி
முள்ளுக்குத்தி உரம்போட்டு
இரத்தம் சிந்த வேர்வை சிந்த
கண்டு கண்டு வளர்ந்தவளே
கூனி அடிச்சு வைச்ச கூட்டுக்குள்
சமைத்தவளே கேடு கெட்ட பாதகியே
தேயிலை ராச்சசியே

கண்டி சீமையிலே கண்காணா தேசத்திலே
பொன்னுண்டு பொருளுண்டு
தேயிலை செடிக்கடியில்
தேங்காயும் மாசியுமாயுமாய்
தெகட்டாத் தேட்டமுண்டு
என்னென்டு போய்ப்பார்த்த
என்னண்ணன் என்னானான்
என்னப்பன் எங்கு சென்றான்
என் தாயைகாணலியே
கேடு கெட்ட பாதகியே
தேயிலை ராச்சசியே

முப்பாட்டன் முதுகொடித்தாய்
என் பாட்டன் எலும்பொடித்தாய்
என் பாட்டியின் உயிரைக்கூட
பஞ்சத்தால் பறித்தெடுத்தாய்

என் முன்னோரை எதற்காக
வஞ்சித்து வரவழைத்தாய்
முக்கால் காசுக்கு முழு பரம்பரையை கூசாமல்
அடகுவைத்தாய் கோடி லயத்தருகே
இருளில் விழித்திருக்கும் ரோதமுனி பிசாசே
கேடு கெட்ட பாதகியே தேயிலை ராச்சசியே

என் ஆத்தாவின் தளிர்கரத்தை
அஞ்சு மணி கடுங்குளிரில்
பெய்த பனி மழையில் விறைத்த விறகாக
கொழுந்தெடுக்க வைத்தவளே
அட்டைக்கடி நடுவில் பாம்பு புற்றருகில்
ஆய்ந்த அரும்புகளை நாலுமணி மடுவத்தில்
நான் நிறுக்க வந்தபோது நாருகாம்பொடித்தாய்
நாலிழையை ஏன் பறித்தாய்
வங்கியிலை கொய்தாய் என
என் நாள் பெயரை மறுத்தானே
நாசமாய் போனவளே கேடு கெட்ட பாதகியே
தேயிலை ராச்சசியே

கட்டபுள்ள கறுத்தபுள்ள
கண்டாங்கி போட்ட புள்ள
சாயச்சேலை மடிச்சுக்கட்டி
ஒற்றக்கட ரோட்டுமேல
ஓடிச்சென்று நேரகுடிச்சி
மச்சான் மனம் வருந்த
சிட்டாய் கொழுந்தெடுத்து
கட்டுடல் தேய்ந்தாளே
கருகித்தான் போனாளே
இத்தனை பார்த்த பின்பும்
உன் இதயம் இளகலையே
கேடு கெட்ட பாதகியே
தேயிலை ராச்சசியே

பிரஜா உரிமை என்ற
பித்தலாட்ட சட்டம் கொண்டு
இந்தியாவா இலங்கையா
ஒங்கப்பன் பொறந்த நாடு
ஒங்க ஆயி வளர்ந்த நாடு
பாட்டனுக்குரிய நாடு என்று
பலவாறு கேட்ட கேள்வி
பஞ்சம் பொழைக்க வந்த
எங்கள் பாதையை மறித்ததடி
பத்துத்திரு தசாப்தங்கள்
எம்மைப் பாடாய்ப்படுத்துதடி
கேடு கெட்ட பாதகியே
தேயிலை ராச்சசியே

எங்கள் இரத்தத்தை அட்டை கொண்டு
உறிஞ்ச வைத்தாய் எங்கள் வியர்வையை
ஆறாய் பெருகவைத்தாய்
என் அண்ணன்களைப் பலியெடுத்தாய்
என் ஆத்தாவின் உயிர் குடித்தாய்
எங்கள் எட்டு பரம்பரையை
எதற்காக சீரழித்தாய்
இதற்கு மேலும் உன்னை
இப்படியே விட்டு வைத்தால்
அடுத்த பரம்பரைக்கு
ஆர்தான் பதில் சொல்வார்
எடுத்து வாருங்கள் உங்கள்
கவ்வாத்து கத்திகளை
தூக்கி வாருங்கள் உங்கள்
அலவாங்கு ஈட்டிகளை
வெட்டியெறியுங்கள் இக்
கேடு கெட்ட பாதகியை
வேரறுத்து வீசுங்கள் இந்த
தேயிலை ராச்சசியை.

இரா. சடகோபன்

# அமெரிக்காவின் அக்கிரமங்களும் நவீன உலகமும்

**தொகுப்பு: வேணு கிருஷ்ணா**



**அமெரிக்காவின்** ஏகாதிபத்திய அரசியல், வணிக, இராணுவ நலன்கள் எல்லாம் ஒன்றிணைகின்றன.

அமெரிக்காவின் ஆயுத வணிகம் ரொம்பச் சிக்கலானது. பிற உற்பத்திப் பொருட்களின் வணிகத்தை ஒத்ததல்ல இது. முன்னாள் குடியரசுத் தலைவர் ஐசனோவர் இதனை Military Industrial Congre ssional Complex என்றார். அதாவது இராணுவம், தொழிற்துறை மற்றும் பாராளுமன்றம் (அரசியல்) ஆகியவற்றின் சிக்கலான ஒருங்கிணைவு. எனவே இதில் அமெரிக்காவின் ஏகாதிபத்திய அரசியல் நலன்கள் ஆயுத உற்பத்தி கார்ப்பரேட்களின் வணிக நலன்கள், இராணுவ நலன்கள் எல்லாம் ஒன்றிணைகின்றன.

அமெரிக்க ஆயுத உற்பத்தியாளர்கள் இரண்டு வழிகளில் ஆயுத விற்பனை செய்கின்றனர். முதலாவது அயல் இராணுவ விற்பனைகள் - அமெரிக்க இராணுவ கேந்திரமான பென்டகன் ஊடாக இரு அரசுகளுக்கிடையே நேரடியாக பேரம்பேசி விற்கப்படுவது இது. மற்றது நேரடி வர்த்தக விற்பனைகள். இதில் ஆயுத கார்ப்பரேட்டுகள் நேரடியாக நாடுகளுடன் பேரம்பேசி உரிமம் பெற்று விற்பது. இந்த பேரத்தில் ஏராளமான ஊழல்களுக்கு இடமுண்டு.

இதுதவிர, அமெரிக்க அரசு தனது இராணுவ ஆயுதக் கிடங்குகளிலிருந்து மிகக்குறைந்த விலையிலும், சமயங்களில் இலவசமாகவும் தனக்குவேண்டிய நாடுகளுக்கு கொடுப்பதும் உண்டு. தேவைக்கு அதிகமான பாதுகாப்புப் பொருட்களாக ஒதுக்கப்பட்டவை என இதற்கு பெயர். இதுதவிர பிறநாட்டு இராணுவங்களுக்கு பயிற்சிகள் அளிப்பது பிறநாடுகளுடன் சேர்ந்து கூட்டுப்பயிற்சி எடுப்பது என்பதெல்லாம் இன்று அதிகமாகியுள்ளதை நாம் அறிவோம். செப்டம்பர் 11, 2001க்கு பிறகு இவை இன்னும் அதிகமாகியுள்ளன.

உலகளவில் மிகப்பெரிய ஆயுத விற்பனை கார்ப்பரேட்டுகள் என லாக்ஹீட் மார்டின், பி.ஏ.ஈ சிஸ்டம்ஸ், போயிங், ரேய்தியான், நார்த்ராப் க்ரும்மன், ஜெனரல் டைனமிக்ஸ், தாம்சன் சி.எஸ்.எ∴ப் ஆகிய ஏழு நிறுவனங்களைச் சொல்லுகிறார்கள். இவற்றில் முதல் ஆறும் அமெரிக்க நிறுவனங்கள். ஏழாவது மட்டுமே பிரான்சு உடையது.

## 'சிறு ஆயுத விற்பனை' பற்றியும் நாம் கொஞ்சம் அறிந்து கொள்ளவேண்டும்

காவல்துறையினர், துணை இராணுவத்தினர் மற்றும் இராணுவத்தினரும்கூட அதிகம் பயன்படுத்தும் ஆயுதங்களான கைத்துப்பாக்கிகள் (பிஸ்டல்கள்) ∴ரைபில்கள், இயந்திரத் துப்பாக்கிகள், தாக்குதல் ரைப்பில்கள், எறிகுண்டு வீசிகள் எடுத்துச்செல்லக்கூடிய டாங்கி மற்றும் விமானங்களைச் சுடும் பீரங்கிகள் முதலியவை பெரியளவில் சீனா, ரஷ்யா மற்றும் அமெரிக்காவில் உற்பத்திசெய்து விற்கப்படுகின்றன. இவற்றை ரொம்பவும் விலை மலிவாகவும், எளிதாகவும் யாரும் வாங்கக்கூடிய நிலை இன்று உள்ளது. அரசுகள் மட்டுமின்றி போராளிக் குழுக்கள், மா∴பியா கும்பல்கள், கடற்கொள்ளையர்கள், கடத்தல்காரர்கள், போதை மருந்து விற்பனையாளர்கள் எல்லோரும் இத்தகைய ஆயுதங்களை வாங்கிக் குவிக்கின்றனர்.

உலகம் என்பது இன்று மிகப்பெரிய போர்களின் களமாக உள்ளது. 36 நாடுகளில் நடைபெறும் 40 ஆயுதப் போராட்டங்களுடன் 21ம் நூற்றாண்டு விடிந்தது. (2000யில் வெளியிட்ட கணக்கு) சிவில் யுத்தம் (உள்நாட்டுப் போர்) நடைபெறும் பல நாடுகளில் போரே வாழ்வாக மாறியுள்ளது. இலங்கைத் தமிழர்கள் பட்ட துயரங்களைப் அறிவோம். உள்நாட்டுப் போர் என்பது உன்னத அரசியல் இலட்சியங்களுக்காக மட்டுமின்றி, நிதி சேகரிப்பதற்காக, போரால் கல்வி இழந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்காக என்றெல்லாம் போருக்குப் பன்முகப் பரிமாணங்கள் உள்ளதைப் புரிந்துகொள்ள வேண்டும். காஷ்மீர் முதலிய பகுதிகளில் குழந்தைகள் முதலில் அறிந்துகொள்ளும் பொருட்களில், தெரிந்துகொள்ளும் மொழிகளில் பல வகைத் துப்பாக்கிகள், கண்ணிவெடிகள் ஆகியன அடங்கும். இத்தகைய சூழலில் திருட்டு ஆயுத வணிகம் பல்கிப் பெருகியுள்ளதை விளக்க வேண்டியதில்லை. உலகில் மிகப் பெரியளவில் இன்றுகள்ள ஆயுத வணிகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பயங்கரவாதம் பற்றி இன்று வாய்கிழியும் அமெரிக்கா ஏகப்பட்ட பயங்கரவாதக் குழுக்களுக்குப் பயிற்சி அளித்து ஆயுதம் வழங்கிய கதைகளை நாம் அறியலாம். அமெரிக்கப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒசாமா பின்லேடன்கூட இப்படி வளர்க்கப்பட்டவர்தான். சோவியத் யூனியனை ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற்றுவதற்காக ஒசாமா உள்ளிட்ட முஜாஹிதீன்களை உருவாக்கியது அமெரிக்கா. நாடுகளுக்கிடையே சோதனை இல்லாமல் பெரியளவில் இவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. 1985ல் இத்தகைய ஆப்கன் முஜாஹிதீன்களை வெள்ளை மாளிகையில் வைத்துப் பத்திரிகையாளர்களுக்கு அறிமுகப்படுத்திய அன்றைய அமெரிக்க குடியரசுத் தலைவர் ரொனால் ரீகன், அமெரிக்காவை உருவாக்கிய நமது தந்தையர்களுக்கு ஒப்பானவர்கள் இவர்கள் எனக்கூறியது குறிப்பிடத்தக்கது.

இன்று இன்னொரு நாட்டு எல்லைக்குள், அந்நாட்டின் அனுமதியின்றி நுழைந்து ஒசாமாவையும், கூட இருந்தவர்களில் சிலரையும் சுட்டுக்கொன்று ஒசாமாவின் உடலைக் கடலில் தூக்கிவீசி எறிந்திருக்கிறது அமெரிக்கா. ஒசாமாவை உயிருடன் பிடித்தபின் சுட்டதாகச் செய்தி ஒன்று தொலைக்காட்சியில் ஓடிக் கொண்டிருந்தது. ஒருவரை ஒருவர் உதாரணம் காட்டித் தத்தம் கொடுமைகளையும் சிவிலியன்களுக்கு (பொதுமக்களுக்கு) எதிரான தாக்குதல்களையும் நியாயப்படுத்தி கொள்வதற்கு இன்னொரு பெயர்தான் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்.

1989முதல் 1998க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் ஆபிரிக்க இராணுவத்திற்கு ஆயுதம் மற்றும் பயிற்சிகள் அளித்தவகையில் மட்டும் அமெரிக்கா 227 மில்லியன் டொலர்களைச் செலவிட்டுள்ளது. பயனடைந்த நாடுகளில் பல உள்நாட்டு மக்களைக் கொன்று குவித்தவை. அவற்றில் சில கொங்கோ, அங்கோலா, புருண்டி, ருவாண்டா, சூடான், உகண்டா மற்றும் சிம்பாப்வே.

இவை தவிர இந்தோனேசியா, இஸ்ரேல், தாய்வான், இந்தியா, பாகிஸ்தான் முதலான நாடுகளுக்கும் அமெரிக்கா, பிரான்சு, பிரிட்டன், ரஷ்யா, இத்தாலி முதலிய நாடுகள் ஆயுதங்களை விற்றுள்ளன. இந்த நாடுகள் அனைத்தும் உள்நாட்டு பயங்கரவாத எதிர்ப்பு என்கிற பெயரில் உள்நாட்டுப் போராளிகள், சிறுபான்மை மொழி மற்றும் இனத்தினர், மதத்தினர், பழங்குடியினர் ஆகியோரின்மீது ஆயுதத்தாக்குதலை நடத்திய, நடத்துகிற நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயுத விற்பனை செழிப்பதற்கு போர்கள் அவசியம். போர்களற்ற அமைதியான உலகை ஆயுத விற்பனையாளர்களால் சகித்துக் கொள்ள இயலாது. பல நாட்டு இராணுவங்களுக்கும் ஆயுதப் போராட்டக் குழுக்களுக்கும் இத்தகைய பயிற்சி அளிப்பதில் இந்தப் பின்னணியும் சேர்ந்துகொள்கிறது. சிம்பாப்வே மற்றும் நமீபியாவில் அரசு படைகளுக்கும், ருவாண்டா மற்றும் உகண்டாவில் ஆயுதப் போராட்டக் குழுக்களுக்கும் அமெரிக்க அரசு பயிற்சி அளித்தது. சட்டபூர்வமான ஆயுத விற்பனை தவிர சட்டபூர்வமற்ற இந்த ஆயுத உதவி மற்றும் விற்பனை புள்ளிவிவரங்களில் அடங்காது. ஜனநாயக நடைமுறைகளைப் பின்பற்றாத நாடுகள் மனித உரிமை மீறல்கள் புரிகிற நாடுகள் ஆகியவற்றிற்கு ஆயுத உதவிகளை செய்யக்கூடாது என அமெரிக்க வெளிநாட்டு உதவிச் சட்டம் மற்றும் (1999ம் ஆண்டு அமெரிக்க சர்வதேச ஆயுத விற்பனை நடத்தை விதி ஆகியன வரைமுறைகளை விதித்துள்ளதாம்) இவை அனைத்தும் ஏட்டோடு சரி. துருக்கி, இந்தோனேசியா, சவூதி உட்பட மனித உரிமை மீறல்கள் புரிந்த பல நாடுகளுக்கு அமெரிக்கா மட்டுமின்றி இந்தியாவும் இது குறித்து எந்தக் கவலையுமின்றி உதவிகளை செய்துவந்துள்ளன.

இன்னொன்றும் நம் கவனத்திற்குரியது. மிகப்பெரிய அளவு ஊழல்கள் நடைபெறும் துறையாகவும் ஆயுத விற்பனை உள்ளது. இத்துடன் இணைந்த தேசப் பாதுகாப்பு மற்றும் இராணுவ இரகசியம் முதலான சொல்லாடல்கள் ஊழலை ஊற்றி வளர்க்கின்றன. மிகப்பெரிய அளவில் குவட்ரோஷி போன்ற இடைத்தரகர்கள் (போபர்ஸ் ஊழல்) இதில் இலாபம் குவிக்கின்றனர். கார்ப்பரேட்கள் நேரடியாகக் களத்தில் இறங்கி யுத்தபீதியை ஏற்படுத்திப் பரப்புவது முடிவெடுக்கும் இடத்தில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் இராணுவ சிவில் உயரதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுப்பது, எதிரி நாட்டு இராணுவ முன்னேற்பாடுகள் குறித்துப் பொய்யான தகவல்களை பரப்பி போட்டியை ஊக்குவிப்பது, உள்நாட்டு ஊடகங்களுக்கு லஞ்சம் கொடுத்து போருக்கு ஆதரவான கருத்துகளை உருவாக்குவது, கார்ப்பரேட்டுகளுக்கிடையே இரகசிய கூட்டுகளை உருவாக்கி ஆயுதங்களின் விலையை அபரிமிதமாக உயர்த்துவது முதலியன ஆயுத விற்பனையை அதிகரிக்க கார்ப்பரேட்டுகள் மேற்கொள்ளும் உத்திகள்.

இது ஏகாதிபத்திய விரிவாக்க அரசியலுடன் தொடர்புடைய விஷயமாக இருப்பதால் கார்ப்பரேட்டுகளுக்கு மிகப்பெரிய அளவில் மானியங்களை அரசுகள் வழங்குகின்றன. ஆயுத விற்பனை தொடர்பான பன்னாட்டு ஒப்பந்தங்கள் எல்லாவற்றிலும் விதிக்கப்படுகிற நிபந்தனைகள் தேசியப் பாதுகாப்பு என வருகிறபோது பொருந்தாது என்கிற பிரிவு சேர்க்கப்படுவது வழக்கமாக உள்ளது.

2001 செப்டம்பர் 11க்குப் பிறகு அமெரிக்கா பிறநாடுகளுக்கு ஆயுத விற்பனைசெய்வது மற்றும் ஆயுத உதவிகளைச் செய்வது வரலாறு காணாதவகையில் அதிகரித்துள்ளதாக வாஷிங்டனில் உள்ள பாதுகாப்பு தகவல் மையம் கூறியது. மிகப்பெரிய பட்டியல் ஒன்றை இதற்கு ஆதாரமாக வெளியிட்டுள்ள இந்நிறுவனம் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் அமெரிக்காவுக்கு உதவுவதாக வாக்களித்துள்ள நாடுகளுக்கு வேறெப்போதையும்விட அதிகளவில் ஆயுத விற்பனை செய்ய அமெரிக்கா தயாராக உள்ளது எனக் கூறுகிறது. மனித உரிமை மீறல்கள் முதலான அடிப்படையில் ஆயுத விற்பனைக்கு தடைசெய்யப்பட்ட நாடுகளின் பட்டியலையும் அமெரிக்கா பெரிதும் திருத்தி அமைத்துள்ளதாகவும் இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. 2002, பெப்ரவரி, 4ஆம் திகதி இதற்கான திருத்தங்கள் செய்யப்பட்டன. பயங்கரவாதத்திற்கெதிரான போரில் உதவி செய்த நாடுகளுக்கு இவை இது தொடர்பாக செய்த செலவுகளை ஈடுகட்ட 390 மில்லியன் டொலர்களையும் வேறுசில குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்காக 120 மில்லியன் டொலர்களையும் பிற சட்டவிதிகளின் தடையை மீறி அளிக்க பாதுகாப்பு துறைக்கு ஒப்புதலையும் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை அளித்துள்ளது.

திருட்டுத்தனமாக ஆயுதங்களை உள்நாட்டு பயங்கரவாதக் குழுக்களுக்கு அளித்து அதன்மூலம் மூன்றாம் உலக நாட்டு இடதுசாரி அரசுகளைக் கவிழ்க்கும் முயற்சிகளிலும் இந்நாடுகள் ஈடுபடுவதற்கு புருலியா விவகாரம் தற்போதைய நடைமுறைச் சாட்சியாக உள்ளது. மேற்குவங்க இடதுசாரி அரசை கவிழ்ப்பதற்கு நரசிம்மராவ் அரசு துணைபோகியுள்ளதும் இன்று அம்பலத்திற்கு வந்துள்ளது. ஆம்னஸ்டி இன்டர்நேஷனல் அக்ஸ்டாம் இன்டர்நேஷனல் சிறு ஆயுதவிற்பனை தொடர்பான சர்வதேச வலைப்பின்னல் முதலான அமைப்புகள் ஆயுத விற்பனைக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதற்கான பன்னாட்டு ஆயுத விற்பனை ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் உள்ளன. இதற்கு மிகப்பெரிய தடையாக உள்ளது அமெரிக்கா. புஷ் அமெரிக்க குடியரசுத் தலைவராக இருந்தவரை இது தொடர்பான பேச்சுவார்த்தைகளிலே கலந்து கொள்ள மறுத்துவிட்டார். ஒபாமா ஆட்சிக்கு வந்தபின் மாறியுள்ள சூழல்களின் விளைவாக வேறு வழியின்றி சென்ற 2009 ஒக்டோபர் 15 இல் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் அமெரிக்கா கலந்துகொண்டது.

எனினும், அமெரிக்கா சார்பாக கலந்து கொண்ட ஹிலாரி கிளின்டன் இது தொடர்பான எந்த முடிவும் அனைத்து நாடுகளின் ஒப்புதலுடனேயே நடைமுறைபடுத்தப்பட வேண்டும் என்கிற பிரிவை மேற்குறித்த ஒப்பந்தத்தில் சேர்க்கவேண்டும் எனப் பேசினார். அதாவது எந்த ஒரு நாடாவது மறுப்பு தெரித்தால் அந்த முடிவு நடைமுறைக்கு வராது. இது உள்ளிருந்து கெடுக்கும் வேலை எனப் பல நாடுகள் பேசியதன் விளைவாக இறுதியாக ஹிலாரி இதை வற்புறுத்தவில்லை. 2012க்குள் இத்தகைய ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க முயற்சித்தனர். இதற்கென 2010 ஜுலையில் ஒரு தயாரிப்புக் கூட்டமும் நடத்தப்பட்டது. அமெரிக்க ஆயுத விற்பனை கார்ப்பரேட்டுகள் இதற்கெதிராக பெரிய பிரசார இயக்கம் ஒன்றையும் நடத்தினர். ஆயுதங்கள் குற்றச்சம்பவங்களுக்கு பயன்படுத்தப்படுமானால் அந்த நாடுகளுக்கு ஆயுதங்களை விற்கக்கூடாது என நிபந்தனை விதித்தால் அது அமெரிக்காவின் இரண்டாம் அரசியல் சட்டத்திற்கு எதிராக இருக்கும். யாராவது ஒருவர் ஒரு துப்பாக்கியை குற்றச் செயலுக்கு பயன்படுத்தினால் அந்த நாடே அதற்கு பொறுப்பு. இது தற்காப்புக்காக ஆயுதம் வைத்திருக்கும் உரிமையை பறிக்கும் எனவும் ஆயுதப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் தொலைகாட்சி தொடர்கள் தடைசெய்யப்படுதல் என்பது பேச்சுரிமை மற்றும் கருத்துரிமைக்கு எதிராக இருக்கும் எனவும்கூறி இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்கா கையெழுத்திடக் கூடாது என இவர்கள் இயக்கம் நடத்தி வந்தனர்.

ஒன்றை நாம் புரிந்துகொள்ளவேண்டும். உலகளவில் பல மூன்றாம் உலக நாடுகள் ஏழ்மையிலும், பஞ்சத்திலும், கடனிலும் அமிழ்த்தப்படுவதற்கு ஆயுத விற்பனையே காரணம். ஆயுத விற்பனைச் சந்தையாக இன்று மூன்றாம் உலக நாடுகளே உள்ளன.

## பொம்மை ஆட்சிகளை உருவாக்குவது தொடர்கிறது

அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது உலக மேலாதிக்கத்திற்காக தனக்கு அடங்க மறுக்கும் ஒடுக்கப்பட்ட நாடுகள்மீது ஆக்கிரமிப்புப் போர்களை நடத்தி பொம்மை ஆட்சிகளை உருவாக்குவது தொடர்கிறது. தனது நட்புநாடான பிரிட்டன் மற்றும் கூட்டாளிகளான நேட்டோ நாடுகளுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு அத்தகைய கொடிய யுத்தங்களை அமெரிக்கா நடத்திவருகிறது.

'பயங்கரவாதத்தை ஒழிப்பது', 'பேரழிவு ஆயுதங்களை அழிப்பது' எனும்பேரால் ஆப்கானிலும், ஈராக்கிலும் பொம்மை ஆட்சிகளை நிறுவிக் கொண்டது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது நட்புநாடுகளான ஏமன், எகிப்து, லிபியா போன்ற நாடுகளிலும்கூட அம்மக்களின் எழுச்சியைப் பயன்படுத்திக்கொண்டு, 'மனித உரிமைப் பாதுகாப்பு', 'சர்வாதிகார எதிர்ப்பு' என்றபேரால் தொண்டு நிறுவனங்களின் உதவியோடு ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்தி தனது அடிவருடிகளைக் கொண்டு பொம்மை ஆட்சிகளை நிறுவிக்கொண்டது.

ஈரான் மற்றும் வடகொரியாவின் மீது அணு ஆயுதப் பூச்சாண்டிகாட்டியது. தடைகளை விதித்தது. உலகை ஆயிரம் முறை அழிக்கவல்ல அணு ஆயுதங்களைக் குவித்துவைத்துள்ள அமெரிக்கா 'அணு ஆயுத ஒழிப்பு' என்று பேசுவது ஒரு மோசடியேயாகும்.

வடகொரியாவிற்கு எதிரான அமெரிக்காவின் தற்போதைய அணுயுத்த அச்சுறுத்தல் என்பது, வடகொரியாவில் பொம்மை ஆட்சியை உருவாக்குவது. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை நிறுவுவது. சீனாவை சமநிலையில் வைப்பது ஆகிய நோக்கங்களைக் கொண்டதாகும்.

## எண்ணெய் வளங்களைக் கைப்பற்றுதல்

புஷ் தொடங்கிவைத்த 'பயங்கரவாதத்துக்கு எதிரான போரை' ஒபாமாவும் தொடர்ந்து நடத்திவருகிறார். 2001 ஒக்டோபரில் ஆப்கானிஸ்தான், 2003 மார்ச்சு ஈராக், 2011 லிபியா என மூன்று நாடுகள்மீது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான நேட்டோ படைகள், படையெடுத்தன. அந்நாடுகளில் இருந்த ஆட்சிகளை ஒழித்துக்கட்டின. அதனால் இம்மூன்று நாடுகளும் ரணகளமாகிவிட்டன. புஷ்ஷால் பிடிக்கமுடியாத ஒசாமா பின்லேடனை பராக் ஒபாமா கொன்று வஞ்சம் தீர்த்துக்கொண்டார்.

கடாபி 1969 செப்டம்பரில் மன்னராட்சியை வீழ்த்தி லிபியாவின் அதிபரானார். அதுமுதல் 2011 ஓகஸ்ட் வரை - 42 ஆண்டுகள் கடாபி லிபியாவின் ஆட்சித் தலைவராக இருந்தார்.

1980களில் கடாபி, ஒரு அமெரிக்க வானூர்தியையும் ஒரு பிரான்சு நாட்டின் வானூர்தியையும் சுட்டு வீழ்த் தினார். இதில் 400க்கும் மேற்பட்டோர் மாண்டனர். நண்டு கொழுத்தால் வளையில் தங்காது என்புது போன்ற கடாபியின் இச்செயலால், அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய முதலாளிய நாடுகளும் லிபியா மீது பொருளாதார - அரசியல் தடைகளை விதித்தன. எனவே மேலைநாடுகளின் ஊடகங்கள், கடாபி, ஒரு கொடுங்கோலன், கொலைகாரன், உலக அமைதிக்கு எதிரி, மக்கள் பகைவன் என்றெல்லாம் உலகம் முழுவதும் பரப்புரை செய்தன.

# புத்தாண்டுப் பலன்கள் 2014

## இப்படி இருக்கிறது

## பொதுப்பலன்

எப்போதும் ஆங்கிலப் புதுவருடம் ஜனவரி 1ஆம் திகதி கன்னியா லக்கினத்தில் உதயமாகும். நட்சத்திரம், கிழமை, கிரக நிலைகள் மட்டும் மாறுபடும். 2014ஆம் ஆண்டின் கூட்டு எண்- 7. இது கேதுவின் எண்- மூல நட்சத்திரத்தில் பிறப்பதால், அதுவும் கேதுவின் நட்சத்திரம்- வருடம் பிறப்பது கேது திசை இருப்பில். எல்லாம் கேதுமயம் என்பதால், இந்த 2014 விநாய-கரின் அருள்கடாட்சத்தோடு பிறக்கிறது. அசுவினி, மகம், மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் ஜாதகரீதியாக நடப்பு கேது திசை, கேது புத்தி நடப்பவர்களுக்கும் 2014 புதுவருடம் இதமான வருடமாக இனிய வருடமாகத் திகழும்.

1-1-2014 என திகதி, மாதம், வருடம் எல்லாவற்றையும் கூட்டினால் 9 வரும். இது செவ்வாயின் எண். புதுவருடம் கன்னியா லக்கினத்தில் பிறக்கிறது. லக்கினத்தில் செவ்வாய் இருக்கிறார். செவ்வாயின் ராசியான மேஷத்தில் தசாநாதன் கேது வருட எண் நாயகன் இருக்கிறார். அந்தக் கேதுவையும் செவ்வாய் 8ஆம் பார்வை பார்க்கிறார்.

2014 தனுசு ராசியில் பிறக்கிறது. அதன் அதிபதி குரு ராசிக்கு 7இல். லக்கினத்துக்கு 10இல் இருக்கிறார். ராசியையும் பார்க்கிறார் லக்கினாதிபதி புதனையும் பார்க்கிறார்.

ஆகவே, மிதுன ராசி- மிதுன லக்கினம், கன்னி ராசி- கன்னி லக்கினம், தனுசு ராசி- தனுசு லக்கினம் ஆகியவற்றில் பிறந்தோருக்கெல்லாம் 2014 மிகச் சிறந்த வருடமாகவும் யோகமான வருடமாகவும் அமையும். அவரவர் ஜாதகத்தில் என்ன தசாபுத்திகள் நடந்தாலும் சரி - எந்த ராசி, லக்கினத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் சரி- மேலே குறிப்பிட்ட நட்சத்திரத்திலும் ராசி- லக்கினத்திலும் பிறந்தவர்களுக்கு 2014 அற்புதமான வருடமாகவும் அதிர்ஷ்டம் நிறைந்த வருடமாகவும் அமையும் என்பதில் ஐயப்பாடு இல்லை.



### சிம்மம்

**உணர்வுபூர்வமாக யோசித்து அறிவுபூர்வமாக செயற்படுபவர்களே!** இந்தப் புத்தாண்டு உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் பிறப்பதால் சட்டென்று வசதி, வாய்ப்புகள் அதிகரிக்கும். மனதில் புதிய திட்டங்கள் உருவாகும். அதை செயற்படுத்தவும் துவங்கிவிடுவீர்கள். உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டில் புதன் நிற்கும்போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் வி.ஐ.பிகளின் தொடர்பு கிடைக்கும். பழைய உறவினர், நண்பர்கள் உங்களைத் தேடிவருவார்கள்.

மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனின் அலட்சியப் போக்கு மாறும். வருடப்பிறப்பு முதல் ஜுன் 12ஆம் திகதி வரை குரு உங்கள் ராசிக்கு இலாப வீட்டில் அமர்ந் திருப்பதால் திடீரென்று செல்வம்சேரும். செல்வச்சேர்க்கை மட்டுமல்லாது செல்வாக்கும் கூடும். வரவேண்டிய பணம் கைக்கு வரும். புதிய பதவிகள் தேடிவரும். திருமண- ...கி பல வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தவர்கள் மழலை பாக்கியம் கிட்டும்.

கல்யாணப் பேச்சுவார்த்தை நல்லபடியாக முடியும். வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். ஆனால், 13.6.2014 முதல் வருடம் முடியும்வரை குரு உங் கள் ராசிக்கு 12ம் வீட்டில் மறைவதால் வீண் செலவு-களால் சேமிப்புகள் கரையும். யாருக்காகவும் சாட்சி கையொப்பமிடவேண்டாம்.

20.6.2014 வரை உங்கள் ராசிக்கு 9ல் கேது நிற்பதால் தந்தையாரின் உடல்நிலை மீது அக்கறையோடு இருங்கள். சாதாரண விஷயமாக இருக்குமென்று நினைத்து அலட் சியமாக இருக்காதீர்கள். ஆனால், 3ம் வீட்டில் ராகு இருப்பதால் எதையும் சாதிக்கலாம் என்கிற துணிவு பிறக்கும். இதனால் எந்த முடிவு எடுத்தாலும் அதில் திட்டவட்டமாக இருப்பீர்கள். இளைய சகோதரவகையில் உதவிகள் உண்டு.

ஜுன் 21ஆம் திகதி முதல் வருடம் முடியும்வரை ராசிக்கு 2ல் ராகுவும், 8ம் வீட்டில் கேதுவும் தொடர்வதால் மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். பேசிக்கொண்டே இருக்கும்போது கோபப்படாதீர்கள். யாரிடமும் கடுமை காட்டாது பொறுமை யாக பதில் சொல்லுங்கள். அநாவசியமாக மற்றவர்கள் விவகாரத்தில் தலையிடவேண்டாம். வீண்பழிக்கு ...ளாவீர்கள். இந்தாண்டு முழுக்க சனி 3ம் வீட்டிலேயே நிற்பதால் பெரிய பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். இதுவரை முடங்கியிருந்தவர்கள் சுறுசுறுப்பாவார்கள். புதுத் தொழிலில் ஈடுபட விரும்புபவர்கள் தாராளமாக ஈடுபடலாம்.

சிலர் வெளிநாட்டிற்குச் சென்றுவருவீர்கள். சபைகளில் முதல் மரியாதை கிடைக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வருடத்தின் இறுதியில் 18.12.2014 முதல் 4ல் சனி அமர்ந்து அர்த்தாஷ்டமச் சனி யாகவும் வருவதால் தாயாரின் உடல்நிலையில் அக்கறை காட்டுங்கள்.

**வியாபாரிகளே!** போட்டிகள் கடுமையாக இருந்தாலும் வியாபாரம் செழிக்கும். வேலையாட்கள் அனுகூலமாக இருப்பார்கள்.

**உத்தியோகத்தர்களே!** எதிர்காலம் கருதி நீங்கள் சொல்லும் கருத்துக்களை அலுவலகத்திலுள்ளோர் ஏற்றுக்கொள்வார்கள். இதனால் மேலதிகாரிகளின் பாராட்டுக்களும் கிடைக்கும். பதவி உயரும். வேறு நல்ல நிறுவனத்திலிருந்தும் புது வாய்ப்புகள் வரும்.

**கன்னிப்பெண்களே!** காதல் இனிக்கும். கல்யாணம் கூடி வரும். தாயாரை தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். புதிய வேலைக்கான நேர்முகத்தேர்வில் வெற்றி பெறுவீர்கள். அயல்நாடு செல்லும் வாய்ப்பும் வரும்.

**மாணவர்களே!** படிப்பில் முன்பைவிட நல்ல முன்னேற்றம் உண்டு. எதிர்பார்த்த கல்விப்பிரிவில் சேருவீர்கள். சகதோழர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும்.

**அரசியல்வாதிகளே!** வெற்றுப்பேச்சை தவிர்த்துவிட்டு மக்களிடம் நேரடியாக சென்று குறைகேட்பீர்கள்.

**கலைத்துறையினரே!** உங்களின் கலைத்திறன் வளரும். பாராட்டுக்களைப் பெறுவீர்கள். இந்த 2014ஆம் ஆண்டு கனவு நிறைவேறுவதோடு மட்டுமல்லாமல் நிம்மதியையும் அளிக்கும்விதமாக அமையும்.



### கன்னி

**நல்லதோ அல்லதோ முடிவெடுத்துவிட்டால் முன்வைத்த காலை பின்வைக்காமல் முடித்துக்காட்டும் வல்லவர்களே!** உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் இதுவரை தள்ளிப்போயிருந்த காரியங்கள் யாவும் ஒவ்வொன்றாக நிறைவேறத் தொடங்கும். பிரபலங்களின் பட்டியலில் இடம்பிடிப்பீர்கள்.

வருடப்பிறப்பின்போது செவ்வாய் உங்கள் ராசிக்குள் நிற்பதால் குடும்பத்தினரோடு வீண் வாக்குவாதங்கள் வரக் கூடும். வேகமாக சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். இந்தப் புத்தாண்டு பிறக்கும்போது சுக்கிரன் உங்கள் பூர்வபுண்ணிய ஸ்தானமான 5ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் குழந்தைகளினால் பெருமைபெறுவீர்கள்.

2.6.2014 வரை குரு உங்கள் ராசிக்கு 10ஆம் வீட்டில் நிற்பதால் பணியிடத்தில் வேலை நெருக்கடியால் அவதிப் படுவீர்கள். மறைமுக எதிரிகளால் அவமானம் வந்து நீங்கும். அதனால், சகஊழியர்களிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள். 13.6.2014 முதல் வருடம் முடியும்வரை குரு 11ம் வீடான இலாப வீட்டில் அமர்வதால் வெளிவட்டாரத்தில் உங்களின் செல்வாக்கு பெருகும்.

உங்களின் இரசனைக்கேற்ப வீடு, வாகனம் அமையும். புதுச்சொத்து வாங்குவீர்கள். அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். கணவன்-மனைவிக்குள் எலியும், பூனை யுமாக இருந்த நிலை மாறி நகமும் சதையுமாக இணைவீர்கள். குழந்தை இல்லையே எனக் கோயில் கோயிலாக சுற்றியதற்கு இறைவன் குழந்தை பாக்கியத்தை அளிப்பார். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர் கல்வி, உத்தியோகம் அமையும்.

தாயாரின் உடல்நிலை ஆரோக்கியமாக இருக்கும். வெகுநாட்களாக தள்ளிப்போய்க் கொண்டிருந்த புண்ணிய தலங்களுக்குச் சென்றுவருவீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். 20.6.2014 வரை உங்கள் ராசிக்கு 2ல் ராகுவும், 8ம் வீட்டில் கேதுவும் நிற்பதால் அலட்சியகுணம் மேலோங்கியிருக்கும்.

21.6.2014 முதல் வருடம் முடியும்வரை உங்கள் ராசிக் குள் ராகுவும், 7ல் கேதுவும் தொடர்வதால் எந்தக் காரியம் செய்தாலும் படபடப்புடன் செய்வீர்கள். அதனால் பொறுமை-யோடு இருப்பது நல்லது. வருடத்தின் இறுதியில் 17.12.2014 வரை சனி 2இல் அமர்ந்து ஏழரைச் சனியில் பாதச் சனி யாக இருப்பதால் மருத்துவச் செலவுகள் அவ்வப்போது வந்துபோகும்.

கண் பார்வையை பரிசோதித்துக்கொள்ளுங்கள். எல்லா விஷயங்களையும் எல்லோரிடமும் சொல்லிக்கொண்டிருக்கா தீர்கள். வருடத்தின் இறுதியில் 18.12.2014 முதல் 3ம் வீட்டில் அமர்வதால் சோர்ந்திருந்த நீங்கள் புத்துயிர் பெறுவீர்கள். உங்களை ஏளனமாக்ப் பேசியவர்களெல்லாம் வலிய வந்து நட்பு பாராட்டுவார்கள். உங்களின் உழைப்பை பயன்படுத்தி வேறு சிலர் முன்னேறுவார்கள்.

**வியாபாரிகளே!** யாருக்கும் பெரியளவில் கடன் கொடுக்கவேண்டாம். பற்று, வரவு கணிசமாக உயரும்.

**உத்தியோகத்தர்களே!** ஜுன் 12ஆம் திகதி வரை வேலைச் சுமை வாட்டும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை சோதிப்பார்கள். 13ஆம் திகதி முதல் மேலதிகாரிகளின் பாராட்டுதல்கள் கிடைக்கும். எதிர்பார்த்த சம்பள உயர்வு, பதவி உயர்வு தடையின்றி கிடைக்கும்.

**கன்னிப்பெண்களே!** காதல் குழப்பங்கள் நீங்கும். உயர்கல்வியில் கவனம் செலுத்துங்கள். பெற்றோரை தவறாக புரிந்துகொள்ள வேண்டாம். கல்யாணம் கூடிவரும்.

**மாணவர்களே!** சிலர் விடுதியில் தங்கிப் படிக்கவேண்டியது வரும். சகமாணவர்கள் மத்தியில் பாராட்டப்படுவீர்கள். கட் டுரை, பேச்சுப் போட்டிகளில் பதக்கம் வெல்வீர்கள்.

**அரசியல்வாதிகளே!** தொகுதி நிலவரங்களை உடனுக்கு டன் மேலிடத்திற்கு தகவல்களாகத் தருவது நல்லது. இந்த 2014ம் ஆண்டின் முற்பகுதி பயத்தை தந்தாலும், பிற்பகுதி அனுசரித்துப் போவதன்மூலம் சாதிக்கவும் வைக்கும்.



### துலாம்

**வனத்தில் மேய்ந்தாலும் இனத்தில் வந்துசேரவேண்டும் என்ற பழமொழியை அறிந்து செயற்படுபவர்களே!** உங்களின் பாக்கியாதிபதியான புதன் சாதகமான நட்சத்திரத்தில் நிற்கும்போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் சாதுரியமாகச் செயற்பட்டு கடுமை யான தருணங்களை வெற்றிகொள்வீர்கள். அதிகாரப் பதவி யில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

புதுப்பதவிகளும், பொறுப்புகளும் தேடிவரும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். உங்கள் ராசிக்கு 3ம் வீட்டில் சந்திரன் நிற்கும்போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எங்கு என்ன பேசவேண்டுமோ அதை சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்பற்றாக்குறை தீரும்.

12.6.2014 வரை குரு உங்கள் ராசிக்கு 9ம் வீட்டில் நீடிப்பதால் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். விலை உயர்ந்த உங்கள் ஆலோசனையை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். எதிரிகள் நண்பர்களாவார்கள்.

ஆனால், 13.6.2014 முதல் வருடம் முடியும்வரை குரு 10ம் வீட்டில் அமர்வதால் சிறுசிறு அவமானம், ஏமாற்றம் வந்து நீங்கும். பழைய பிரச்சினைகளை சும்மா கிளறிக் கொண்டிருக்காதீர்கள். சிக்கல்கள் அதிகமாகும்.

சட்டத்திற்கு புறம்பான வகையில் யாருக்கும் உதவ வேண்டாம். உங்கள்மீது சிலர் வீண்பழி சுமத்த முயற்சிப் பார்கள். ஜுன் 20ஆம் திகதி வரை ராசிக்கு 7ல் கேதுவும், உங்கள் ராசிக்குள்ளேயே ராகுவும் நிற்பதால் ஆரோக்கியம் பாதிக்கும்.

21.6.2014 முதல் வருடம் முடியும்வரை உங்கள் ராசியை விட்டு ராகு விலகி 12ம் வீட்டிலும், கேது 6ம் வீட்டிலும் தொடர்வதால் மனப்போராட்டங்கள் ஓயும். கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். இந்தாண்டு முழுக்க சனி உங்கள் ராசிக்குள் நின்று ஜென்மச் சனியாகவும், வருடத்தின் இறுதியில் 18.12.2014 முதல் 2ல் அமர்ந்து பாதச் சனியாகவும் வருவதால் வீண் வம்பு சண்டைகளுக்கு போகக்கூடாது.

**வியாபாரிகளே!** வருடத்தின் தொடக்கத்தில் இலாபம் அதிகரிப்பதால் அளவுக்கு அதிகமாக முதலீட்டை தவிர்த்து விடுங்கள். அளவுக்கு மீறியும் கடன் கொடுக்கவேண்டாம். வேலையாட்களின் ஒத்துழைப்பு குறையும்.

**உத்தியோகத்தர்களே!** ஜுன் 12ஆம் திகதி வரை குரு சாதகமாக இருப்பதால் அலுவலகத்தில் பெரிய அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உங்களை மதிப்பார்கள். உங்களின் வேலைமீது மரியாதை கூடும். ஆனால், ஜுன் 13ஆம் திகதி முதல் வேலைச்சுமை அதிகரிக்கும். இடமாற்றம் உண்டு.

**கன்னிப்பெண்களே!** உங்கள் ரசனைக்கேற்ற நல்ல மணமகன் அமைவார். நண்பர்களுடன் யதார்த்தமாகப் பேசி எதிலும் சிக்கிக் கொள்ளவேண்டாம். பெற்றோரின் ஆலோசனைக்கு செவிசாயுங்கள்.

**மாணவர்களே!** அறிவியல் பாடத்தில் கவனம் செலுத் துங்கள். எப்போதும் அரட்டைப் பேச்சு வேண்டாமே! விளையாடும்போது கவனம் தேவை.

**அரசியல்வாதிகளே!** மறைமுக எதிர்ப்புக்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

**கலைத்துறையினரே!** விமர்சனங்களால் பாதிக்கப்படாதீர் கள். பெரிய நிறுவனங்கள் உங்களை அழைத்து புதிய வாய்ப்புகளை கொடுக்கும். மூத்த கலைஞர்கள் உதவு வார்கள். இந்த 2014ம் ஆண்டு தொடக்கத்தில் ஒரு பக்கம் அலைக்கழிப்புகள் ஆதாயத்தையும் தருவதாக அமையும்.



### விருச்சிகம்

**ஆரவாரத்துடன் அடுக்கும் மொழியாகப்பேசாமல் நறுக்கென்று நாலு வார்த்தை சொல்பவர்களே!** உங்கள் ராசிக்கு தனஸ்தானமான 2ம் வீட்டில் சந்திரன் நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் செல்வச்சேர்க்கை உண்டு. வீட்டில் வெகுநாட்களாக தடைப்பட்டு வந்த சுபநிகழ்ச்சிகள் இனி தொடர்ந்து நடைபெறும். உங்கள் ராசிக்கு இலாப வீட்டில் உங்கள் ராசிநாதன் செவ்வாய் நிற்கும் போது இந்தாண்டு பிறப்பதால் கடந்த காலக் கனவுகளெல்லாம் நனவுகளாகும்.

இலக்கை நோக்கி முன்னேறிக் கொண்டேயிருப்பீர்கள். தொலைநோக்குச் சிந்தனை அதிகரிக்கும். இதுவரை உங்கள் புகழுக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சித்தவர்கள் புறமுதுகிட்டு ஓடுவார்கள். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் வரும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். வெளிநாட்டு நிறுவன வேலைக்கு விண்ணப்பித்து காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்புவரும்.

4.2.2014 முதல் 24.3.2014 வரை மற்றும் 16.7.2014 முதல் 1.9.2014 வரை உள்ள காலகட்டங்களில் உங்கள் ராசிநாதன் செவ்வாய் பலவீனமடைவதால் ஆரோக்கிய குறைவு ஏற்படும். சொத்துப் பிரச்சினைகள், ஏமாற்றங்கள் வந்து நீங்கும். 2.9.2014 முதல் செவ்வாய் வலுவடைவதால் உடன்பிறந்தவர்களிடையே ஒற்றுமை அதிகரிக்கும். 12.6.2014 வரை குரு உங்கள் ராசிக்கு 8ஆம் வீட்டில் நிற்பதால் வீண் அலைச்சல்கள் இருக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள்.

இதனால் மனதில் இனம்புரியாத கவலைகள் வந்துபோகும். தன்னம்பிக்கை குறையும். திடீர் பயணங்கள், செலவு களால் திணறுவீர்கள். நேரம் தவறி சாப்பிடவேண்டிய சூழ் நிலை வரும். ஆனால் 13.6.2014 முதல் வருடம் முடியும் வரை குரு 9ம் வீட்டிலேயே அமர்வதால் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். திருமணம், கிரகப் பிரவேசம் போன்ற சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும்.

20.6.2014 வரை உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் கேது பகவான் நிற்பதால் உங்களைச் சுற்றியுள்ள நல்லவர்கள் யார், தீயவர்கள் யார் என்பதை உணருவீர்கள்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட ஏமாற்றங்களை நினைத்து வருத்தப்படுவீர்கள். 21.6.2014 முதல் வருடம் முடியும்வரை கேது 5ம் வீட்டில் அமர்வதால் பிள்ளைகளின் எதிர்காலத் திற்காக முக்கியமான விஷயங்களில் முடிவெடுப்பீர்கள். அவர்களின் உயர்கல்வி, உத்தியோகம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் சிலசமயம் தாமதமாகத்தான் முடியும்.

கர்ப்பிணிப் பெண்கள் தூரத்துப் பயணங்களை தவிர்ப் பது நல்லது. ஆனால் ராகு 11ம் வீட்டில் நீடிப்பதால் திடீர் பணவரவு உண்டு. இந்தாண்டு முழுக்க சனி 12ல் மறைந்து விரயச் சனியாகவும் வருடத்தின் இறுதி யில் 18.12.2014 முதல் உங்கள் ராசிக்குள் அமர்ந்து ஜென்மச் சனியாகவும் வருவதால் அநாவசியச் செலவுகளை தவிர்த்து சிக்கனமாக இருங்கள். பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்கவேண்டாம்.

**வியாபாரிகளே!** ஜுன் மாதம் முதல், இலாபம் அதிகரிக்கும். பக்கத்து கடைக்காரருடன் தகராறு, சரக்கு கள் தேங்கியதால் நஷ்டம் என தொடர் சிக்கல்களை சந்தித்தீர்களே! அந்த நிலையெல்லாம் இப்போது மாறும்.

**உத்தியோகத்தர்களே!** ஜுன் 12ஆம் திகதி வரை கடுமையாக உழைத்தும் எந்தப் பிரயோசனமும் இல் லையே என்று வருந்துவீர்கள். ஜுன் 13ஆம் திகதி முதல் அலுவலகத்தில் உங்கள் பக்கம் அதிர்ஷ்டக்காற்று வீசும். உயரதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

**கன்னிப்பெண்களே!** தோற்றப் பொலிவுகூடும். உயர்கல்வி நீங்கள் எதிர்பார்த்தபடி அமையும். நீங்கள் எதிர்பார்த்தபடியே நல்ல வரனும் அமையும். திருமணம் கோலாகலமாக நடக்கும்.

**மாணவர்களே!** கணக்கு, அறிவியல் மற்றும் மொழிப் பாடங்களில் அக்கறை காட்டிப் படியுங்கள். வகுப்பாசிரியர் அவ்வப்போது உற்சாகப்படுத்தும்படியாக பாராட்டுவார்.

**அரசியல்வாதிகளே!** தலைமையின் கவனம் உங்கள்மீது விழும். பெரிய பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள்.

**கலைத்துறையினரே!** உங்களிடமிருந்து அற்புதமான படைப்புக்கள் வெளிவரும். இந்த 2014ஆம் ஆண்டு மனதில் சந்தோஷத்தையும் வசதியையும் தருவதாக அமையும்.

(தொடரும்...)




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

# வெள்ளை யானை பறக்கிறது



மதுராந்தகம் மன்னனுக்குக் கண் பார்வை மங்கிக்கொண்டே போனது. வெள்ளை யானையின் தந்தங்களைத் தேய்த்து, கண்களில் பூசிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் மறுபடி கண்பார்வை வந்துவிடும், என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர்.

வெள்ளை யானையை உயிரோடு பிடித்துவந்தால், ஒரு ஊரையே பரிசாகத் தருவதாக அறிவித்தான், மன்னன் இந்தச் செய்தி பரமார்த்தருக்கும், அவரது சீடர்களுக்கும் எட்டியது. குருநாதா! நமக்குத் தெரிந்த வரை யானை கறுப்பு நிறமாகத்தானே இருக்கிறது? வெள்ளை யானைகூட உண்டா என்ன? எனக் கேட்டான், மட்டி.

தேவலோகத்தில் ஐராவதம் என்று ஒரு யானை இந்திரனிடம் இருக்கிறது. அது வெள்ளையாக இருக்குமாம், என்றான் மடையன்.

குருவே! அந்த யானையைப் பிடித்துவர உங்களுக்குத் தைரியம் இருக்கிறதா? என்று கேட்டான், முட்டாள். உடனே குருவுக்குக் கோபம் வந்துவிட்டது!

குருதேவா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது... வீட்டுக்கு வெள்ளை அடிப்பது மாதிரி, யானைக்கும் வெள்ளை அடித்துவிட்டால் என்ன? என்று கேட்டான், மண்டு.

ராஜாவுக்குத்தான் சரியாகக் கண்தெரியாதே! அதனால் அவரால் நம் மோசடியைக் கண்டுபிடிக்க முடியாது! என்று மகிழ்ந்தான், முட்டாள்.

தன் சீடர்களை அழைத்துக்கொண்டு, யானைப் பாகனிடம் போனார். யானையை பணம்கொடுத்து வாங்கினார்கள். பின்பு யானையின்மேல் சுண்ணாம்பு பூசிவிட்டனர்.

குருவே! யானை கறுப்பாக இருக்கும்போது தந்தம் வெள்ளையாக இருக்கிறது, அதுபோல யானை வெள்ளையாக இருந்தால், தந்தம் கறுப்பாக அல்லவா இருக்கவேண்டும்? எனக் கேட்டான், பாகன்.

ஆமாம்! நீ சொல்வதும் சரிதான்! என்றபடி அடுப்புக் கரியைத் தேய்த்து, தந்தங்களில் பூசிவிட்டான், முட்டாள். இது தேவலோகத்தில் இருந்து பிடித்து வந்தது என்பதை அரசன் நம்பவேண்டும். அதனால் இரண்டு இறக்கைகள் கட்ட வேண்டும், என்றார் பரமார்த்தர்.

குருவின் யோசனையை உடனே செயற்படுத்தினான், மூடன்.

மறுநாள், அரண்மனைக்கு முன்னால் மக்கள் கூட்டம் ஜே...ஜே... என்று இருந்தது.

வெள்ளை யானையைப் பார்ப்பதற்காக மந்திரிகள் புடைசூழ மன்னனும் வந்தான். திறந்தவெளியில் கட்டியிருந்த யானையைப் பார்த்த அரசன், அதிசயமாக இருக்கிறதே! இந்த யானையை எங்கிருந்து பிடித்து வந்தீர்கள்? என்று கேட்டான்.

தேவலோகம்வரை தேடிக்கொண்டு போனோம்! என்று புளுகினான், மண்டு.

தந்தம் மட்டும் கறுப்பாக இருக்கிறதே? என்று மந்திரி கேட்டதும், அது வைரம் பாய்ந்த தந்தம்! அப்படித்தான் இருக்கும்! என்றான் முட்டாள். இவர்கள் பேசிக்கொண்டே இருக்கும்போது, திடீரென்று பலத்த காற்று அடிக்க ஆரம்பித்தது. உடனே யானையின்மீது கட்டப்பட்ட இறக்கைகள் பியத்துக்கொண்டு கீழே விழுந்தன. உடனே பலத்த மழையும் பெய்ய ஆரம்பித்தது. மழை நீர் யானையின் மீது பட்டதும் கொஞ்சம் கொஞ்சமாகச் சுண்ணாம்பு எல்லாம் கரைந்து, வெள்ளை யானை கறுப்பாக மாறியது.

இதைப் பார்த்த குருவுக்கும் சீடர்களுக்கும் பயத்தால் உடம்பு வெடவெட என்று நடுங்கியது! சிறிது நேரத்திலேயே பரமார்த்தரின் சாயம் வெளுத்துவிட்டது - ஊகும் - கறுத்துவிட்டது. வழக்கம்போல் தண்டனைக்கு ஆளானார்கள். தேவலோகத்தில் ஐராவதம் என்று ஒரு யானை இந்திரனிடம் இருக்கிறது. அது வெள்ளை.

## வாரம் ஒரு திருக்குறள்

கள்ளுண்ணாமை

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.



உறங்கினவர், இறந்தவரை விட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவு மயங்குதலால் நஞ்சு உண்பவரே ஆவர்.

குறள்:926

# மனிதர்களை கொல்லும் மர்ம தீவு!

**கண்ணுக்கு** எட்டிய தூரம்வரை கடல்போல பரந்து விரிந்த ஏரி. ஆங்காங்கே மலைகள்.

பசுமையாக குட்டிகுட்டியாக தீவுகள். சுற்றுலா பயணிகளை கவரும் சுவாரஷியம் ஏராளம் என்றாலும், அங்குபோகும் மனிதர்கள் திடீரென மாயமாகிவிடுகிறார்கள்.

உலகிலேயே மிகப் பெரிய பாலைவனக் கடல் என்று பெயர் பெற்ற 'துர்கானாஏரி' கென்யாவில் உள்ளது. ருடால்ப் ஏரி என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட இந்த ஏரிக்கு, பல்வேறு நதிகளில். இருந்து நீர் வருகிறது. இங்கு நிலவும் கடும் வெப்பத்தால், ஒரு பகுதி ஆவியாகிறது.


இங்குள்ள குட்டி தீவுகளில் ஒன்று 'என்வைட்டினெட்'. இங்கு வாழும் பழங்குடியின மக்கள் பேசும் மொழி சொல் இதன் அர்த்தம் 'திரும்ப வராது' என்பதாகும். என்வைட்டினெட் தீவுக்குள் செல்பவர்கள் யாரும் திரும்பி வருவது கிடையாதாம்.

முன்பொரு காலத்தில் இதில் மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர் என்றும் மீன்பிடிப்பது, வேட்டையாடுவது அவர்களின் தொழிலாக இருந்தது என்றும் பக்கத்து தீவுகளை சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள்.

ஆனால் ஒரு காலத்துக்கு பிறகு தீவில் இருந்து வெளியேவரும் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக குறையத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 1935ஆம் ஆண்டு ஆங்கிலேய விஞ்ஞானி விவியன் பஸ் என்பவர் தன் குழுவினரோடு இந்த தீவு பற்றி ஆய்வுகள் மேற்கொண்டார்.

இதனால் அதிர்ச்சியடைந்த ஆராய்ச்சியாளர்கள் தூரத்தில் இருந்தே ஆய்வுகளை செய்தனர். ஹெலிகொப்டரில்




பறந்தபடியே வேவு பார்த்தனர். எந்த தடயமும் கிடைக்கவில்லை. பழங்குடியினர் குடிசைகள் அப்படியே இருந்தன. அழுகிய மீன்கள் சிதறிக் கிடந்தன. மனித நடமாட்டம் மட்டும் இல்லவே இல்லை.

இதையடுத்து பக்கத்து தீவுகளில் வசித்தவர்களிடம் தகவல்கள் சேகரித்தார்.. "அந்த தீவில் பிரமாண்ட ஒளி ஒன்றுவரும். அப்போது இடத்தில் யார் இருந்தாலும் காணாமல் போய்விடுவார்கள். அப்படித்தான் அங்கிருந்தவர்கள் காணாமல் போயிருப்பார்கள்" என்று பக்கத்து தீவுவாசிகள் கூறினர்.

இங்குள்ள மக்களை வேற்றுக் கிரகவாசிகள் கடத்தி செல்கின்றனர் என்றும், கண்ணுக்குத் தெரியாத சக்கரம் ஒன்று சுழல்கிறது என்றும், மக்கள் காற்றில் கரைகின்றனர் என்றும் கூறப்படுகிறது. ஆனால் மர்ம முடிச்சுகள் எதுவும் இன்னும் அவிழவில்லை.

## குறை ஒன்றுமில்லை!



சோக்ரடீஸ், ஒரு வீட்டைக் கட்டினார். அதனைப் பார்க்க அவரது நண்பர்கள் வந்தனர். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஒவ்வொருவரும் ஒரு குறையைச் சொன்னார்கள். வீட்டின் முற்பகுதி சரியில்லை என்றான் ஒருவன். வீட்டின் உயரம் சிறியதாக இருக்கிறது என்றான் மற்றொருவன். அறைகள் ஏன் இவ்வளவு சிறியதாக இருக்கின்றன? அக்கம்பக்கம் திரும்பக்கூட இடமில்லையே என்றான் மேலும் ஒருவன்.

இதைக் கேட்ட சோக்ரடீஸுக்குக் கோபம் வந்தது.

உடனே "அறை சிறியதாக இருந்தால் பரவாயில்லை. அது நிறைவதற்கு உண்மையான நண்பர்கள் இருந்தால் போதும்" என்று கிண்டலாகக் கூறினார்.

குறைகூறியவர்கள் வாயடைத்துப் போனார்கள்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 22.01.2014

வர்ணம் தீட்டும் போட்டி இல. 1026
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 1024

கு.சுவாதிகா, வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

பரிசுக்குரியவர்: 1024

பாராட்டுக்குரியவர்கள்

01. வ.நிருபமா, யாழ்.இந்து மகளிர் கல்லூரி.
02. எஸ்.அனோஜ், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
03. த.சவிதா, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
04. கு.மாலந்தி, பிரதான வீதி, மாத்தறை.
05. அ.டொறின், கோவில் வீதி, மன்னார்.
07. தா.சுகிர்தா, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
08. அ.நிரஞ்சன், தில்லையடி, புத்தளம்.

## தெரிந்து கொள்ளுங்கள்

- பென்குயின் பறவைகள் ஒரே இடத்தில் 7 இலட்சம் வரை எண்ணிக்கையில் கூடும்.
- கடலில் 30,000 மீன் வகைகள் உள்ளதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். உலகில் பூச்சி இனத்திற்கு அடுத்து மீன் இனங்களே அதிகம் என்று ஆராய்ச்சி வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.
- விமானத்தில் பறந்தவாறே பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் பி. ஜோன்சன்.
- நைலோன் துணியால் கரன்சி நோட்டுகளை அச்சடிக்கும் நாடு ஜெர்மனி.
- முதல் உலகப்போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90 இலட்சம். இரண்டாவது உலகப் போரில் மாண்டவர்களின் எண்ணிக்கை 2 கோடி.
- பிளாஸ்டிக்கில் கரன்சி நோட்டுகளை முதலில் வெளியிட்ட நாடு ஆஸ்திரேலியா.
- சூரியகாந்தி வகையைச் சேர்ந்த காசினி என்ற செடியின் வேரைக் காயவைத்து வறுத்துப் பொடி செய்வதுதான் சிக்கரி பவுடர். கோப்பிப்பொடியுடன் மணத்துக்காகச் சேர்க்கிறார்கள்.
- உலகிலேயே அதிக இலைகள் கொண்டது சைப்ரஸ் மரம். இதில் 4 முதல் 5 கோடி இலைகள் இருக்குமாம்.

அற்புதன் எழுதிய

# இடி அமீன்

உண்மைத் தொடர்...

## அதிர் இடி 20

**இதுவரை**

**உகண்டா முன்னாள் ஜனாதிபதி ஒபேடேயின் அந்தரங்கச் செயலாளரை தன் பக்கம் இழுக்கிறான் அமீன். சியம்பாவை வலையில் வீழ்த்த பயன்பட்ட அழகியை அமீன், சியம்பா முன்பாகவே சுட்டுத் தள்ளுகிறான்...**

**இனி...**

நீள்வரிசையில் மூன்றுபேரின் இடம் வெற்றிடமானது. இரத்தம் சிந்தியபடி மூன்று பேர் சாவை அணைத்துக்கொண்டு இருந்தனர்.

"அடுத்தது யார்?"

"அடுத்தது யார்," மீதியிருந்தவர்கள் ஒவ்வொருவரின் இதயமும் பந்தயக் குதிரை வேகத்தில் துடித்தது.



மூன்று தடவை இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும் ஒவ்வொருத்தராகக் குறிபார்த்து விட்டு சட்டென்று துப்பாக்கிகளை விட்டெறிந்தான்.

துப்பாக்கி அவர்கள் முன்னால் விழுந்து கிடந்தது.

"எடுத்துக்கொள்ளுங்கள். இந்த அமீன் தன் எதிரிகளுக்கும் ஒரு தடவை சந்தர்ப்பம் கொடுக்காமல் விட்டதில்லை. என்னைச் சுடவேண்டும். ஒழித்துக்கட்ட வேண்டும்போல் இருக்கிறதா? எடுங்கள்: சுடுங்கள்! ரவைகளால் என்னைத் துளையுங்கள். ஐந்து நிமிட அவகாசம்! தவறிவிட்டால் அதன்பின்னர் நான் உங்களைச் சுடுவேன். என்ன சாகவிருப்பமா?, சாகடிக்க விருப்பமா?"

ஐந்து நிமிடமும் அத்தனை பேரும் அசைவே' இல்லாமல் சிலையாக நின்றிருந்தனர்.

ஐந்து நிமிடம் முடிந்ததும் அமீன் சொன்னான்: "இப்போதே இந்த நொடியே நான் உங்களை விடுதலை செய்கிறேன்!"

நம்பமுடியாமல் பார்த்தனர். "ஆனால் ஒரு நிபந்தனை. வெளியே போய் பெண்டாட்டி கையால் சாப்பிட்டதும் யாருக்காவது வீரம் வந்தால், உங்கள் சாவுகோரமாக இருக்கும்!" என்றவன் சுட்டுவிரலை நீட்டி மேலும் உறுதியாகக் கூறினான்: "உங்களுடன் உங்கள் குடும்பமும் காணாமல்போகும்!"

"இல்லை இல்லை!" என்றனர்.

இடி அமீன் நகைத்துவிட்டு: "இந்த அமீன் சொன்னதைச் செய்வான்: ஆனால் செய்வதைச் சொல்லமாட்டான்!" என்றான் சிரிப்பை நிறுத்தாமல்.

ஒபேடேயின் ஆதரவாளர்கள் விடுதலை என்ற செய்திகள் வெளியானதும் அமீனுக்கு மக்களிடம் மேலும் செல்வாக்கு ஏற்பட்டது.

அமீனுக்கான பத்திரிகையாளர் அமீனுக்குப் பிடித்தமான கேள்விகளைக் கேட்டார்: "ஏன் உங்கள் எதிரிகளையும் விடுதலை செய்கிறீர்கள்?"

மாட்சிமை பொருந்திய உகண்டா ஜனாதிபதி இடிஅமீன் கூறினார்: "நான் ஒரு ஜனநாயகவாதி, ஜனநாயகத்தை புத்துயிர் ஊட்டுவதற்காக என் உயிரைக் கொடுக்கவும் சித்தமாக இருக்கிறேன்"!

அதனைத் தொடர்ந்து இடி அமீன் மேற்கொண்ட தடாலடி நடவடிக்கைகளால் அவனை வெறுத்தவர்கள்கூடக் குழம்பிப் போனார்கள்.

"பிரிகேடியர் ஷபான ஒபோலொட் விடுதலை. சிறையில் இருந்த காலத்திற்கான சம்பளமும் மொத்தமாக வழங்கப்பட்டது!"

உகண்டா தினசரிகளில் அதுதான் தலைப்புச் செய்தி.

ஒபேடேயின் ஆதரவாளர்களை மட்டுமல்லாமல், ஒபேடே காலத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களை பத்திரிகைகள் பேட்டி கண்டு வெளியிட்டன. எல்லோரும் அமீனைப் புகழ்ந்து தள்ளினார்கள். ஒரே ஒருத்தர் மட்டும் அமீனை சர்வாதிகாரி என்று துணிந்து கூறினார்.

அவர் ஒரு சட்டத்தரணி... "ஒபேடேக்கும் இடி அமீனுக்கும் தோற்றத்தில்தான் வேறுபாடு. இருவருமே ஏமாற்றுக்காரர்கள்: சர்வதிகாரிகள்" என்று கூறினார்.



அந்தப் பேட்டியை எடுத்த செய்தியாளர் அதனைப் பிரசுரிப்பதற்கு அனுப்பமுன்னர் இடி அமீனின் கவனத்திற்கு அனுப்பிவைத்தார்.

அதேநாள் மாலை அந்தச் சட்டத்தரணியை இன்னொரு பத்திரிகையாளர் சந்தித்தார். அதே கருத்தையே அவருக்கும் சொன்னார் சட்டத்தரணி.

"நீங்கள் துணிச்சல்காரர். உங்களைப் பாராட்டத்தான் வேண்டும்!" என்றார் பத்திரிகையாளர்.

"பாராட்டுவது இருக்கட்டும், பத்திரிகையில் போடுங்கள். பத்திரிகைகள் எல்லாம் அமீனுக்கு வாழ்த்துச்சொல்லி வாலை ஆட்டிக் கொண்டிருக்கின்றன என்றார்.

பத்திரிகையாளர் சிரித்தார். அந்தச் சிரிப்பு சந்தேகத்தைக் கொடுக்க, சட்டத்தரணி உஷாராக முன்னரே பத்திரிகையாளராக இடி அமீனால் அனுப்பப்பட்டவர் கையில் பிஸ்டல் முளைத்திருந்தது.

எழுந்துஓட முனைந்த நொடியில், பிஸ்டல் வெடித்தது. வெடிச் சத்தம் கேட்டு உள்ளே இருந்த ஆட்கள் ஓடிவருவதற்கு இடையில் அமீனின் ஆள் காரியத்தை முடித்துவிட்டு காத்திருந்த காரில் ஏறி விரைந்துவிட்டான். காரின் இலக்கத்தைக் கவனிக்க முற்பட்டவர்களுக்கு ஏமாற்றம் காரில் இலக்கத்தகடே இருக்க வில்லை. பேட்டியை பிரசுரிக்காமல் தகவலை தந்த பத்திரிகையாளருக்கு கார் ஒன்று பரிசளித்தான் இடி அமீன்.

"தகவல் தந்ததால் உனக்குக் கார். பிரசுரித்திருந்தால் இப்படியொரு காரால் அடித்தே உன்னைக் கொன்றிருப்போம்!" என்றுகூறி அமீன் நகைத்த விதம் பயங்கரமாக இருந்தது.

சட்டத்தரணி ஒருவரைத் தீர்த்துக்கட்டிய அமீன், இன்னொரு சட்டநிபுணரான இபின் கிரா என்பவரை விடுதலைசெய்து, ஐக்கிய நாடுகள் சபைக்கு தூதுவராக நியமித்தான்.

"அவனுக்கு தோட்டா பரிசு, உமக்கு தூதர் பதவி! காரணம், அவன் முரண்டுபிடித்தான், நீர் பணிந்து நடந்தீர். ஒபேடே உமக்கும் எதிரி, எனக்கும் எதிரி. எதிரிக்கு எதிரி நண்பர்தானே!"

"இல்லை. நாங்கள் உங்கள் அடிமை!" என்று குழைந்தார் சட்டநிபுணர். அந்தச் சட்ட நிபுணரின் அழகான மனைவி முதல் நாள் இடி அமீனைத் தனியாக சந்தித்திருந்தாள்.

போகும்போது அவளும்: நான் உங்கள் அடிமை!" என்றுதான் கூறிவிட்டுப் போனாள்.

இப்போது சட்ட நிபுணரும் அதையே சொன்னதால் அமீன் நினைத்தான் குடும்பமே அடிமையாக இருக்கத்தான் ஆசைப்படுகிறது.

அமீனால் கொல்லப்படுவோர் தொடர்பான தகவல்கள் வெளியே தெரியாமல் அமுக்கப்பட்டன.

அமீனின் தாராளகுணம் பற்றியே பத்திரிகைகளும் எழுதி வந்தன. இடி அமீன் எங்கு: சென்றாலும் மக்கள் வரவேற்க முண்டியடித்தனர். பரிசுகளும் வழங்கினார்கள். ஓரிடத்தில் 900 மாடுகள் வெகுமதியாகக் கொடுக்கப்பட்டன.

(தொடரும்)

---

# குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 555

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | ■ | ■ |
| 13 | ■ | 15 | 16 | ■ | 18 |
| ■ | 20 | ■ | ■ | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | ■ | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **22.01.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 555
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 553 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பி 1 | ர 2 | ச 3 | ன் 4 | ■ | வா 6 |
| ந் 7 | தி 8 | ம 9 | ■ | சு 11 | சி 12 |
| து 13 | ■ | நி 15 | ■ | தா 17 | ன் 18 |
| மா 19 | ய 20 | லை 21 | ணி 22 | ■ | யா 24 |
| த 25 | தா 26 | ■ | க 28 | லி 29 | ■ |
| வி 31 | ■ | ம 33 | ண் 34 | லா 35 | டே 36 |

**இடமிருந்து வலம்**

01. வர்த்தக நிலையங்களில் பொருட்களின் மேல் பொறிக்கப்பட்டிருக்கும் அடையாளம்.
07. இந்த சுவையுள்ள காய்கறி வகைகள். உடம்பில் உள்ள உதவாத கிருமிகளை அகற்றி உடம்பிற்கு சக்தியைக் கூட்டும். (குழம்பியுள்ளது)
15.அழுக்கு. பிசுபிசுப்பு. கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (திரும்பியுள்ளது)
23. இரத்தினம். (திரும்பியுள்ளது)
25. நாம். மற்ற எல்லா உயிரினங்களிடமும் காட்டுவது.
31. மனோவாக்குக் கெட்டாதது. (திரும்பியுள்ளது)
34.குறைவு. கேடு.

**மேலிருந்து கீழ்**

01. சௌகரியமான உணர்வு.
02. அரசன்; இராசதானி. (திரும்பியுள்ளது)
03. பெற்றோலிய எண்ணெய் பிரித்தெடுக்கமுன் இப்படி அழைப்பர். ( குழம்பியுள்ளது)
04. விறகு; சிறுதடி.
18. வெள்ளை நிறம். சங்குமணி. (குழம்பியுள்ளது)
20. பிரபஞ்சம் (குழம்பியுள்ளது)
23. பெண் (திரும்பியுள்ளது)
25. ஓர் பரிமளப் புல்; வாசனை.
28. அன்புள்ளாள்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 553 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**எல்.காவேரி, சென்.லோறன்ஸ் வீதி, வெள்ளவத்தை.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கே.சாலங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
02. தா.தாரணி, மாசார், பளை.
03. ஆ.தமிழரசி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.
04. வி.காருண்யா, துன்னாலை, கரவெட்டி.
05. ம.பபித்ரா, ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
06. எம்.ஜெனட் பிரதாப் காவத்தமுனை, வாகனேரி.
07. எஸ்.எஸ்.அஷாம், 2ஆம் குறுக்குத்தெரு, நிந்தவூர் -07.
08. சு.ஜேசுதாஸ், மத்திய வீதி, இறக்காமம் -09.
09. த.சுபாஸ்கரன், சிவன் கோவில் வீதி, புத்தூர்.





## மீண்டும் வருகிறதா முரட்டுக்காளை!

அஜீத், தமன்னா, விதார்த் நடிப்பில் உருவாகியுள்ள படம் வீரம். இந்தப் படம் வரும் பொங்கலுக்கு வெளியாகிறது. சமீபத்தில் வெளியான படத்தின் போஸ்டர்கள், ட்ரைலர் பார்த்த பிறகு, இது ரஜினி நடித்த முரட்டுக்காளை படத்தின் ரீமேக்காக இருக்கும் என்ற பேச்சு கிளம்பியது.

இந்நிலையில், வீரம் படத்தின் செய்தியாளர் சந்திப்பில் இதுகுறித்து இயக்குனர் சிவாவிடம் கேட்டபோது, இந்தப் படம் அண்ணன், தம்பி பாசத்தை மையமாகக்கொண்டது. ஆனால் முரட்டுக்காளையின் ரீமேக் அல்ல.

அண்ணன், தம்பிகளின் கதை என்பதால் அப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் எந்த படத்தின் சாயலும் இதில் இருக்காது, மலையாளப் படமான 'வெள்ளியேட்டன்' படத்தின் தழுவல் என்று கூறப்படுவதும் தவறான தகவல் என்றும் வீரம் படம் நேரடி தமிழ் படம் எனவும் கூறியுள்ளார்.

## கார்த்திக்கு அனுஷ்கா மறுத்தது ஏன்?

அலெக்ஸ் பாண்டியன், ஆல் இன் ஆல் அழகுராஜா படங்களின் தோல்விக்கு பிறகு துவண்டிருந்த கார்த்தி, பிரியாணி படம் மூலம் சற்று நிமிர்ந்துள்ளார். பிரியாணி பெரிய அளவில் ஹிட்டாகவில்லை. எனினும் தயாரிப்பாளரின் கையை கடிக்காமல் ஓரளவிற்கு வசூல் கொடுத்தது. எனவே நிம்மதியாக அடுத்த படத்தில் தனது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்துவிட்டார் கார்த்தி.

பருத்திவீரனுக்கு பிறகு கார்த்திக் நடித்து பரபரப்பான படம் சிறுத்தை. இந்த படத்தின் இரண்டாம் பாகத்தை எடுக்க தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தெலுங்கில் ரவிதேஜா, அனுஷ்கா நடித்த விக்ரமடு படத்தின் ரீமேக் ஆகும்.

சிறுத்தை முதல் பாகத்தை இயக்கிய சிவா, இந்த படத்திற்கு திரைக்கதை அமைத்து கொடுக்க உள்ளார். வீரம் படம் முடிந்துவிட்டபடியால் இந்த பொறுப்பினை அவர் ஏற்றுள்ளார். இந்த படத்தின் தெலுங்கு பதிப்பில் அனுஷ்காவின் நடிப்பு மிகவும் அற்புதமாக இருக்கும். எனவே இந்த படத்திலும் அனுஷ்கா நடித்தால் நன்றாக இருக்கும் எனக்கருதி அவரிடம் அனுமதி கேட்கப்பட்டது. ஆனால் அனுஷ்கா மறுத்துவிட்டார். ஏற்கனவே கார்த்தியுடன் நடித்த அலெக்ஸ்பாண்டியன் படுதோல்வி அடைந்துவிட்டதால் மீண்டும் கார்த்தியுடன் ஜோடி சேரத்தயங்குவதாக தெரிகிறது. எனவே கார்த்தி ஜோடியாக நடிக்க நஸ்ரியாவுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுவருகிறது.

## குழப்பத்தில் நமீதா!

நமீதாவும், தான் அரசியலுக்கு வருவேன் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார். இந்நிலையில் திருச்சி பக்கம் ஒரு நிகழ்ச்சிக்கு வந்த அவர் மறுபடியும் தான் அரசியலுக்கு வருவேன் என்று சொல்லிவிட்டுப் போயுள்ளார்.

திருச்சியில் நடந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த அவரிடம் அரசியலுக்கு எப்போது வருவீர்கள் என்ற கேள்வி கேட்கப்பட்டது, அதற்கு பதிலளித்த அவர் கண்டிப்பாக நான் அரசியலுக்கு வருவேன். முழுநேர அரசியல்வாதியாகவும் மாறுவேன். ஆனால் எந்தக் கட்சி என்பதை இப்போது சொல்லமுடியாது. மேலும் மோடி குறித்தும் அவர் சில வார்த்தைகளை தூவியுள்ளார், அதாவது, மோடியின் பிரசாரம் புதிதாகவும், வித்தியாசமாகவும் இருக்கிறது என்று கூறியுள்ளார்.

அதேவேகத்தில் ஆம் ஆத்மியையும் பாராட்டத் தவறவில்லை, அதுகுறித்துக் கூறுகையில்,

ஆம் ஆத்மி கட்சி சாதாரண மக்களின் குரலாக ஒலிக்கிறது. அவர்களுக்கு என் வாழ்த்துக்கள் என்று ஆசிர்வதித்தார். பின்னர் அப்படியே திரும்பி விஜயகாந்தைப் பாராட்ட ஆரம்பித்தார், அனைத்து கட்சிகளும் அவரை தேடிவருகிற அளவுக்கு பலம் வாய்ந்து இருக்கிறார் என்று கூறியுள்ளார்.



## விருப்பம் நிறைவேறுமா?

அண்மையில் கேரளாவில் மோகன்லால் நடிப்பில் வெளியான 'த்ரிஷ்யம்' படம் சூப்பர்ஹிட்டாக ஓடிக்கொண்டிருக்கிறது. மோகன்லாலுக்கு ஜோடியாக மீனா நடித்துள்ள இந்தப்படத்தை இயக்குனர் ஜீத்து ஜோசப் இயக்கியுள்ளர்.

படம் வெளியான மூன்றே நாட்களில் இந்தி உட்பட மற்ற மூன்று தென்னிந்திய மொழிகளிலும் இதன் ரீமேக் உரிமை எதிர்பாராத ஒரு தொகைக்கு விற்பனை ஆகியிருக்கிறது. இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு கதையிலும், மோகன்லாலின் நடிப்பிலும் மனதைப் பறிகொடுத்துள்ள விக்ரம் இதன் தமிழ் ரீமேக்கில் நடிக்க விருப்பம் தெரிவித்திருப்பதாக ஒரு செய்தி கசிந்துள்ளது.

தற்போது இதன் தமிழ் மற்றும் இந்தி ரீமேக் உரிமையை மோகன்லாலின் மைத்துனரும், தயாரிப்பாளருமான சுரேஷ் பாலாஜி கைப்பற்றியுள்ளாராம்.

## ஜில்லாவில் விழுந்தது கத்தரி

பொங்கல் விருந்தாக வரும் விஜய்யின் ஜில்லா படம் சென்சர் போர்டுக்கு போட்டுக் காட்டப்பட்டது. படத்தை பார்த்த சென்சர் உறுப்பினர்கள் 3 இடங்களில் கத்தரி போடவேண்டும் என்று கூறியுள்ளனர். இதற்கு தயாரிப்பாளரும், இயக்குனரும் ஒப்புக்கொண்ட பிறகே படத்திற்கு யு சான்றிதழ் வழங்கப்பட்டது. படத்தில் வரும் அக்ஷன் காட்சிகளில் வன்முறை அதிகம் உள்ள இரண்டு காட்சிகளுக்கு கத்தரி போடப்பட்டுள்ளது. மேலும் மதுரை பக்கத்து கெட்ட வார்த்தை வரும் ஒரு காட்சிக்கும் கத்தரி போடப்பட்டுள்ளது. ஜில்லா தமிழகம் தவிர கேரளாவிலும் பிரமாண்டமாக ரிலீஸ் ஆகிறது என்பது குறிப்பிடத் தக்கது.



## மீண்டு வந்தார்

சிலப்பதிகாரம், குரு என் ஆளு போன்ற பல தமிழ் படங்களிலும், ஏராளமான மலையாள படங்களிலும் நடித்தவர் மம்தா மோகன்தாஸ். "டாடி மம்மி வீட்டில் இல்லை" என்ற ஒரு பாடலின் மூலம் சிறந்த பின்னணிப் பாடகியாக அடையாளம் காணப்பட்டார்.

சிறந்த நடிப்பாற்றலும், பாடும் திறனும் கொண்ட மம்தா, 'அன்வர்' என்ற மலையாள படத்தில் நடிக்கும்போதுதான் தன்னை

புற்றுநோ
அதற்கு
அத
படங்களி
மீண்டும்
அரக்கன்
பதற்றமு
கொண்டி
கொடுத்
சென்றி
பிறகு இ
மம்தா









# இந்த முத்தம் போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா...

நடிகர் விஷால் தன்னுடைய சொந்தச் செலவில் எடுத்துக்கொண்டிருக்கும் 'நான் சிகப்பு மனிதன்' படத்தில் லட்சுமி மேனனுடன் உதட்டுடன் உதடு வைத்து எடுக்கப்பட்ட முத்தக்காட்சியால் படப்பிடிப்பில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நான் சிகப்பு மனிதன் படத்தை இயக்குனர் திரு இயக்கி வருகிறார். இந்த படத்தில் ஒரு காட்சியில் விஷாலும், லட்சுமி மேனனும் லிப் கிஸ் எனப்படும் உதட்டுடன் உதடு வைக்கும் முத்தக்காட்சியில் நடிக்குமாறு இருவரையும் கேட்டுக்கொண்டார். இயக்குனரின் இந்த காட்சியை கேட்டதும் லட்சுமி மேனன் அதிர்ச்சியடைவார் என உதவி இயக்குனர்கள் முதல் படக்குழுவினர் அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் 'நான் ரெடி' என்று லட்சுமி மேனன் அசால்ட்டாக கூறியதைக் கேட்டு விஷால் உட்பட அனைவரும் சிறிது அதிர்ச்சியடைந்தனர்.

இந்த முத்தக்காட்சியை மிகவும் ரசித்து நடித்தாராம் லட்சுமி மேனன். விஷாலே வெட்கப்படும் அளவுக்கு அழுத்தமான முத்தத்தை கொடுத்த அவர் 'இந்த முத்தம் போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா' என இயக்குனரை பார்த்து கேட்டபோது இந்த பொண்ணு நிஜமா சொல்லுதா இல்லை நம்மை கலாய்க்குதா? என்று புரியாமல் இயக்குனர் திரு, திருதிருவென முழித்ததை படகுழுவினர் அனைவரும் உள்ளுக்குள் ரசித்ததாக கூறப்படுகிறது.



## முத்தத்தின் பெறுமதி 50 இலட்சம்!

சிம்பு, ஹன்சிகா நடிக்கும் வேட்டை மன்னன் படத்தில் தீக்ஷா சேத் என்ற நடிகையும் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இந்த படம் ஆரம்பிக்கும்போது சிம்புவும் ஹன்சிகாவும் காதலித்துவந்தனர். தற்போது இருவரும் பிரிந்துவிட்டபடியால் இயக்குனர் கதையில் சில மாற்றங்கள் செய்துள்ளார். இரண்டாவது ஹீரோயினாக இந்த படத்தில் நடிக்கும் தீக்ஷா சேத்தும், சிம்புவுக்கு காதல் தோன்றுவதுபோல கதையை மாற்றியுள்ளார். முதல் பாதியின் இறுதியில் ஹன்சிகாவின் கேரக்டர் இறந்துவிடுவது போலவும் கதை மாற்றப்பட்டுள்ளது.

இயக்குனர் நெல்சன் சிம்புவுக்கும் தீக்ஷா சேத்துக்கு ஒரு லிப் கிஸ் காட்சி வைக்க விரும்பினார். சிம்பு வழக்கம்போல சம்மதம் கொடுத்துவிட்டார். நடிகை தீக்ஷா சேத்திடம் இந்த காட்சி குறித்து கூறியபோது, கதை சொன்னபோது லிப் கிஸ் கஷாட்சி குறித்து தன்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றும் லிப் கிஸ் காட்சியில் நடிக்க தனக்கு எவ்வித தயக்கமும் இல்லை என்றும் ஆனால் ஒரு லிப் கிஸ் காட்சி சம்பளம் ரூ.50 லட்சம் கூடுதலாக கொடுக்கவேண்டும் என்றும் அதிரடியாக ஒரு கண்டிஷனை முன்வைத்தார். இதை கேட்ட இயக்குனர் அதிர்ந்துபோனார்.

## பரோட்டா சூரியை புரட்டி எடுக்கிறார்கள்

அண்மையில் பேஸ்புக்கில் ஒரு பரபரப்பான செய்தி வெளிவந்தது. அது காமெடி நடிகர் பரோட்டா சூரி, ரஜினிகாந்த் குறித்து ஒரு சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்ததாக அவரை பேஸ்புக் பயனாளிகள் காய்ச்சி எடுத்தனர். வளர்ந்துவரும் ஒரு காமெடி நடிகர், சூப்பர் ஸ்டார் அந்தஸ்தில் உள்ள ஒரு நடிகரை கலாய்க்கும்வகையில் கருத்துக்கூறுவது அவருக்கு தேவையில்லாத வேலை என்று கொலிவூட்டில் அவர் காதுபடவே கண்டித்தனர்.

இதனால் பரோட்டா சூரி அதிர்ச்சி அடைந்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பரோட்டா சூரி, தனக்கு பேஸ்புக் என்றால் என்னவென்றே தெரியாது என்றும், பேஸ்புக், டுவிட்டரில் எல்லாம் எக்கவுண்ட் வைத்து மெயிண்டன் செய்யும் அளவுக்கு எனக்கு அறிவு இல்லை என்றும் என்னுடைய பெயரில் யாரோ போலியான எக்கவுண்ட் ஆரம்பித்து அதில் தான் தெய்வமாக மதிக்கும் ரஜினி சாரை சர்ச்சைக்குரிய வகையில் விமர்ச்சித்துள்ளர்கள் என்றுகூறிய அவர் இதுகுறித்து சென்னை பொலிஸ் கமிஷனரிடம் புகார் ஒன்றை அளித்துள்ளார்.

## ...ர் மம்தா!

...நோய் தாக்கியிருப்பதை உணர்ந்து
...கு சிகிச்சை எடுத்துக்கொண்டார்.
அதன்பிறகு தொடர்ந்து மலையாளப்
...களில் நடித்துவந்த மம்தாவை
...டும் 'புற்றுநோய்' என்ற கொடூர
...கன் தாக்கிவிட, எந்தவித
...றமும் அடையாமல் தான் நடித்துக்
...ண்டிருந்த படங்களை முடித்து
...டுத்துவிட்டு மீண்டும் சிகிச்சைபெற
...றிருந்தார். அந்த சிகிச்சைக்குப்
... இப்போது பூரண குணமடைந்த
...ா மீண்டும் நடிக்க வந்திருக்கிறார்.

# உளம் பொங்க...!



கரும்பிளநீர் வாழை
மாவிலை வெண்பால்
சர்க்கரை புத்தரிசி கற்கண்டு
இவை கண்டு...

செங்கதிரோன் சிரிக்க
புதுப் பானை உளம் பொங்கி
விளிம்பிலே வெண்நுரை...

அன்பு, அகிம்சை
இரக்கம், பொறுமை
சாந்தி, சமாதானம்
நல்வாழ்வு கண்டு...

செந்தமிழர் உளம் பொங்க
இதழ் விளிம்பிலே முறுவல்பூக்க
சிரிக்கட்டும் புத்தாண்டு...!

K.வாலேந்திரன்,
கொள்ளுப்பிட்டி



தேன் கிண்ணம்

# தைமகளே வருக...!

மனைகள் எங்கும்
மங்கலம் தங்க
மங்கையர் கூடி
மாக்கோல மிட
மாவிலைத் தோரணங்கள்
வாயிலிலே அசைந்தாட
பூரண கும்பமிட்டு
குண திசை நோக்கி
ஆதவன் வரவு கண்டு
அகமகிழ்ந்து
பொங்கலும் பொங்கிட
தையின் மகளே – நீ... வருக...
தரணியில் இன்பம் பெருக...

க.நாகேஸ்வரா,
கண்டிலிப்பாய்.



# உழவனின் நிலை...

பாண்டியூர் - பொன்.நவநீதன்

அன்று – ஏர்
எருது பூட்டி
உழுது நின்றான்!
இன்று – அவை
இரண்டுமில்லை
நின்று விட்டான்!
வரம்பு கட்டி
வாய்க்கால் வெட்டி
நீரிறைத்தான் – அந்த
வரம்போடு
நின்று விட்டான்!
பயிர் வளர்த்துக்
கதிரறுத்தான் – இப்போ
அதையும்
அறுவைக்குக்
கொடுத்து விட்டு
அகன்று நின்றான்!
பயிருயிர்
வளர்ப்பும்
பகலிரா
விழிப்பும்
வெயில் பனி(க்) மழை
குளிப்பும்தான்
அவனுழைப்பு!
அன்று தொட்டு
இன்று வரைக்கும்
அவனுக்காயிருப்பது
ஒன்றே யொன்று...
'உழவர் திருநாள்'
இதுவுமின்று – கையில்
இருப்பவனுக்கேதான்...
'கதிரவன் பொங்கல்'
இதுதானெங்கள்
உழவனின் நிலை!



# நன்றியும் 2013 வாழ்த்தும் 2014

இறந்தவருடமே... என்
கண்ணீர் அஞ்சலி உனக்கு!

உன் வாழ் காலத்தில்
என்னை வாழவைத்தாய்
பிச்சைகேட்டு பஞ்சம் கூறாமல்
பார்த்துக்கொண்டாய்!

சிறுவஞ்சகம் நாட்டில்
துளிர்விட்டாலும்
பெரும் கவலையேதும்
பொங்கிவிடாமல்
பார்த்துக்கொண்டாய்!

அலைக்கழித்து உயிர்குடிக்கும்
ஆழிப்பேரலை அனுப்பவில்லை
ஆயுதப்போராட்டம் நடத்தவில்லை
அல்லும் பகலும் அல்லற் படும்
பொல்லாத அலுவல் செய்யவில்லை!


அவகீர்த்தியில் எம்மை ஆழாத
உனக்கு அன்புடன் நன்றி.

பிறந்த வருடமே...
பெரும் கரகோஷம் உனக்கு...
ஏற்றுக்கொள்கிறேன் உன் வரவை
ஏற்றமாய் வைத்திரு எல்லோரையும்.

காட்டுமிராண்டி மனிதர்களை
மீட்டுத்தா... மனிதம் வாழும்
மனிதர் ஜாதியாய்!
இனங்கள் அனைத்தும்
மனிதனாய் மட்டும் வாழட்டும்
வாழ்த்துக்கள் உனக்கு.

மிகிந்தலை A.பாரிஸ்

# பொங்கலோ பொங்கல்



அகவிருளை போக்கி
அகவையதனை விட்டு
அகிலமெல்லாம் வாழும்
அனைவரும் வருக
தையவளை
வரவேற்ற
தைரியமாய்
கை பிடிப்போம்.


பகலிருளையும்
பட்டினியையும்
போக்குமந்த ஆதவன்
கடன் தீர்க்க
புதுப் பானை
அடுப்பில் வைத்து
பொங்குவோம்
புத்துணர்ச்சியை
வாங்குவோம்.

புத்தாடை கட்டிக் கொண்டு
பட்டாசு வெடித்துக் கொண்டு
கோயிலுக்கு நடந்து கொண்டு
பலகாரம் பரிமாறிக் கொண்டு
உறவுகள் சிரித்துக் கொண்டு
உற்சாகமாய் கொண்டாடுவோம்
பொங்கலை பொங்கிக் கொண்டு...

ஏ.ஆர்.நவாஸ்,
கிண்ணியா.

# ஈழத்துக் கவிஞர்கள்

## இ. பத்மநாபன்



ஈழத்து இலக்கியத்துக்குப் பெரும் பங்காற்றி வருபவர் இலக்கிய ஆர்வலர் பத்மநாபன்.(ஓகஸ்ட் 24, 1941). இவர் யாழ். வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகக் கொண்டவர். ஈழத்து இலக்கிய உலகில் மட்டுமல்ல, தமிழக இலக்கிய உலகிலும் நன்கு அறியப்பட்ட ஐயர் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுகின்ற இவர், பன்முகப் பார்வை கொண்ட நவீன படைப்பிலக்கிய முயற்சிகளின் உந்துசக்தி.

வெளியீட்டுத் துறையிலும் ஆக்கங்களைத் தொகுப்பதிலும் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர். தரமான, நேர்த்தியான பல நூல்களைப் பதிப்பித்தவர். தனது வாழ்வில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்து இலக்கியத் துறையிலும் வெளியீட்டுத் துறையிலும் தனக்கென ஒரு முத்திரையை பதித்துக்கொண்டவர். இலக்கியப் பங்களிப்புக்காக இயல் விருது பெற்றவர். இவர் இப்பொழுது லண்டனில் வசித்துவருகிறார்.

பத்மநாப ஐயரின் துணைவியார் சொர்ணவல்லி அவர்களும் ஒரு இலக்கிய ஆர்வலர். பத்மநாப ஐயரின் இலக்கிய முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்து ஆதரவு வழங்கிவந்த அவர் இடையில் மரணித்துவிட்டார். அவரது இறப்புக்குப் பின்னும் பத்மநாப ஐயர் தனது இலக்கியப்பணியைத் தொடர்கிறார். திருமதி சொர்ணவல்லி அவர்களின் இலங்கையில் தோட்டப்பள்ளிக்கூடங்களின் கல்வியமைப்பும் பிரச்சினைகளும் என்ற நூலும் பத்மநாப ஐயரால் வெளியிடப்பட்டது.

### இலக்கியப் பணிகள்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் தந்தையுடனும் கல்வி, தொழில் நிமித்தம் பல இடங்களிலும் வசிக்க நேர்ந்ததில் இலக்கிய நேசிப்பாளர்கள் பலரை நண்பர்களாக்கியும் கொண்டார்.

இவர், தரமான நூல்களும் இதழ்களும் ஈழத்து வாசகர்களுக்கு கிடைக்கவேண்டும் என்பதிலும், ஈழத்துப் படைப்புக்கள் நூல்வடிவம் பெறவேண்டும் என்பதிலும் அறுபதுகளிலிருந்து தொடர்ந்து அக்கறை செலுத்திவருகின்றார்.

தமிழியல் பதிப்பகத்தின்மூலம் பல நூல்களை வெளியிட்டு வருகிறார். கண்ணில் தெரியுது வானம் முதலிய குறிப்பிடத்தக்க நூல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். பல எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடுவதில் பங்காற்றியுள்ளார். காலச்சுவடு, நூலகம் திட்டம் போன்றவற்றின் ஆலோசகராகவும் இருக்கிறார்.

அச்சிடலின் முன்மாதிரியான தொகுப்புக்களைக் கொண்டுவந்ததில் ஓவியர் மார்க் அவர்களின் "தேடலும் படைப்புலகமும்" (1987) நூலாகும். வடிவமைப்பில் புதுமுயற்சியாகவும் இது கருதப்பட்டது. மேலும், 31 கவிஞர்களின் 82 சமகால அரசியல் கவிதைகளைத் தேர்ந்தெடுத்து "மரணத்துள் வாழ்வோம்" (1985) எனும் தொகுப்பாக இன்றும் பேசப்படுகிற தொகுப்பாக்கித் தந்துள்ளார்.

ஈழநாடு ஆசிரியர் சபாரத்தினம் எழுதிய ஆசிரியத் தலையங்கங்களைத் தொகுத்து "ஊரடங்கு வாழ்வு" (1985) தமிழியல் வெளியீடாக வெளியிட்டு உலகிலேயே முதலில் வந்த ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பெனும் பெருமையையும் தந்துள்ளது. இவர் பதிப்பித்த நூல்கள் ஏராளம்.

### விருதுகளும் சிறப்புகளும்

கனடிய தமிழ் இலக்கியத் தோட்டமும் ரொறொன்ரோ பல்கலைக்கழக தென்னாசியக் கழகமும் இணைந்து ஆண்டுதோறும் வழங்கும் இயல் விருது 2004 ஆண்டு இவருக்கு வழங்கப்பட்டது. கனடாவிலிருந்து வெளிவரும் காலம் சஞ்சிகை பத்மநாப ஐயரின் பணிகளைக் கௌரவிக்குமுகமாகச் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டுள்ளது.




பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர்.

**Dr. சி.நவநீதன்**



# கர்ப்ப காலத்தில் ஏற்படும் முக்கிய பிரச்சினைகள்

### பிரசவம் எப்படி நடக்கும்?

குழந்தை திரும்பாமலிருக்கும் பட்சத்தில் பெரும்பாலும் சத்திரசிகிச்சை மூலமே குழந்தை பிரசவிக்கப்படும். சில சந்தர்ப்பங்களில் வைத்தியர் குழந்தையை கைகளால் திருப்ப முயற்சிக்கக்கூடும். இவ்வாறு கையால் திருப்ப முடிந்தால் சத்திரசிகிச்சை தவிர்க்கப்படலாம்.

சில சந்தர்ப்பங்களில் குழந்தை காலாலேயே பிறக்க விடப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அனுபவமுள்ள மகப்பேற்று வைத்தியர் ஒருவர் உடனிருக்கவேண்டும்.

### கர்ப்ப காலத்தில் ஏற்படும் ஏனைய பிரச்சினைகள்

| நோய் | குணங்குறிகள், விளக்கம் | தடுப்பு முறை |
|---|---|---|
| இரத்தச்சோகை. (Anaema) | முகம் வெளிறல், களைப்பு உடற்சோர்வு, நெஞ்சுப் படபடப்பு. | இரும்புச் சத்துக்குளிசைகள், கீரை, ஈரல்வகை, பூச்சித்தடுப்பு. |
| சிறுநீரகப் பாதையில் கிருமித்தாக்கம். (urinary Tract in-Fection) | சிறுநீர்கழிக்கும்போது எரிவு, காய்ச்சல், அடிக்கடி சிறுநீர்போதல். | அதிகளவு நீர் உட்கொள்ளுதல், ஒழுங்கான சலப் பரிசோதனை. |
| மலச்சிக்கல், மூல வருத்தம். | மலத்துடன் இரத்தம் மலவாசலில் சதை போன்றிருத்தல். | அதிகளவு நீர், பழங்கள் உட்கொள்ளல். பெரும்பாலும் குழந்தை கிடைத்ததும் சுகமாகும். |
| வெள்ளைபடுதல். | பெண் உறுப்பில் கடி, எரிச்சல். | சவர்க்கார பாவனையை தவிர்க்கவும். இப்பகுதியை உலர்ந்த நிலையில் வைத்திருக்கவும். சலரோகத்திற்கான பரிசோதனை. HVS பரிசோதனை, கிருமித்தாக்கம் எனில் மருந்துகள் தேவைப்படும். |
| கால்வீக்கம். | அதிக நேரம் நிற்பவர்களுக்கு ஏற்படும். | குருதியமுக்கம், மற்றும் சிறுநீரைப் பரிசோதிக்க வேண்டும். பெரும்பாலும் கால்வீக்கம் மட்டும் காணப்படின் பிரச்சினைகள் இராது. படுக்கும்போது காலை உயரத்தில் வைக்கவும். |
| கால்பிடிப்பு. | அநேகமாக நித்திரையில் ஏற்படும். | விற்றமின் E குளிசைகள். |

(தொடரும்)





# லேடிஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# எண்ணெய் பசை சருமம் உடையவரா?



வெயில் காலத்தில் வெளியில் போவதென்பது கடினமான ஒன்றாகத்தான் இருக்கும். உங்களுக்கு எண்ணெய் பசை சருமமாக இருந்தால் கொளுத்தும் வெயில் உங்கள் எண்ணெய் பசையை மேலும் அதிகரிக்கச் செய்து உங்கள் முக அழகை கெடுத்துவிடும்.

வெள்ளரிக்காயை, தினமும் காலையில் முகத்தில் தேய்த்துவர முகத்தில் அதிகமாக எண்ணெய் வழிவதை தவிர்க்கலாம். வெள்ளரிச்சாற்றுடன், பால் பவுடர் கலந்து தடவினாலும், எண்ணெய் வழியாமல் முகம் பிரகாசமாக காணப்படும். இதை தொடர்ந்து ஒரு மாத காலமாவது பின்பற்றவேண்டும்.

தக்காளி பழத்தை நன்கு பிழிந்து சாறாக எடுத்து முகத்தில் தடவி காய்ந்தபின், கழுவினால் எண்ணெய் வழிவது கட்டுப்படும். தக்காளியுடன், பால் மற்றும் முட்டையின் வெள்ளைக்கருவுடன், கரட் துருவலை கலந்து முகத்தில் தடவினால், அதிகமாக எண்ணெய் வழிவது குறையும்.

எண்ணெய் பசை சருமத்தினர், அடிக்கடி குளிர்ந்த தண்ணீரில் முகம் கழுவவேண்டும். முகத்தை அலம்ப சோப்பிற்கு பதில் கடலை மாவை பயன்படுத்தலாம். இதனால், எண்ணெய் வழிவது குறைவதோடு, முகமும் பளபளப்பாக இருக்கும்.

எலுமிச்சை சாறு, முட்டையின் வெள்ளைக்கரு, திராட்சை சாறு ஆகியவற்றை சம அளவு எடுத்துக்கொண்டு அவற்றை நன்றாக கலக்கி, முகத்தில் பூசவேண்டும். சிறிதுநேரம் கழித்து முகத்தை தண்ணீரால் கழுவவேண்டும்.

பப்பாளி கூழ், முல்தானி மட்டி, வேப்பிலை பொடி ஆகியவற்றை நன்றாக பசைபோல் குழைத்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவவேண்டும். இவ்வாறு வாரம் இரண்டு முறை செய்தால், முகத்தில் வழியும் அதிகப்படியான எண்ணெய் தன்மை குறையும். முகத்தில் எண்ணெய் பசை நீங்கி பொலிவுபெற மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றினால் கொளுத்தும் வெயிலிலும் நீங்கள் அழகு ராணிதான்.



# கணவன் - மனைவி இடையே மூன்றாவது நபரின் குறுக்கீடு

திருமண வாழ்வில் பல பிரச்சினைகள் வருவது பொதுவான ஒன்றாகும். நண்பர், கணவர், மனைவி, உடன்பிறந்தவர்கள், அல்லது பெற்றோருடனான உறவு என்று எந்த உறவாக இருந்தாலும் அதனை சரியான முறையில் நிலைநிறுத்துவது என்பது அவசியமான ஒன்றாகும்.

திருமணம் என்னும் உறவு சிறப்பாக இருப்பதற்கு கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து - நன்கு புரிந்து வாழவேண்டும். இருவருக்கும் இடையேயான உறவை வலுப்படுத்த ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அனுசரித்து வாழவேண்டும்.

அப்படி இருந்தால் அவர்களுக்கிடையே மூன்றாம் நபர் நுழைந்தாலும் அவர்களின் உறவு பாதிப்படையாது. சிலநேரங்களில் அது மூன்றாம் நபரின் நுழைவால்கூட ஏற்படும். இந்த மூன்றாம் நபரின் நுழைவு நமது உறவை கட்டாயம் பாதிக்கக்கூடும். அதனால் உறவுகளுக்கிடையே மூன்றாம் நபரை தவிர்ப்பது கட்டாயமான ஒன்றாகும். மூன்றாம் நபரின் நுழைவை தவிர்ப்பதற்கான சில வழிகளை இப்பொழுது படிக்கலாம்.

உங்கள் உறவுகளிடையே உங்களின் உற்ற நண்பர்கூட பிரச்சினைகளுக்கு காரணமாக மாறிவிடலாம். அதனால், கவனமாக இருக்கவேண்டும். உங்கள் கணவருக்கோ அல்லது மனைவிக்கோ நீங்கள் அவரை ஒதுக்குகின்றீர்கள் என்னும் எண்ணத்தை உருவாக்கக்கூடாது.

மூன்றாம் நபரின் நுழைவை கண்காணித்து அவருடனான உறவை தவிர்க்கவேண்டும். உங்கள் கணவருடன் அல்லது மனைவியுடன் போதுமான நேரத்தை செலவிடவேண்டும். இதற்காக, உங்கள் நண்பரை ஒதுக்கிவிடவேண்டாம்.

இந்த மூன்றாம் நபரின் உறவில், நமது உரையாடல்களை நமக்குள்ளேயே வைப்பது சிறந்ததாகும். அவரை இதில் இருந்து சற்று விலக்கி வைப்பது அவசியமாகும். மூன்றாம் நபரின் உறவால் உங்களிடையே அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

மூன்றாம் நபருடனான உறவில், உங்கள் கணவருடனான அல்லது மனைவியுடனான தனிநபர் உறவில் கவனம்செலுத்துவது என்பது மிகச்சிறந்த ஒன்றாகும். இது பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் தவிர்ப்பதற்கும் உதவிபுரியும்.

உங்கள் நண்பரை ஒதுக்குவதற்கோ அல்லது அவரின் உறவை தவிர்ப்பதற்கோ பதிலாக உங்கள் கணவருடனான அல்லது மனைவியுடனான உறவை வலுப்படுத்தலாம். இது உங்கள் உறவுகளுக்கிடையேயான எதிர்மறை எண்ணத்தை போக்குவதற்கு சிறந்த வழியாகும்.

எல்லோருக்குமே எல்லை உண்டு. அதனால் மூன்றாம் நபரின் உறவில் எல்லைகளை வகுப்பது முக்கியமான ஒன்றாகும். அதனால், அவருடன் எல்லையுடன் பழகி உங்கள் உறவை மேம்படுத்தி கொள்ளுங்கள். உங்கள் உறவு உங்களுக்கு மகிழ்ச்சியளிக்க வேண்டுமானால், பொறுமையை கடைப்பிடித்து பிரச்சினைகளை சந்திக்கவேண்டும்.



# பஞ்சாபி முட்டை மசாலா

**தேவையான பொருட்கள்:**

முட்டை - 4 (வேகவைத்து தோலுரித்தது), வெங்காயம் - 1 (நறுக்கியது), பிரியாணி இலை - 1, சீரகம்- 1கரண்டி, தக்காளி சாறு- 1 மேசைக்கரண்டி, மிளகாய் தூள் - 1 கரண்டி, மல்லி தூள் - 1 கரண்டி, மஞ்சள் தூள் - 1/2 கரண்டி, மாங்காய் தூள் - 1 கரண்டி, காய்ந்த வெந்தய இலை - 1 மேசைக் கரண்டி (கையால் பொடி செய்தது) உப்பு - தேவையான அளவு, மசாலா -1/2 கரண்டி, எண்ணெய் -2மேசைக்கரண்டி, தண்ணீர் - 1கப்,

**மசாலா பேஸ்ட்டிற்கு:** வெங்காயம் - 2, பச்சை மிளகாய் - 2, இஞ்சி - தேவைக்கேற்ப, பூண்டு - 5 பற்கள், கிராம்பு - 2, பட்டை - 1, சோம்பு - 1 கரண்டி, தக்காளி - 2.

**செய்முறை:** முதலில் மசாலா பேஸ்ட்டிற்கு கொடுத்த பொருட்கள் அனைத்தையும் மிக்ஸியில் போட்டு, நன்கு பேஸ்ட் செய்துகொள்ள வேண்டும். பின்பு ஒரு வாணலியை அடுப்பில்வைத்து, அதில் எண்ணெய் ஊற்றிக்காய்ந்ததும், சீரகம், பிரியாணி இலை, நறுக்கிய வெங்காயம் சேர்த்து, தீயை குறைவில் வைத்து 3-4 நிமிடம் வதக்கவேண்டும். பிறகு மஞ்சள் தூள், மிளகாய் தூள், மல்லி தூள், மாங்காய் தூள், தக்காளி சாறு சேர்த்து 4-5 நிமிடம் வதக்க வேண்டும். பின்னர் அரைத்து வைத்துள்ள மசாலா பேஸ்ட்டை சேர்த்து, 5-6 நிமிடம் வதக்க வேண்டும். பின் உப்பு, மசாலா சேர்த்து 2-3 நிமிடம் வதக்கி, தண்ணீர் ஊற்றி, வேக வைத்துள்ள முட்டையை இரண்டாக வெட்டிப்போட்டு, தீயை குறைவில் வைத்து, 5-6 நிமிடம் கொதிக்கவிட்டு, காய்ந்த வெந்தய இலையை தூவி இறக்கினால், சுவையான பஞ்சாபி முட்டை மசாலா தயார்.

## 250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-402

**கேள்வி:** எண்ணெய் பசை சருமம் உள்ளவர்கள் எதனால் முகம் கழுவவேண்டும்?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 21. 01.2014

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 402
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 400 இற்கான விடை :- 30 வயதுக்கு மேல்.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- வி.செல்வநாயகம், சிவன்கோவில் வீதி, புத்தூர்.

402

பெயர் : ..........
முகவரி : ..........
..........
தே.அ. அட்டை இல : ..........
விடை : ..........
..........
கையொப்பம் : ..........



# பெண்களும் குடும்ப வன்முறைகளும்

**பெண்களுக்கு** எதிரான வன்முறைகளுக்கு விடிவே கிடையாதா? கருவறையிலிருந்து கல்லறை வரை ஒரு பெண்படும் துன்பங்களுக்கு அளவேயில்லை. பொது இடங்களில் பெண்களின்மீது நடத்தப்படுகின்ற வன்முறைகள் ஓரளவிற்கு வெளியுலகிற்கு தெரிய வருகின்றன. ஆனால், தன் வசிப்பிடத்திலேயே ஒரு பெண் சந்திக்கிற வன்கொடுமைகள் எண்ணிலடங்காதவை.

உலகளவில் பெண்களின்மீது நடைபெறும் கொலைக் குற்றங்களில் 40 முதல் 70 சதவிகிதம் கணவராலோ, உடன்வசிக்கும் ஆண்மகனாலோ செயற்படுத்தப்படுகின்றன என்று அமெரிக்க நீதித்துறையின் (U.S. Department of Justice) வெளியீடு கூறுகிறது. திருமணமான மூன்றில் ஒரு பெண் கணவரால் ஏதாவது ஒரு காரணத்துக்காக கன்னத்தில் அறையப்படுகிறார்.

கூடுதலாகப் பெண்கள் குடும்ப உறுப்பினர்களால் கீழே தள்ளிவிடுதல், கையை முறுக்குவது, காலால் உதைப்பது, உடலைக் குலுக்கி துன்புறுத்தல், தலைமுடியைப் பிடித்து இழுத்தல், மாட்டை அடிப்பது போல அடிப்பது போன்ற பல வன்கொடுமைகளுக்கு ஆட்படுகின்றார்கள்.

மேலும் பெண்கள் தங்கள் கணவராலோ, உடன்வசிக்கும் ஆண் துணைவராலோ அவர்கள் விருப்பத்தை மீறி கட்டாயப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பெரும்பாலான குடும்ப வன்முறைகள் சீதனக் கொடுமையின் வெளிப்பாடாகவே அமைகின்றன. ஏதோ இதுபோன்ற குடும்ப வன்முறைகள் ஏழை எளிய பெண்களுக்கு மட்டும்தான் ஏற்படுகிறது என்றில்லை. நடுத்தர மற்றும் பணம் படைத்த பெண்களுக்கும் நடக்கிறது.

நகர்ப்புறம் மற்றும் கிராமத்துப் பெண்களுக்கும் ஏற்படுகிறது. படிப்பறிவில்லாத அல்லது மெத்தப்படித்த பெண்களுக்கும் ஏற்படுகிறது. வீட்டிலிருக்கும் குடும்பத் தலைவிக்கும் வெளியே சென்று பொருளீட்டும் மனைவிக்கும் ஏற்படுகிறது. குடும்ப வன்முறை என்பது எல்லா தரப்பு பெண்களையும் பாதிக்கும் ஒரு விஷயமாக இருக்கிறது.

அதேசமயம், இந்த மேலை ஏகாதிபத்திய நாடுகள், உலக நாடுகள் பலவற்றில், கடாபியை விட - பன்மடங்கு அழிப்புகளையும் கொடுமை களையும் மக்களுக்கு இழைத்துக் கொண்டிருந்தன.

1979 முதல் 1989 வரையில் ஆப்கானிஸ் தானில் சோவியத் நாட்டின் ஆதரவுபெற்ற ஆட்சி இருந்தது. சோவியத் படைகள் ஆப்கானில் இருந்தன. சோவியத் படைகளை வெளியேற்ற வேண்டும் என்று இசுலாமியத் தீவிரவாதக் குழுக்கள் போராடின. பல இசுலாமிய நாடுகளிலிருந்தும் இளைஞர்கள் 'இப்புனிதப் போரில்' ஈடுபட்டனர். ஒரு இலட்சம் இசுலாமிய இளைஞர்களுக்கு அமெரிக்கா ஆயுதங்களும், பயிற்சியும் அளித்தது. இதற்காகப் பெருந் தொகையைச் செலவிட்டது. 1989 இல் சோவி யத் படைகள் வெளியேறிய பிறகு, ஆப்கனில் போரிட்ட இசுலாமிய இளைஞர்கள் தத்தம் நாடுகளுக்குத் திரும்பினர்.

அவ்வாறு லிபியாவுக்குத் திரும்பிய இளைஞர் கள் அப்துல் - அகீம் - பெல்ஹஜ் என்பவர் தலைமையில் ஒன்றுதிரண்டனர். பெல்ஹஜ், லிபியா வில் 1966இல் பிறந்தவர். 1988இல் பொறியியல் பட்டம் பெற்றார். உடனே ஆப்கான் சென்று போரில் ஈடுபட்டார். பெல்ஹஜ் 1990இல் 'லிபிய இசுலாமிய போர்க்குழு' என்ற அமைப்பை உருவாக்கினார். கடாபியின் அரசு, இசுலாமிய மதகுருக்களை மதிப்பதில்லை. மசூதிகளின் சொத்துகளை அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கிறது. இசுலாமியச் சட்டங்களை முறையாகப் பின் பற்றுவதில்லை என்கிற காரணங்களுக்காக, இசுலாமியப் போர்க்குழு, 1993 மற்றும் 1995களில் கடாபி ஆட்சியை எதிர்த்துப் போராடியது. இவர்களைக் கடாபி கடுமையாக ஒடுக்கினார். அதன்பின், இவர்களில் பெரும்பாலோர் பிற நாடுகளுக்குத் தப்பி ஓடினர்.

ஆனால், இதே அப்துல் - அகீம் - பெல்ஹஜ் தலை மையிலான படைதான் 21.8.2011 அன்று தலைநகர் திரிபோலிக்குள் நுழைந்து அந்நகரைக் கைப்பற்றியது. இத்தலைகீழ் மாற்றம் எப்படி நிகழ்ந்தது?

2001 செப்டம்பர், 11 அன்று இரட்டைக் கோபுரத் தகர்ப்புக்குப்பின், அல்கொய்தா அமைப்போடு தொடர்புடைய இசுலாமியத் தீவிரவாதிகளை அமெரிக்கா வேட்டையாடத் தொடங்கியது. அவ்வாறு தேடப்பட்டவர்களில் பெல்ஹஜ்ஜும் ஒருவர். இவர் மலேசியாவில் கைதுசெய்யப்பட்டு, பாங்கொங் சிறையில் கொடுமையாகத் துன்புறுத்தப்பட்டார். அதன்பின் லிபியாவில் சிறையில் அடைக்கப்பட்டார்.

இசுலாமிய தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக அமெரிக்கா கடாபியின் ஆதரவை நாடியது. லிபியாமீது விதிக்கப்பட்டிருந்த தடைகளை நீக்கவும் முன்வந்தது. ஆனால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் எண்ணெய் நிறு வனங்களை லிபியாவில் அனுமதிக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. கடாபி இதை ஏற்றுக்கொண்டார். அமெரிக்காவின் உளவுத்துறையான சி.அய்.ஏ.வும் கடாபி அரசும் இசுலாமிய தீவிரவாதிகளை ஒடுக்குவதில் ஒன்றி ணைந்து செயல்பட்டனர்.

உண்மையில், பன்னாட்டு போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டிக்கப்பட வேண் டியவர்கள், அமெரிக்காவும், அதன் ஏகாதிபத்திய கூட்டாளி நாடுகளான பிரிட்டன், பிரான்சு, இத்தாலி முதலான நாடுகளேயாகும். உலக பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற முழக் கத்துடன், அமெரிக்காவின் தலைமையிலான கூட்டுப்படைகள் ஆப்கானிஸ்தான் மீதும், ஈராக் மீதும் படையெடுத்து அந்நாடுகளைக் கைப் பற்றின. ஆப்கானில் ஒரு இலட்சம் அமெரிக்கப் படை கள் நிலைகொண்டிருந்தன. ஈராக்கிலிருந்து 2011 டிசம்பருக்குள் அமெரிக்கப் படைகள் முழுவதும் திரும்பப் பெறப்படும் என்று ஒபாமா அறிவித்திருந்தார். ஆனால் இது நடக்காது என்று அரசியல் ஆய்வாளர்கள் அப்போது கூறினர்.

ஆப்கான், ஈராக் போர்களில் 10 இலட்சம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஈராக்கில் 20 இலட்சம் பேர் தம் வாழிடங்களிலிருந்து வெளி-யேறி அகதிகளாக வாழ்கின்றனர். ஆப்கானில் 2 இலட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டனர். 7,500 அமெரிக்கப் படையினர் மாண்டுள்ளனர். இதுவரை இவ்விரு நாடுகளின் மீதான போர்களுக்காக மட்டும் அமெரிக்கா 5 டிரில்லியன் டாலர் (ஒரு டிரில்லியன் என்பது ஒரு இலட்சம் கோடி) செல விட்டுள்ளது. ஆப்கானில் மட்டும் அமெரிக்க இரா ணுவத்திற்கான போர்ச்செலவு ஒரு மாதத்திற்கு 800 கோடி டொலர்.

உலகச் சந்தையில், டொலருக்கு உள்ள நாணயமாற்று மதிப்பின் தகுதியைப் பயன்படுத்தி, அமெரிக்கா கடன்வாங்கியே இப்போர்களை நடத்திக்கொண்டிருக்கிறது. இதனாலும் அமெரிக்காவின் பெருமுதலாளிக் குழுமங்களுக்கு ஏராளமான வரிச்சலுகைகளை அளித்ததாலும், தற்போது அமெரிக்காவின் கடன் 14.5 டிரில்லியனாக உயர்ந்துள்ளது. 15 கோடி மக்களைக்கொண்ட பங்களாதேஸ் ஓராண்டில் பயன்படுத்தும் எண்ணெயைவிட, அதிகமாக ஆப்கான் போரில் அமெரிக்கா பயன்படுத்தியது. ஈராக்மீதான போருக்குமுன் - 2002இல் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 25 டொலராக இருந்தது. 2008இல் இது 140 டொலராக உயர்ந்தது. இதனால் அமெரிக்காவில் மட்டு மின்றி, எல்லா நாடுகளிலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இதனால் உழைக்கும் மக்களின் வாழ்நிலை மேலும் சீர்குலைந்தது. அமெரிக்காவில் 6 பேரில் ஒருவர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றார். எனவே, மனிதகுலத்திற்கே மாபெரும் அச்சுறுத்தலாக விளங்குவது அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளுமே.

லிபியாவில் புரட்சிப் படைகள், கடாபி அரசுப் படைகளின் வான்தாக்குதல்களைத் தாக்குப்பிடிக்க முடியாமல், பின்வாங்கும் நிலை ஏற்பட்டது. எனவே பிரிட்டனும் பிரான்சும் வலியுறுத்தியதன் பேரில், அமெரிக்கா நேட்டோ படைகளை லிபியாவுக்கு அனுப்ப இசைந்தது. 2011, மார்ச் மாதம் நேட்டோ படைகள் லிபியாவுக்குச் சென்றன. கடாபியின் வானூர்தி தளங்களையும், படைத்தளங்களை யும் குண்டுவீசித்தாக்கின. டுரோன் எனப்படும் விமான ஓட்டுநர் இல்லாத விமானங்கள்மூலம் குண்டுகள் வீசப்பட்டன. ஒபாமா குடியரசுத் தலைவரான பிறகு ஆளில்லா வானூர்திகள் மூலம் குண்டுவீசுவது அதிகமாகிவருகிறது.

பாகிஸ்தான் பகுதியில் ஒளிந்திருக்கும் பின்லேடனின் அல்கொய்தாவினரைக் கொல்வது என்றபெயரால், 2009இல் 53 தடவை யும் 2010இல் 117 தடவையும், 2011 ஆக சுட்டுவரை 49 தடவையும் அமெரிக்கா வின் ஆளில்லா வானூர்தி தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் வெளி உலகிற்குத் தெரியாமல், பல ஆயிரம் பாகிஸ்தானிய குடிமக்கள் கொல்லப்பட்டனர். சிரியா, சோமா லியா, ஏமன் ஆகிய நாடுகள்மீதும் ஆளில்லா வானூர்தி தாக்குதல் நடத்திட அமெரிக்கா திட்டமிட்டது. அமெரிக்க-ஐரோப்பியக் கூட்டாளி நாடுகளின் தலையீட்டினால் நடக்கும் சிரியப் போரில் இலட்சக்கணக்கான அப்பாவி சிரியர் கள் இப்பொழுது மடிகிறார்கள். சிரியா அழிகிறது.

கடாபிக்கு எதிரான கிளர்ச்சி தொடங் கியதும், கடாபியுடன் அரசியலிலும், இராணுவத்திலும், உயர் அதிகாரப் பதவி களில் இருந்த பலர் புரட்சிப் படையின் பக்கம் சேர்ந்துகொண்டதுடன், அதை முன் னின்று நடத்தினர். மே மாதம் நேட்டோ படை நடத்திய தாக்குதலில் கடாபியின் மகன் சயீப்-அல்-அரா..ப்பும், இரண்டு பேரக் குழந்தைகளும் கொல்லப்பட்டனர்.

22.8.2011 அன்று புரட்சிப்படை தலைநகர் திரிபோலிக்குள் நுழைந்து அதைக் கைப்பற்றியது. கடாபியின் மூத்தமகன் சயீப்-அல்-இஸ்லாம் கைது செய்யப்பட்டார். கடாபி யின் மனைவியும் குழந்தைகளும் அல்ஜீரியாவில் அடைக்கலம் புகுந்தனர். கடாபி தலைமறைவானார். பின்னர் அகப்பட்டார். கொல்லப்பட்டார்.

ஆப்கானில் அமெரிக்காவின் முழு ஆதரவு பெற்ற ஆட்சி காபூலில் நிறுவப்பட்டுள்ள போதிலும், கிராமப் பகுதிகளும், மலைப் பகுதிகளும் இன்னும் தலீபன்கள் கட்டுப் பாட்டிலேயே உள்ளன. உள்நாட்டுப் போர் நடந்து கொண்டேயிருக்கிறது. அதேபோன்று ஈராக்கில் ஷியா-சன்னி-அமெ ரிக்கப் படைகள் என்கிற மும்முனைத் தாக்குதல்கள் பல ஆண்டுகள் நடந்தன. பெரும்பான்மையினராகவுள்ள ஷியா பிரிவி னரின் கை ஓங்கியுள்ள போதிலும், மோதல்களும், தற்கொலைப்படைத் தாக்குதல்களும் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றன.

அதைப்போலவே கடாபியின் வீழ்ச்சிக்குப் பின், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்று வதற்கான கடும் போட்டி நடந்தது. பெல்ஹஜ் தலைமையிலான லிபிய இசுலாமியப் போர்க் குழுவுக்கும், கடாபி ஆட்சியிலிருந்து வெளி யேறிய படைத் தளபதிகள், உயர் அதிகாரி கள் கொண்ட குழுவுக்கும் இடையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் கடும் போட்டி நிலவுகிறது. ஆட்சி அதிகாரத்தை இழந்த கடாபியின் இனக்குழுவினரும் மற்ற இனக்குழுக்களும் மோதின. ஒபாமா, "லிபியா சர்வாதிகாரியின் பிடியிலிருந்து விடுபட்டுவிட்டது. லிபியாவின் எதிர்காலம் இனி அந்நாட்டின் மக்கள் கைகளில் இருக்கிறது" என்று அறிவித்திருந்தார். பத்து ஆண்டுகளுக்குப்பின், ஆப்கானிலும், எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஈராக்கிலும், அமெரிக்கா கூறிவரும் சனநாயகத்தின் சட்ட ஆட்சி அமையவில்லை. அமெரிக்கப் படைகள் அந்நாடுகளில் நிலைகொண்டுள்ளன. மோதல் களும், உயிரிழப்புகளும் தொடர்கின்றன. எனவே லிபியாவில் இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு மக்கள் குருதி சிந்தவும், மடியவும் கொடுமைகளுக்கு ஆளாகவும் நேரிடுமோ?

முன்பு பாலஸ்தீனத்தை ஒடுக்க இசுரேலுக்கு ஆயுதங்களும், பணமும், வாரிவாரி வழங்கியதும், அண்மையில் ஆப்கான், ஈராக், லிபியா நாடுகள் மீது படையெடுத்ததும், உலக நாட்டாண்மையான அமெரிக்காவும், அதன் ஏகாதிபத்தியக் கூட்டாளி நாடுகளும் அரபு நாடுகளில் கொழித்திருக்கும் எண்ணெய் வளங்களைக் கைப்பற்றுவதற்கேயாகும். இதற்காக அரபு நாடுகள் பலவற்றில் அமெ ரிக்கா தன் படைகளை நிறுத்தியுள்ளது.

புவியியல் சார்ந்த அரசியல் இராணுவ ஆதிக்கத்தை நிலைநாட்டுவதன் வாயிலாக, உலக நாடுகளின் இயற்கை வளங்களையும் மக்கள் உழைப்பையும் சுரண்டிக் கொழுப்பதே இந்த ஏகாதிபத்திய நாடுகளின் குறிக் கோளாகும். எனவே இந்த ஏகாதிபத்தியங் களை எதிர்த்து வீழ்த்துவதன் மூலமே, உலகில் தேசிய இன மக்கள், அரசியல், பொருளியல், சமூக-பண்பாட்டு விடுதலையை அடையமுடியும்.

## உலகநாடுகளை உளவுபார்த்துக் கொண்டிருந்த அமெரிக்க ஏகாதிபத்தியம்

29அகவையான எட்வேர்ட் ஸ்னோடன் என்ற இந்த இளைஞன் நிச்சயமாக தண்டனைக் குரியக் குற்றவாளிதான் என வடஅமெரிக்கா வின் உளவுத்துறை இரகசியக் குழு (US Secret Committee on Inteligence) அமைப்பின் தலைவர் அறிவித்தார். அமெரிக்க அரசு அவருக்கு கைது ஆணைப் பிறப்பித்தது. பிரிட்டன் அரசு, தனது நாட்டு அனைத்து விமான நிறுவனங்களுக்கும் ஸ்னோடனுக்கு பயண அனுமதி கொடுக்கக் கூடாதென கடிதம் எழுதியது. ஸ்னோடன் 'தேசத்துரோகம்' செய்துவிட்டார் என அமெரிக்க அரசு அதிகாரிகள் கூச்சலிட்டனர்.

## அந்த இளைஞர் அப்படி என்ன செய்துவிட்டார்?

'தூதரகம்' என்றபெயரில் உலக நாடுகள் பலவற்றிலும் அலுவலகங்கள் அமைத்து, அந்தந்த நாடுகளை உளவுபார்த்துக் கொண் டிருந்த அமெரிக்க ஏகாதிபத்திய அரசை விக்கிலீக்ஸ் இணையத்தளம் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியது. தற்போது, 29 அகவையான எட்வேர்ட் ஸ்னோடன் என்ற அமெரிக்க இளைஞர், அமெரிக்க அரசு உலக நாடுகளை மட்டுமல்ல, தனது சொந்த நாட்டு மக்களின் அந்தரங்கங்களிலும் தலையிட்டு உளவு பார்த்துள்ளது என ஆதாரங்களுடன், இரகசிய ஆவணங்களை வெளியிட்டு அம் பலப்படுத்தினார்.

இராணுவ வீரராக நாட்டுக்குச் சேவை புரியவேண்டும் என்று எண்ணிய எட்வேர்ட் ஸ்னோடன், அதற்காகப் பயிற்சிகள் மேற் கொண்டு 2004ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தில் சேர்ந்தவர் ஆவார். ஈராக்கில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகத்தான் போர் புரிகிறோம் என்ற அமெரிக்காவின் பரப்புரையை முழுமையாக நம்பி, ஈராக் போரில் ஆர்வத்துடன் ஈடுபட்ட ஸ்னோடன், அந்தப் பரப்புரை முற்றிலும் தவறு என்பதை அங்கு சென்றபின்னர்தான் புரிந்து கொள்ளமுடிந்தது என்கிறார்.

அதன்பின்னர், விபத்து ஒன்றின் காரண-மாக உளவுப் பிரிவில் பணியமர்த்தப்பட்டார் ஸ்னோடன். அமெரிக்காவின் உளவு நிறுவன மான சி.ஐ.ஏ.வின் தேசியப் பாதுகாப்புத் துறை யின் தொழில்நுட்பப் பிரிவில், உளவுப் பார்ப்பதற்கான அதிநவீனக் கருவிகளை உருவாக்கும் பிரிவில் பணிபுரிந்தார் ஸ்னோடன். தனி மனித சுதந்திரம் குறித்து உலகெங்கும் வாய் கிழியப்பேசும் அமெரிக்க அரசு, தன்னுடைய உளவு நிறுவனங்களின் மூலம் தனது சொந்த நாட்டு மக்களையே உளவு பார்க்கும்வகையில் கருவிகள் தயாரித்துக் கொண்டிருந்தது.



அப்பணியில் ஈடுபடுத்தப்பட்ட ஸ்னோடன், தாம்செய்வது தவறு என்பதை மனச்சாட்சியுடன் எண்ணிப் பார்க்கத் தொடங்கினார். தன்னுடைய மக்களின் அந்தரங்கங்கள் உட்பட அனைத்தையும் கண்காணிப்பது குறித்து மனம் வருந்தினார். அப்போது அமெரிக்க அதிபராக இருந்த ஜோர்ஜ் புஷ் காலத்தில் தொடங்கிய இந்த உளவுப்பணி, ஒபாமா வந்தபிறகு மாறிவிடும் என நம்பினார். ஆனால், ஒபாமா வந்தபின் இந்த உளவுப்பணி தீவிரப்படுத்தப்பட்டதே தவிர கைவிடப்படவில்லை.

அப்போது, அமெரிக்காவின் உளவு வேலைகளை அம்பலப்படுத்திய விக்கி லீக்சின் பணி, ஸ்னோடனிற்கு உணர்வூட்டியது. தன்னுடைய மனச்சாட்சிக்கு எதிராக பணிபுரிய மறுத்த ஸ்னோடன், அமெரிக்க அரசை அம்பலப்படுத்தியாக வேண்டுமென தனது உயிரையும் துச்சமாக நினைத்துத் தான், அமெரிக்க உளவு இரகசிய ஆவணங்களை வெளிக்கொணர்ந்தார். தி கார்டியன் மற்றும் தி வாஷிங்டன் போஸ்ட் ஆகிய அமெரிக்காவின் முன்னணி செய்தி ஊடகங்களுக்கு, இது குறித்த இரகசிய ஆவணங்களைக்கொடுத்து இதை அம்பலப்படுத்தினார்.

இது உலகெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அவ்வப்போது சீன அரசு தன்னுடைய சொந்த நாட்டு மக்களையும், பிறநாடுகளையும் உளவுபார்ப்பதை நிறுத்திக் கொள்ளவேண்டும் எனக்கூறும் அமெரிக்க வல்லாதிக்க அரசு, தன்னுடைய சொந்த நாட்டு மக்களையே உளவுபார்ப்பது அம்பலமானதும், தலைகுனிந்து நின்றது. ஆனாலும், இதற்காக மன்னிப்பேதும் கோராத அமெரிக்கா, அதிலென்ன தப்பு என வெட்கமின்றிக் கேள்வி கேட்டது.

கடைசியாக ஹொங்காங் சென்ற ஸ்னோடன், அங்கிருந்து தலைமறைவாகி ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவிற்குச் சென்றார். அவரைக் கைது செய்து தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் அல்லது அவரை நாடு கடத்தவேண்டும் என்ற அமெரிக்க அரசின் கோரிக்கையை, ரஷ்யா புறக்கணித்த நிலையில், அவர் தலைக்கு விலை வைத்துள்ளது அமெரிக்கா.

"நான் செய்த குற்றத்திற்காக எனக்கு வாழ்நாள் முழுவதும் தண்டனை கிடைக்கும் என்பது எனக்குத் தெரியும். இனி நான் எனது குடும்பத்தைக்கூட காணமுடியாது. இந்தச் செயலுக்காக என் உயிர்கூட பறி போகலாம். ஆனால், தனிமனித சுதந்திரத்தை மதிக்காமல், தன் சொந்த நாட்டு மக்களை ஓர் அரசு உளவுபார்ப்பதை எனது மனச்சாட்சி சகித்துக்கொள்ளவில்லை" என்கிறார் எட்வேர்ட் ஸ்னோடன்.

விக்கிலீக்ஸ் ஆசிரியர் ஜூலியன் அசாஞ்சே மீது பொய் வழக்குகள் புனைந்து கைது செய்யமுயன்ற அமெரிக்கா, அதேபோல் ஸ்னோடனையும் கைதுசெய்ய முற்படலாம். ஆனால், தனிமனித சுதந்திரத்தைக் காப்ப தாகச் சொல்லிக்கொள்ளும் வட அமெரிக்கா, தன்னுடைய அம்பலமான கோர்முகத்தை இனி சரி செய்துகொள்ள முடியவே முடியாது.

## அமெரிக்க சிறைகளில் நிர்வாணமாக்கி துன்புறுத்தல்!

வீக்கிலீக்ஸ் இணையத்தளத்துக்கு, இராணுவ இரகசியங்களை கொடுத்ததாக கைது செய்யப்பட்டவரை, வாரத்துக்கு, குறைந்தது ஒரு நாளாவது ஆடைகள் இல்லாமல் தூங்கும்படி அமெரிக்க சிறை அதிகாரிகள் தண்டனை அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

2010ம் ஆண்டின் இறுதியில் வீக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் மூலம், அமெரிக்கா இராணுவத்தின் பல்வேறு முக்கிய விஷயங்கள் வெளியிடப்பட்டன. இதன்மூலம், ஈராக் மற்றும் ஆப்கானில் அமெரிக்க இராணு வத்தினரின் மனித உரிமை மீறல்கள் வெளிச்சத்துக்கு வந்தன. அமெரிக்க இராணுவ ரகசியங்களை, வீக்கிலீக்ஸ் இணையத்தளத்துக்கு கொடுத்ததாக, அமெரிக்க இராணுவ வீரர் பிராட்லி மேனிங் (23) என்பவர் கைதுசெய்யப்பட்டார். ஏழு மாதங்கள் வரை இவரை காவலில் வைக்க, கோர்ட் உத்தரவிட்டுள்ளது. வேர்ஜினியாவில் உள்ள கடற்படை சிறை வளாகத்தில் அப்போது இவர் சிறை வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், பிராட்லி மேனிங்கிற்கு, சிறை அதிகாரிகள் விசித்திரமான தண்டனையை வழங்கியுள்ளதாக தகவல் வெளியானது. வாரத்துக்கு, குறைந்தது ஒரு நாளாவது ஆடைகள் இல்லாமல் தூங்கவேண்டும் என அவருக்கு உத்தர விடப்பட்டதாம். இந்த தகவலை அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனும் உறுதிப்படுத்தியுள்ளது. இராணுவத் தலை மையக செய்தி தொடர்பாளர் டேவ் லாபன் கூறுகையில், "பிராட்லி மேனிங்குக்கு தண்டனை வழங்கப்பட்டது உண்மைதான். இருந்தாலும், அது குறித்து விரிவாக எதுவும் பேசவிரும்பவில்லை" என்றார்.

# உள்ளூராட்சி ஆணையாளர் நியமனமும் அர்த்தபுஷ்டியான சிந்தனையும்

**கிழக்கு** மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் புதிதாக நியமிக்கப்பட்டது முதல் பெரும் அரசியல் குழப்பமே ஏற்பட்டுவருகிறது, இருந்தாலும், அவர் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இவ்விவகாரத்தின் முக்கியம் கருதி இதனை இவ்வாரம் ஆராயலாம்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக இருந்த உதயகுமார் இவ்வருட ஆரம்பம் முதல் மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளராக நியமிக்கப்பட்டு புதிய ஆணையாளராக எம்.வை.சலீம் ஆளுனரால் நியமிக்கப்பட்டார். இதனையடுத்து, பல்வேறு பொறுப்பான அமைச்சர் ஒரு முஸ்லிம், மேற்குறிப்பிட்டவாறு உள்ளூராட்சி ஆணையாளர் அமைவாரா்யின் 3 இனங்களும் சமமாக வாழும் இந்த மாகாணத்தில் ஒரே இனத்தைச் சேர்ந்தவர் இருக்கும்போது இந்த மாகாணத்தின் இனச் சமத்துவம் பேணப்பட மாட்டாது. அந்தவகையில், கிழக்கு மாகாணத்தில் நாம் பேணிவந்த இனசார்பின்மையை யிட்டு நாம் விசனமடைவோம்.

எனவே தற்போதைய உள்ளூராட்சி ஆணையாளரையே அதில் இருத்துமாறும், இல்லாத விடத்து இன்னொருவரை எதிர்பார்க்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னுமொரு சிறுபான்மை சமூகத்தினை அடக்கி ஆள வேண்டும், அடிமைகள் போல் நடாத்தவேண்டும் என எதிர்பார்க்கின்ற ஓர் கேவலமான சிந்தனையை இவர்கள் முற்றாக மாற்றவேண்டும்.

முஸ்லிம் காங்கிரசினை கிழக்கில் ஆட்சியமைப்பதற்காக முதலமைச்சரை விட்டுத்தருகின்றோம் என்று பேசிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான ஓர் கபட நாடகத்தை ஆடியிருக்கின்றது என்பது இங்கு தெளிவாகின்றது. திறமை அடிப்படையிலும் அனுபவ அடிப்படையிலும் கிடைக்கப் பெறுகின்ற ஓர் அரச நியமனத்தைக் கூடக் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகின்ற இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா முஸ்லிம்களுடைய அரசியல் அபிலாசைகளையும் நியாயமான வளப் பங்கீடுகளையும் அதிகாரங்களையும் கூட்டாட்சியின் மூலம் முஸ்லிம்களுக்கு கொடுக்கப்போகின்றது என்றவகையில் மிக நீண்டதாக அவருடைய அறிக்கை அமைந்திருந்தது.

பட்ட கருத்துக்கள் பலராலும் வெளியிடப்பட்டுவருகின்றன. இதில் இரண்டு அறிக்கைகளே மிக முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில், இம்மாதம் முதலாம் திகதி கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நியமனத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பமிட்டு கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜயவிக்ரமவிற்கு கடிதமொன்றை கையளித்துள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.தண்டாயுதபாணி, ஆர்.துரைரெட்ணம், ஜீ.கருணாகரம் (ஜனா), கே.துரைராஜசிங்கம், ஜீ.கிருஸ்ண பிள்ளை, என்.இந்திரகுமார் (பிரசன்னா), ரி.கலையரசன், கே.நாகேஸ்வரன், எம்.நடராஜா, எம்.ராஜேஸ்வரன், ஜே.ஜனார்த்தனர் ஆகியோர் இக்கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்தக் கடிதத்தில், தமது வேண்கோளுக்குரிய எட்டுக்கும் மேற்பட்ட காரணங்களை அவர்கள் முன்வைத்துள்ளனர். அதில். ''தமிழ் மக்களை பொறுத்த வரையில் கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி என்ற விடயம் மிக முக்கியமானதாகும். கடந்த 30 வருடங்களாக கிழக்கு மாகாணத்தில் கட்டமைவில்லாத ஏற்பாடுகள்தான் இருந்து வந்தது. இதனால் உள்ளூராட்சி சபைகளில் பல பிரச்சினைகள் உருவாகின. இதனால் கிழக்கு மாகாணத்தில் இவற்றை ஒழுங்குபடுத்த வேண்டியது அவசியமாகும்.

இதேநேரம், தற்போது உள்ளூராட்சி ஆணையாளராக முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த ஒருவரை நியமிக்கவுள்ளதாக நாம் அறிகின்றோம். இது நடைபெறுமாயின் அதியுயர் மட்டத்திலிருந்து அடிமட்டம் வரையான உள்ளூராட்சிக்குப் பொறுப்பானவர்கள் அனைவரும் முஸ்லிம்களாக இருப்பர்.

உதாரணமாக மத்திய அரசாங்கத்தின் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம், கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சிக்குப் மற்றைய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரை நியமிக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம். இந்த கோரிக்கை நியாயமானதொரு சமநிலைப்பட்ட நிர்வாகத்தை பேணுவதற்கான வேண்டுகோளாகும். இதற்கு மேலாக வேறு எதனையும் கருத்தில் கொண்டு எழுதப்படவில்லை'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் தொடர்பில் செய்திகள் வெளியானதையடுத்து, பெரும்பான்மை சமூகத்திடம் இருந்து அரசியல் அதிகாரம் கிடைக்கவேண்டும், சுயாட்சி கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் சமூகத்தினை அடக்கியாள நினைக்கக்கூடாது என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் நீண்டதொரு அறிக்கையை ஊடகங்களுக்கு வழங்கியிருந்தார்.

அவரது அறிக்கையில், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 11 பேர் கையொப்பமிட்டு கிழக்கு மாகாண ஆளுனருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளதாக ஊடகங்களில் பார்த்து வேதனை அடைந்தேன்.

இதனை நோக்குகின்ற போது, இந்த நாட்டின் சிறுபான்மையினராகவும் மொத்த சனத்தொகையில் 35 சதவீதத்திற்கு மேல் வாழ்கின்ற முஸ்லிம் சமூகத்தின் மீது நாட்டின் இன்னுமோர் சிறுபான்மை இனத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கொண்டிருக்கின்ற இனத்துவேஷத்தையும் முஸ்லிம்கள் தமிழர்களால் அடக்கியாளப்பட வேண்டும் என்கின்ற கருத்துக்கு தூபமிடுவதை போன்ற ஓர் செயலாகவே இதனைப் பார்க்க முடிகின்றது.

பெரும்பான்மை சமூகத்திடம் இருந்து அரசியல் அதிகாரம் கிடைக்க வேண்டும், சுயாட்சி கிடைக்க வேண்டும் என்று

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நியமனத்தின் ஊடாக ஏற்படுத்தப்படும் உள்ளூராட்சித் துறை குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்த ஆட்சேபத்தினை மட்டக்களப்பு மாவட்டத்தின் காணிப் பிரச்சினைகளையும், புலிகள் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமை குறித்தும் இன்னும் பல விடயங்கள் பற்றியும் பேசப்பட்டிருக்கிறது.

இது ஒரு வகையான அரசியல் விளையாட்டாக காணப்படுகிறது. என்றுதான் சொல்லவேண்டும். பல் இனம், பல்கலாசாரம் என்று இருக்கின்ற இலங்கையில், அரசாங்கத்திற்கு எவ்வளவு கெடுபிடி எல்லாவற்றிலும் இருக்கப் போகிறது என்பதற்கு இந்த கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணை யாளரது நியமனமும் நல்லதொரு எடுத்துக் காட்டாகவே அமைகிறது.

இனத்துவ எதிர்ப்பும் பிரச்சினைகளுமே இலங்கையில் நடைபெறும் எல்லாவிதமான முரண்பாடுகளுக்கும் போராட்டங்களுக்கும் காரணம் என்பதனை நன்கு எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும். அத்துடன் சிறுபான்மை இனங்கள் தங்களிடையே பிளவுபட்டுக் கொள்வதும் அதிகாரத்திற்காக பிடுங்குப்படுவதும் தற்போதைய சூழலில் யாருக்கும் ஆரோக்கியமானதாக அமையாது. இன்னொரு சாராருக்கு மகிழ்ச்சியையும் வாய்ப்புக்களையும் வழங்குவதாகவே அமையும் என்பதை சம்மந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நியமனம் ஏற்படுத்தியிருக்கும் குழப்பமானது, அரசியல் பிரச்சினையாக பார்க்கப்படாமல் உண்மையான பரஸ்பர விட்டுக்கொடுப்புடனும், ஆத்மார்த்தமான அரசியல் சிந்தனை களையும் கொண்டு வருவதாக இருக்கவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

**கிழக்கான்**

# சாதி வெறியும் தொலைக்கப்பட்ட தமிழ் தேசியமும்

**ஒரு** காலகட்டத்தில் இம்மண்ணில் இருந்து மறைந்து போயிருந்த சாதிப் பிரச்சினை இப்போது மீண்டும் சிறிது சிறிதாக வெளிவரத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக அரசியல் கட்சியொன்று தூபமிட்டு வருவதாக மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. தேர்தல் காலங்களில் சாதியம் பார்க்காமல் எல்லோர் வீடுகளுக்கும் சென்று கையெடுத்துக் கும்பிட்டு வாக்குவேட்டை நடாத்தி, பிரதேச சபைகள், மாகாண சபை என்றெல்லாம் ஆட்சி அதிகாரங்களைக் கைப் பற்றிக் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரே தற்போது சாதியம் பற்றி பேசி தமிழர்களை புறக் கணித்து நிற்கக்கூடிய அரசியல் கட்சியாக வளர்ச்சி கண்டுவருகின்றன.

அரசியல் கட்சி என்பது சாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதாகவும், ஏற்றத் தாழ்வுகள் என்ற பேச்சுக்கே இடமில்லாமலும் இருக்கப்படவேண்டிய ஒரு புனிதமான அமைப்பாகும். நாட்டையும், மக்களையும் கட்டியாளப் போகின்ற மக்கள் சக்திக்கு மேம்பட்ட அமைப்பாகும், இது ஒரு கௌரவத்துக்கும், மாண்புக்கும், மரியாதைக் கும் உரிய உயர்பீடமாக திகழவேண்டியது, அரசியல் கட்சிகளின் இருப்பிடமாக இருக்கக்கூடியது என மக்கள் மதித்து வருகின்றனர்.

ஒரு அரசியல்வாதி உருவாக, இடமளிப்பது அரசியல் கட்சிகள்தான். இவ்வாறு உருவாகும் அரசியல்வாதிதான் நாட்டின் தலைவராகவும், பாராளுமன்ற உறுப்பினர் களாகவும் பிரதேச சபை மற்றும் மாகாண சபை பதவி களை அலங்கரிப்பவர்களும் ஒரு அரசியல் கட்சி ஊடாக வந்தவர்கள் என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அதேவேளை மக்களினால் மதிக்கப்படும், அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்களில் வென்றதன் பின் சாதி பார்ப்பதை மக்கள் கேவலமான செயல் என்று கருதுகின்றனர். தேர்தல்களில் வாக்குக் கேட்பதற்கு முன்பு இவர்களின் சாதி வெறி எங்கே போனது என்று மக்கள் கேள்வி கேட்கவும் தொடங்கிவிட்டனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சாதிவெறி பிடித்தவர்களாக மட்டுமன்றி தமிழர்களை பிரித்துப் பார்ப்பதிலும் மிகப் பெரிய வெற்றிகண்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைவிட்டுள்ளதென்றும் இங்குள்ளவர்களின் நலன் சார்ந்த விடயங்களை கவனத்தில் எடுக்காத தலைமையே செயற்பட்டு வருகின்றது என்று கிழக்கு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குற்றஞ்சாட்டி வருகின்றார். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குற்றம் சாட்டுகின்றார் என்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்ற எண்ணம் எல்லோர் மனங்களிலும் கேள்வியாய் எழுந்து நிற்கின்றது.

கடந்த 65 வருடங்களாக தமிழர்களை சிங்கள அரசுகள் ஏமாற்றிவருவதாகவும், எங்களுடைய அதிகாரங்களைத் தருவதற்குக்கூட சிங்கள அரசு தயார் இல்லை எனவும் திட்டமிட்டு சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகளை அரசு பறித்து வருகின்றது. தடுத்து வருகின்றது. ''நாட்டில் தமிழர்கள் உரிமை இழந்து வாழ்கின்றோம். சர்வதேசமே தலையிடு'' என்று கோரிக்கை விட்டு வருகின்றனர் இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். ஆக சிங்கள அரசு எங்களை சிறுபான்மையாக மதித்து உரிமை தர மறுத்து வருவது உண்மையான விடயமென்றால், தமிழர்களுக்குள் ஒரு சிறுபான்மையை உருவாக்கி, சாதி வேறுபாடுகளை உண்டாக்கி, எங்களுக்குள் உரிமைகளையே பறித்துவிட்டு சாதியம் பேசும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு சிங்கள அரசை குற்றம்சாட்ட என்ன உரிமை இருக்கிறது?

தமிழ்த் தேசியம் என்றும், தமிழ் உணர்வு என்றும் பேசிக்கொள்ளும் இவர்களா, தமிழ்களின் தலைமைகள்?? புலம்பெயர் தமிழர்களின் பணத்திலே வாழ்ந்து வரும் இந்த தலைமைகளால் ஒருபோதும் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கவே முடியாது என்பதே உண்மையாகும்.

2014 ஆம் ஆண்டினை தேர்தல் ஆண்டாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த நிலையிலே மீண்டும் தமிழர்களை உசுப்பேற்றி, உணர்வேற்றி வாக்குக் கேட்க வருவார்கள். இவர்களுக்கு தகுந்த பாடத்தை ஒவ்வொரு தமிழனும் கொடுக்கவேண்டும். இந்தக் கட்டுரை மூலம் இவர்களின் தமிழ்த் தேசியம் என்ன என்பது புரிந்தாகிவிட்டது! எனவே இனிமேலும் தமிழன் தமிழனாக வாழ வேண்டுமென்றால் இவர்களின் போலியான அரசியல் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இல்லை என்றால் இன்னும் ஒரு நூறு ஆண்டுகளுக்கு மேலாக தமிழன் அடிமையாக வாழ்வேண்டுமே தவிர விடுதலையை அடைய முடியாது.

தமிழ் அரசியலில் இவர்களை தூக்கியெறிவதன் மூலமே தமிழர்களின் வாழ்வுக்கு விடிவு கிட்டும் வெளிச்சத்தை பார்க்கமுடியும். இல்லை என்றால்!!! விடை தெரியாதவர்களாக வாழ வேண்டிய பரிதாபமே மிஞ்சும்...!

**அளவெட்டி, ப.உதயகுமார்.**



# விளையாட்டு

ஜோசெப் கிருஷ்ணா

# இவ்வருடம் எப்படி?

**றொஜர்** பெடரருக்கு 2013ஆம் ஆண்டு வாய்ப்பாக அமையவில்லை. இந்த சுவிஸ் நாட்டு ரென்னிஸ் ஜாம்பவானுக்கு இப்பொழுது வயது முப்பதியிரண்டாகிறது. கடந்த ஆண்டு இவரது தரவரிசை மளமளவென்று சரிந்து 6ஆவது இடத்துக்குக் கீழ் இறங்கிவிட்டது. இதுவரை 17 கிராண்ட்ஸ்லாம் கிண்ணங்களை வென்ற இவர் 2014 இல் ஏதாவது கிராண்ட்ஸ்லாம்கள் வெல்வாரா என்பதே இப்போதுள்ள கேள்வியாக இருக்கிறது. பெடரர் நம்பிக்கை கொண்டவராகவே இருக்கிறார்.

2014 இல் தன்னால் சாதிக்கமுடியும் என்று நம்பிக்கை வெளிப்படுத்தியுள்ளார் அவர். நான்கில் ஒரு கிராண்ட்ஸ்லாமையாவது வெல்வேன் என்பது உறுதி. அதிலும் விம்பிள்டன் கிராண்டஸ்லாம் வெல்வதுதான் எனது இலக்கு என்று கூறியுள்ளார். அதேவேளை வேறெந்த கிராண்ட்ஸ்லாம்களை வெல்ல உத்தேசித்துள்ளார்கள் என்று கேட்டபோது 2014 இல் நடைபெற இருக்கும் நான்கு கிராண்ட்ஸ்லாம்களினையும் வெல்லவேண்டும் என்பதுதான் எனது உண்மையான விருப்பம் என்று கூறியுள்ளார். முந்தைய வருடங்களில் நான் காட்டிய திறமைகளை இம்முறையும் காட்டவேண்டும், நன்றாக முயற்சி செய்யவேண்டும், நிறைந்த தன்னம்பிக்கை கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். பெடரர் நிறையவே சாதித்தவர். தரம் ஒன்றை நீண்டகாலம் தன்னகத்தே வைத்திருந்தார். எதிரணி வீரரை இலகுவாகவே தோற்கடித்துக் கொண்டு வந்தவர். எனவே 2014 இலும் பழைய றொஜர் பெடரரைக் காணமுடியும் என்று நம்பலாம்.

பெடரரின் மீள் எழுச்சிக்கு பிரெஞ்சு ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளுக்கு முன்னதாக நடைபெறவுள்ள பிறிஸ்பேன் சர்வதேசப் போட்டிகள் ஒரு




நம்பிக்கையைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபுறம் செரினா வில்லியம்ஸ் 2013 இல் கலக்கியவர். இவரும் 17 கிராண்ட் ஸ்லாம்களுக்குச் சொந்தக்காரர். 2013 இல் மட்டும் பதினொரு வெற்றிக் கிண்ணங்களைக் கைப்பற்றியவர். அவற்றுள் பிரெஞ்சு மற்றும் யூ.எஸ் கிராண்ட்ஸ்லாம்கள் இரண்டும் அடக்கம்.

கடந்த வருடம் தான் விளையாடிய 82 போட்டிகளில் 78 இல் வெற்றிபெற்றவர். தரவரிசை ஒன்றில் அசைக்க முடியாமல் அமர்ந்திருப்பவர். செரினாவுக்கு உள்ள ஒரே பிரச்சினை கணுக்கால் உபாதை. 2012 இல் பிறிஸ்பேன் போட்டிகளை இந்தக் காரணத்தால் தவறவிட்டவர். ஆனால் 2013 இல் அசத்தலாக இந்தக் கிண்ணத்தை வென்றார். ஆனால் தொடர்ந்து நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் ஆட்டங்களில் கணுக்கால் உபாதை உக்கிரம் அடையவே காலிறுதி போட்டியுடன் வெளியேறினார்.

ஆனால் இம்முறை செரினா விட்டுக் கொடுப்பதாக இல்லை. ஐந்து முறை வென்ற கிண்ணத்தை இம்முறையும் வெல்வேன் என்று உறுதியுடன் கூறியுள்ளார் அவர்.



# இதுதான் வேண்டும்





**நியூசிலாந்து** மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டி ஐந்து மணித்தியாலங்கள் தாமதமாக ஆரம்பமாகி, இறுதியில் அணிக்கு 21 ஓவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டு விளையாடப்பட்டது. இந்த ஆட்டம் நியூசிலாந்துக்கு வெற்றியாக அமைந்தது. ஒன்றும் ஆச்சரியமில்லை.

ஏனெனில் நியூசிலாந்து அணியின் கோரி அன்டர்சன் கிரிக்கெட் சாதனையொன்றை ஏற்படுத்திச் சதம் போட்டார். 1996 இல் இலங்கைக்கு எதிராக சஹீட் அப்ரிடி 37 பந்துகளில் சதம் விளாசிய சாதனையை இவர் 36 பந்துகளில் முறியடித்துள்ளார்.

மொத்தத்தில் ஆட்டமிழக்காமல் 131 ஓட்டங்களை இவர் பெற்றிருந்தார். மேலும் இவரது சதத்தில் 14 சிக்ஸர்கள் அடக்கம். இந்தவகையில் இந்தியாவின் றோகித் சர்மா அவுஸ்திரேலியாவிற்கு எதிராக எடுத்த சிக்சர்கள் (16), ஷேன் வொட்சன் பங்களாதேஷ் அணிக்கு எதிராக எடுத்த 15 சிக்சர்களுக்கு அடுத்து மூன்றாவது அதிகூடிய சிக்சர்கள் எடுத்தவராக இருக்கின்றார். மேலும் அன்டர்சன் அரைச்சதம் கடக்க எடுத்த பந்துகள் இருபது மட்டுமே. அதோடு சுனில் நாராயனின் ஒரு ஓவரில் 4 சிக்சர்கள் விளாசியது இன்னொரு குறிப்பு.

இன்னொருபுறம் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களம் இறங்கிய ஜெஸி றைடர் 104 ஓட்டங்கள் குவித்தார். இதில் ஐந்து சிக்சர்கள் அடக்கம். எதிர்கொண்ட பந்துகள் 51 மட்டும். இது ஒரு நாள் போட்டிகளில் ஆறாவது வேகமாகப் பெற்ற சதமாக அமைகிறது.

கோரி அன்டர்சனின் சாதனை குறித்து சாஹிட் அப்ரிடி பேசுகையில், புதுவருடத்தில் எனக்குக் கிடைத்த முதல் செய்தி எனது சாதனை முறியடிக்கப்பட்ட செய்தியாகும். நான் ஓய்வுபெறும்வரை இச்சாதனை முறியடிக்கப்படாது என்றே நம்பியிருந்தேன். கோரி அன்டர்சன் என்ற பெயரை முன்னர் கேள்விப்பட்டதே இல்லை. எங்கிருந்தோ வந்தான், முறித்துவிட்டான் என் சாதனையை என்று கூறியுள்ளார். (1996ஆம் ஆண்டில் அப்ரிடி சாதனை படைத்தபோது 16 வயது மைனர் பையனாக இருந்தார்)

## TOP 10 – வேகமான சதங்கள் – ஒரு நாள் போட்டிகள்

| பெயர் | பந்துகள் | ஆறுகள் | நான்குகள் | மொத்தம் | எதிர் | வருடம் |
|---|---|---|---|---|---|---|
| கோரி அன்டர்சன் | 36 | 14 | 6 | 131* | மே.இந்தியா | 2014 |
| சஹீட் அப்ரிடி | 37 | 11 | 6 | 102 | இலங்கை | 1996 |
| மார்க் பௌச்சர் | 44 | 10 | 8 | 147* | தெ.ஆபிரிக்கா | 2006 |
| பிறைன் லாரா | 45 | 4 | 18 | 117 | பங்களாதேஷ் | 1999 |
| சஹீட் அப்ரிடி | 45 | 9 | 10 | 102 | இந்தியா | 2005 |
| ஜெஸி றைடர் | 46 | 5 | 12 | 104 | மே.இந்தியா | 2014 |
| சணத் ஜயசூரிய | 48 | 11 | 11 | 134 | பாகிஸ்தான் | 1996 |
| கெவின் ஓ பிறைன் | 50 | 6 | 13 | 113 | இலங்கை | 2011 |
| விராட் கோஹ்லி | 52 | 7 | 8 | 100* | அவுஸ்திரேலியா | 2013 |
| சாஹிட் அப்ரிடி | 53 | 4 | 17 | 124 | பங்களாதேஷ் | 2010 |

(*ஆட்டம் இழக்காமல்)

# அலைபாயுதே!

**இந்தியாவை** இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தோற்கடித்த தென் ஆபிரிக்கா தனது தரவரிசை முதன்மை நிலையை இன்னும் சில புள்ளி அதிகரிப்புடன் தக்கவைத்துக் கொண்டுள்ளது. தென்.ஆபிரிக்கா 133 புள்ளிகள் பெற்றிருக்கும் அதேவேளை இந்தியா இரண்டு புள்ளிகள் கீழ் இறங்கி 117 இல் நிற்கிறது.

இந்தவகையில் முதல் இரண்டு தரவரிசை அணிகள் புள்ளி வித்தியாசம் 16 ஆகிவிட்டது. சிலவேளை அவுஸ்திரேலியா ஆஷஸ் தொடரை ஆரம்பிக்கும்போது தரவரிசை ஐந்தில் இருந்தது. 101 புள்ளிகளுடன் இருந்த இந்த அணி 4-0 என்ற ஆஷஸ் தொடர் வெற்றிநிலையில் தரவரிசை நான்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியை மட்டும் தவிர்த்துக்கொண்டால் இலகுவாக மூன்றாவது இடத்துக்கு முன்னேறிவிடுவார்கள்.




தற்செயலாக இங்கிலாந்துவென்றால் 109 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், அவுஸ்திரேலியா 108 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் இருப்பார்கள். மறுபுறம் ஆஷஸ் முடிவுகளைப் பொறுத்து ஐந்தாம் இடத்துக்குத் தள்ளப்படும் பாகிஸ்தான் இலங்கையை 2 டெஸ்ட் போட்டிகளில் வென்றால் 105 புள்ளிகளையும் 3 போட்டிகளையும் வென்றால் 107 புள்ளிகளையும் பெறுவர்.

இதேவேளை இலங்கை பாகிஸ்தானை 2-0 என்றவாறு கவிழ்த்தால் இலங்கை பாகிஸ்தானை முந்திவிடும். இங்கு முக்கியமான விடயம் 2017 இல் நடைபெற இருக்கும் டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் முதல்தரவரிசை நான்கு அணிகள் மட்டுமே விளையாடத் தகுதி பெறும். இதன்காரணமாக ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு டெஸ்ட் போட்டியும் முக்கியமானதாக அமையும்.



A.பாரிஸ், மிகிந்தலை.



01

# சிதைந்த நிலவுகள்

> “மகள் சாப்பிடத்தான் ஒன்னும் இல்லே... அம்மாவுக்கு காய்ச்சல் குணம் மாறவில்லை, பெனடோல் ரெண்டை குடிச்சிட்டு படுக்கப்போறேன். அச்சிமுகமது காக்காட ஹோட்டலே ஏதாவது வாங்கிட்டு போவம்மா... தங்கச்சிக்கும் ஏதாவது வாங்கிக்கொடு” என்று தாய் கமலம் வார்த்தையை முடிப்பதற்குள் கீதாஞ்சலி குறுக்கிட்டாள்.

**அன்று** வழமைக்கு மாறாக வேளைக்கு விழித்துக்கொண்டாள் கீதாஞ்சலி.

உறங்கிக் கொண்டிருக்கும் தாயையும் சகோதரியையும் கூர்மையாய் நோக்கினாள்.

அவர்கள் இருவரும் ஆழ்ந்த தூக்கத்தில் தூக்கம் வாங்கிய சொத்தாய் கிடந்தார்கள். குடிசை வீட்டின் கிடுகுகளின் ஓட்டை வழியால் விடியற்காலை பால்நிலவு ஒளியை உள்ளே நுழைத்துக் கொண்டிருந்தது.

அது விடியலைக் காட்டியதால் காலைக்கடமைகளை முடித்தாள். தாயின் உடலை நோய் கொஞ்சம் கௌவிக் கொண்டிருந்தது! தாயின் கழுத்தில் - கை வைத்துப் பார்த்தாள். காய்ச்சல் கூடும் அறிகுறிகள்தான் அதிகம் இருந்தது!

கீதாஞ்சலி அடுப்பங்கரைக்கு சென்று கேத்தலில் தண்ணீர் கொஞ்சம் ஊற்றி வெந்நீராக்கும் பணியை ஆரம்பித்தாள்.

கேத்தலை அடுப்பில் ஏற்றி விட்டு மூடிவைத்திருந்த சட்டி, பானைகளை திறந்து பார்த்தாள். சோற்றுப்பானைக்குள் பழைய சோறு கொஞ்சம் இருந்தது! அதுவும் அடிப்பிடித்த சோறு!

நேற்று சமைத்த மீன்கறி அவ்வளவு நாவுக்கு ருசியாய் இருக்கவில்லை. இருப்பின் பசிக்கொடுமைக்கு சாப்பிட வேண்டிய தேவை அவளுக்கு ஏற்பட்டது! சாப்பிட்டாள். சாப்பிட்டுவிட்டு அடுப்புக்கு அருகில் அமர்ந்தவண்ணம் எதிர்காலக் கனவில் மிதக்க ஆரம்பித்தாள்.

எப்படிப் படிப்பது, எந்தப் பல்கலைக்கழகம் செல்வது, என்ன தொழில்புரிவது இப்படி பல வகை சிந்தனைகள் சிந்தையை ஆக்கிரமித்திருந்தது.

எது எப்படியாயினும் குடும்பத்தை எப்படியாவது கவனித்துக்கொள்ளும் பொறுப்பு அவள்மீதே சுமையாகத் தொங்கியது. அவள் குடும்பத்தில் இரண்டாவதாகப் பிறந்தாலும் மூத்தவளாகவே வளர்ந்தாள்!

அத்தனை பெரும்சுமையை அவள் மேல் ஏற்றக் காரணம், சமாதான ஒப்பந்தம்!

நான் அப்படி அடித்துக் கூறுவதற்கும் எடுத்துரைப்பதற்கும் முக்கிய காரணம்! இனம் தெரியாத துப்பாக்கி சூடுகளும் இனம் தெரியாதோரின் ஆள்கடத்தல்களும்தான்! அதில் கீதாஞ்சலியின் தந்தையும் சிக்கிக்கொண்டார்.

அத்தனை அவலப்படம் அவளின் மனச்சுருளில் அப்பிக் கிடந்தது. அவளின் எதிர்காலக் கனவுகளைக் கலைத்துவிட்டது!

டகடக எனும் கேத்தலின் மூடிச் சத்தம்!

உடனே அடுப்பு விறகுகளை இழுத்து நெருப்பை தணித்து விட்டு தேநீரை ஊற்றி கையில் ஏந்திக் கொண்டாள்.

“தங்கச்சிக்குட்டி படுத்தது போதும் எழுந்திரு...”

கீதாஞ்சலி கூறியவண்ணம் குடிசை வீட்டுக்குள் நுழைந்தாள். சுற்றிவர களிமண்ணால் சுவர் அமைத்தும் தென்னை ஓலையால் கூரை வேயப்பட்டும் இருந்தது அந்தக் குடிசை!

தங்கையை எழுப்பிய கீதாஞ்சலியின் குரல் ஒலி தாயையும் எழுப்பியது. “பிள்ளை நல்லா விடிந்துவிட்டது, ஏன் என்னை எழுப்பேல்லை?” என்று கேள்வியைத் தொடுத்த வண்ணம் போர்வையை அகற்றிவிட்டு தாய் கமலம் எழுந்துகொண்டாள்.

“நேற்றிரவு படுக்கும்போது காய்ச்சல் மாதிரி இருக்கு இன்னீங்க... விடியப்புறம் கையை வைத்துப் பார்த்தேன் காய்ச்சல் கூடுவதுபோல இருந்திச்சி... அதான்” என்று கூறியவண்ணம் தங்கையின் தேநீர் கோப்பையையும் தண்ணீர் கோப்பையையும் நீட்டினாள் கீதாஞ்சலி. தங்கை சீதாதேவி நித்திரைக்கு தவம் இருப்பதுபோல் போர்வைக்குள் மீண்டும் சுருண்டு கொண்டாள்.


“ஏய்... எழுந்திரடி பள்ளிக்கூடம் போகணும்” என்று கொஞ்சம் கோபமாய் அழுத்தினாள் அவளுடைய இனிமையான குரலால்! கீதாஞ்சலியின் குரலின் இனிமை சங்கீதம் போல் இருந்ததோ என்னவோ... தங்கை சீதாதேவி எழும்பவில்லை, தூக்கம்தான் அவளின் தோழன் போல் கிடந்தாள். கீதாஞ்சலிக்கு கோபத்தின் வேகம் இன்னும் கொஞ்சம் கூடியது.

உடனே கையில் இருந்த தேநீர் கோப்பையையும் தண்ணீர் கோப்பையையும் கீழே வைத்துவிட்டு தங்கையின் போர்வையை இழுத்து அகற்றிவிட்டு இன்னும் எத்தனையோ வித்தைகள் செய்து தங்கையின் தூக்கத்தை அடித்துத் துரத்திவிட்டாள்.

“ஆ... ஆ.... வாய் கழுவிட்டு தேத்தண்ணியைக் குடியம்மா” என்று கூறிவிட்டு அடுப்படி பக்கம் போனாள்.

தாய் தேநீர் அருந்திவிட்டு அடுப்பு நெருப்பில் குளிர் காய்ந்தாள். தாயின் அருகில் அமர்ந்த கீதாஞ்சலி தேநீர் கோப்பையை எடுத்து அவளும் பருகத் துவங்கினாள்.

“மகள் சாப்பிடத்தான் ஒன்னும் இல்லே... அம்மாவுக்கு காய்ச்சல் குணம் மாறவில்லை, பெனடோல் ரெண்டை குடிச்சிட்டு படுக்கப் போறேன். அச்சிமுகமது காக்காட ஹோட்டலே ஏதாவது வாங்கிட்டு போவம்மா... தங்கச்சிக்கும் ஏதாவது வாங்கிக்கொடு” என்று தாய் கமலம் வார்த்தையை முடிப்பதற்குள் கீதாஞ்சலி



குறுக்கிட்டாள்.

“இல்லை அம்மா எனக்கு ஒண்டும் வேண்டாம். நான் காலமை எழும்பின உடனே பழஞ்சோத்தை சாப்பிட்டேன். தங்கச்சிக்கு மட்டும் ஏதாவது வாங்கிக்கொடுக்கிறேன்” என்றுகூறி வறுமையின் துன்பத்தை உணர்ந்து கொண்டாள் என்பதை தாய்க்கு உணர்த்தினாள்!

(நிலவுகள் வளரும்...)

# ஜன்னல்

**விடிந்தால்** தீபாவளி! இரவு மணி எட்டு! வீட்டுக்குத் திரும்பவே பயமாயிருந்தது ரிஷிக்கு. காரணம் மனைவி ரேகா. இருந்தாலும் புது பங்களா வீட்டிற்குள் போய்த்தானே ஆகவேண்டும்? வெளியேவா படுப்பது? உள்ளே சென்றான் ரிஷி.

வைர நெக்லஸ் எங்கே? குரலில் எதிர்பார்ப்பின் ஏமாற்றம். அவ்வளவு உஷ்ணம்!

ப்ளீஸ்.... கொஞ்சம் பொறு!

என்ன பொறு? போன வருடம் ப்ரொமிஸ் பண்ணுனீங்க! இந்த வருடம் தீபாவளிக்கு நிச்சயமாய் வாங்கித்தரேன்னு சொன்னீங்க! இப்ப நாளைக்கு, நாளைக்கு, கொஞ்சம் பொறுன்னு.... ஏமாத்தப் பார்க்கிறீங்களா? தலைவிரி கோலமாய், கண்ணகிபோல் ஒருகை நீட்டி நியாயம் கேட்டாள்.

ஏய்... ஏமாத்தப் பார்க்கிறேனா? நானா!, உன்னையா? பட்டுப்புடவை ஒரு டஜன் அடுக்கி வைச்சிருக்கே! அப்படியிருந்தும் இல்லவே இல்லைனு அழுதே! நாற்பதாயிரம் ரூபாய்க்கு ரெண்டு பட்டுப்புடவை வாங்கித் தந்தேனா இல்லையா?

ஆமாம்.... பெரிசா வாங்கித் தந்தீங்க! டாலடிக்குதா? டல்லடிக்குது! என் தோழி லதா என்னைவிட குறைஞ்ச சம்பளம்! பேங்கில் சீனியர் ஓபிஸர்! ரெண்டு லட்ச ரூபாய்க்கு ரெண்டு பட்டுப்புடவை எடுத்துட்டா! அதைக் கட்டிட்டு ஒரு நிகழ்ச்சிக்கு வந்தா பாருங்க..... -எல்லார் கண்ணும் அவ மேலே! நான் ஒரு பெரிய சொஃப்ட்வேர் கம்பெனியில் மேனேஜர். நீங்க வாங்கிக்கொடுத்த டல்லடிக்கிற பட்டுப்புடைவையில் வேலைக்கர்ரி மாதிரி நின்றேன்.

எனக்கு வைரத்தோடு, வைர நெக்லஸ் வாங்கித் தராம ஏமாத்துறீங்க? எல்லாப் பணத்தையும் என்ன செய்றீங்க? ஏதாவது சின்னவீடு வச்சிருக்கீங்களா? என்னடி வாய்க்கு வந்தபடி பேசறே! என் கோபத்தைக் கிளப்பி அறை வாங்காதே.

அறையா? ஆம்பளைங்கிற திமிரா, இல்லே.... யாராவது கொடுக்கிற தைரியமா? இந்த அருமையான பணக்கார ஏரியாவில் சீனா பளிங்கு



சலவைக்கல், பர்மா தேக்கு, ஜெர்மன் கண்ணாடி போட்டு பளபளன்னு வீடு, பங்களா சைஸில் கட்டின வகையில் கடன். பேங்க் லோன் ஆறரை கோடி. மாசம் வட்டி கைமாத்துக் கடன்னு உன் சம்பளமும், என் சம்பளத்தில் பாதியும் போகுது! ப்ளீஸ் புரிஞ்சுக்க.

ஆயிரம் காரணம் சொல்றீங்க. ஆனால் போன மாசம் புதுசா கார் வாங்கினீங்களே... அது எப்படி? பொய் சொல்றீங்களா? யாரிடம் ஏமாத்தறீங்க என்று சட்டைக் கொலரைப் பிடித்துவிட்டாள். பொறுமையிழந்து ஓங்கி ஓர் அறைவிட்டான்! வெளியே பெரிதாய் வெடிவெடிக்கும் ஓசையையும் மீறிக்கேட்டது ரேகாவின் அழுகைச் சத்தம்.

வீட்டு நெலமையப் புரிஞ்சுக்கத் துப்பில்லை. வாயில் வந்தபடி பேசுறியா? உன்னோடு பேசினால் தினம் நரகம்தான் என்றபடி ஏசியை ஓஃப் செய்து, ஜன்னலைத் திறந்து வைத்தான். பங்களாவைச் சுற்றி வட்டமாய் ஒரு தோட்டம்! தோட்டத்திலிருந்து ஜில்லென்ற காற்று முகத்தில் வீச, புத்துணர்வு வந்தது. - வெளியே ஒரு புஸ்வாணம் வான்வரை செல்ல, வீதியில் கார்கள் போக, தோட்டத்து டியூப்லைட் அருகே வெளியே - இரண்டுபேர் கணவன் மனைவி பிச்சைக்காரர்கள்!

கணவன் கேட்டான். புள்ளே.... என்ன அந்த மரத்தடியில் ஒதுங்கப்படாதா? தூறல் போடுதுல்ல! கையில் ஒரு பேப்பர் பேக், அதனுள் தலைகீழாய் உள்ளே கவிழ்த்துப் போடப்பட்ட ப்ளாஸ்டிக் கவர்! தூறல் நின்னுடும்! என்றவள் தலைமாட்டில் மஞ்சள் துணியால் மூடப்பட்ட ஒரு போத்தல், மற்றும் ஒரு மிக்சர், வடை, பூந்தியடங்கிய பார்சல்!

என்னது மஞ்சள் பை?

அடுத்த தெருவில் ஒரு வீட்டில் வேலை பார்த்தேன்! தீபாவளி வேலை! அந்தம்மா ரூபாயும் மிக்சர், வடை, பூந்தியும் தந்தாங்க! என்ன வேலை பார்த்தே? பாத்திரம் தேய்ச்சேன்!

விறகு.... விறகு?...... சொல்!

விறகு பிளந்தேன்! கையைக்காட்டு! பிச்சைக்காரன் மனைவியின் கையை இழுத்துப் பார்க்க..... கை காய்ச்சிப் போயிருந்தது! என்ன புள்ளே இது?

நீ நல்ல வேட்டி கட்டி எம்புட்டு நாளாச்சு... நமக்கென்ன தீபாவளியா? பொங்கலா? காசு கெடைக்கிற நாள்ல கொண்டாடிக்க வேண்டியதுதான். இந்தா புதுவேட்டி. இத இப்பவே கட்டிக்க மச்சான்.

உனக்கு? எனக்கு வேணாம் மச்சான்!

ஏன் வேணாம்? இதைப்பாரு புத்தம் புது புடவை! மூட்டை தூக்கி நூறு ரூபாய்க்கு வாங்கினேன். நூறு ரூபாய்க்கு எதுக்கு மச்சான்? அய்ம்பது ரூபாய்க்கே நல்ல சேலை கிடைக்குதே. போ.... புள்ளே! பிச்சைக்காரப் புத்தி உனக்கு! நீயும் விலை உயர்ந்த நல்ல சேலையக் கட்டக்கூடாதா?

நீயும் இன்னக்கே கட்டு புள்ள... நமக்கு இன்னக்கிதான் விஷேசம்... என்று ஒரு குறும்புப்பார்வை பார்த்தான். இருவருக்கும் தமது முதல் நாளின் நினைவு மனதுக்குள் ஒரு நிமிடம் ஓடியது.

போ.... மச்சான்! இன்னக்கித் தூக்கம் போச்சு என்றாள். இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ரிஷிக்குப் பொறாமையாய் இருந்தது.

ஒன்றுமேயில்லாத பிச்சைக்காரர்கள், எல்லாமிருப்பதுபோல் மகிழ்ச்சியாய் இருக்க, இங்கே எல்லாமிருந்தும் மகிழ்ச்சி? மனது வலித்தபடியே.... ஜன்னல் கதவை அகலத் திறந்துவைக்க, ஜன்னலைச் சாத்துங்க என்று கத்தினாள் ரேகா. மாட்டேன் என்ற ரிஷியைத் தள்ளிவிட்டு ஜன்னலைச் சாத்தினாள். தூக்க மாத்திரை போட்டுத் தூங்கப் போறேன் என்று குப்புறப்படுத்தாள். என்ன செய்வதென்று புரியாமல் விழித்தான் ரிஷி.

# தமிழக மீனவர்களே!

# எமது கடல் வளத்தினை சூறையாடாதீர்கள்

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளங்களை கொள்ளையடிக்கும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இந்திய மீனவர்களது வன்முறைத்தனமான போக்கு இலங்கை வாழ் மீனவர்களது நாளாந்த வாழ்வுரிமையினை தட்டிப்பறிக்கின்ற போக்கிரித் தனமான செயலாகும். இந்த அப்பட்டமான கடற்கொள்ளை யினை கண்டித்து குரல் எழுப்புவதற்கு எமது தேசத்தில் போதுமான ஆளணி இல்லாமலிருப்பது துரதிர்ஷ்டவசமானதே.

போருக்கு முன்னான காலப் பகுதியில் எமது தேசத்தின் கடற்பொருள் உற்பத்தியானது தேசிய வருமானத்தில் காத்திரமான பங்களிப்பை கொண்டிருந்தது என்பது மறைக் கப்பட முடியாத உண்மையாகும்: 2009ஆம் ஆண்டுக்கு முந்திய 30 வருட காலத்தில் கடற்றொழில் துறை கடுமையான சிதைவுக்குள்ளானபோதிலும் தமது முந்திய நிலைமைகளை மீண்டும் வென்றெடுக்க பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டிருக் கும் எமது தொழிலாளர்களின இலக்குகள் இந்திய குறிப்பாக தமிழக மீனவர்களால் சிதறடிக்கப்படும் நிலைமைகளும் இதன் விளைவாக எமது கடற்றொழி லாளர்கள் அனுபவித்துக் கொண்டி ருக்கும் எண்ணற்ற அவலங்களும் சமகாலத்தில் அவசர அவசரமாக பேசப்படவேண்டியதாகவும்



தீர்வு காணப்பட வேண்டிய விடயமாகவும் இருந்து கொண்டிருக்கின்றது.


ஏற்கனவே போதிய கவனிப்பின்றி போதிய சிரத்தையின்றி இந்த விடயம் ஆண்டுக்கணக்கில இழுத்தடிப்பு செய்யப்பட்டி ருக்கின்றது. ஆயினும் வடபுலத்து அரசியல்வாதிகள் தரப்பில்அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா அவர்கள்தொடர்ச்சியான அக்கறையுடன் இது விடயத்தில ஈடுபட்டார் என்பதும் தமிழக மீனவர்களுடன் இணக்கப்பாடு ஒன்றிற்காக முயற்சிகளை மேற்கொண்டிருந்தார் என்பதும் பரவலாக அறியப்பட்ட விடயமாகும். ஆயினும் அவரது மானசீகமான தீரவொன்றினைத் தேடும் முயற்சிகள் யாவும் தமிழக தரப்பினரால் உதாசீனம் செய்யப்பட்டது என்பதே உள்ளார்ந்த சங்கதிகளாகும். கூடவே வடபுலத்து அரசியல் தலைமைகள் இங்கு இருந்திருக்கக்கூடிய சிவில் அமைப்பின் கனவான்கள் எவருமே குறித்த இந்திய மீனவர்களது அத்துமீறலையோ, அவர்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் எமது கடல் வள அபகரிப்பையோ எதிர்த்து கண்டனக்குரல் எழுப்பவில்லை. வடபுல மீனவர்களது வாழ்வாதாரம் சூறையாடப்படுவதை இவர்கள் கண்டுகொள்ளாமல் இருந்தமைக்கான காரணம் என்ன? வட மாகாணத்தில் பிரபல்யமான பல தமிழ் ஊடகங்கள் குறித்த, இந்திய மீனவர்களது அத்துமீறிய செயற்பாடுகளையோ அதன்விளைவான எமது கடற் றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அவலங்களையோ முதன்மைப்படுத்தாமல் மௌனவும் சாதித்தே வந்திருக் கின்றன- இதற்கான காரணங்கள் என்ன? இது போன்ற விடை கிடைக்கப்படாத வினாக்கள் எமது கடற்றொழிலாள மக்களது மனங்களில் பதிவாகியுள்ளது. எமது தொழிலாளர்கள் நாளாந்தம் உழைத்து- உண்டு -மகிழ வாரி வழங்கிக் கொண்டிருந்த கடல் இன்று அந்நியரின் அபகரிப்பால் வெறுமையாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது- இந்த உச்சக்கட்ட அநியாயத்தை- எமது கடல்பிராந்தியத்தின் மீதான ஆக்கிரப்பினை தடுத்து நிறுத்துவதற்கான முன்னெடுப்பில் அனைத்து கடற்றொழிலார்களும் அவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் அணிதிரளவேண்டிய அவசியத்தினை காலம் நிர்ப்பந்தித்து நிற்கின்றது- கூடவே தொழிலாள வர்க்கத்தை நேசிக்கக்கூடிய முற்போக்குச் சக்திகள் மற்றும் நியாயத்துக்காக குரல் கொடுக்கும் ஊடகங்கள் இவர் களது நியாயத்துடன் கூடியதான முன்னெடுப்புகளுக்கு ஆக்கபூர்வமான ஆதரவுதர முன்வரவேண்டும்.

இந்திய மீனவர்கள் கடல் எல்லை தாண்டி வரக்கூடாது. இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் பிரவேசிக்கமாட்டார்கள் இந்த நிபந்தனையில் இருந்து விலகுவதில்லை என்ற உறுதியான கருத்தோடு அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொடர்ச்சியான அழுத்தம் கொடுப்பதுடன் அவர்களுடனான கலந்துரையாடல்களிலும் கலந்துகொள்வது கருத்துக்களை வெளிப்படையாக பகிர்ந்துகொள்ளுதல் போன்ற நகர்வுகள் பயன்பாடுள்ளதாக அமையும்.

கடற்றொழில் அமைச்சர் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வருவதை அனுமதிப்பதில்லை என்ற தீர்மானத்தில் உறுதியாக இருக்கிறார் என நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறாயின் அவருடைய தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் குறித்த அமைச்சருக்கும் கடல் காவல் படையினருக்கும் பூரண ஒத்துழைப்பினை வழங்குவதற்கு எமது கடற்றொழிலாளர்கள் விருப்புடன் முன்வரவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக குறித்த விடயத்தில் இன மத அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் வட கிழக்கு உட்பட நாட்டின் ஒட்டுமொத்த மீனவர்களின் வாழ்வா தாரத்தையும் நாட்டின் கடல் வளம் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தினையும் முன்நிறுத்தியதாக நமது சிந்தனைகளும் செயற்பாடுகளும் அமைய வேண்டும். அதன் வழியேதான நமது முயற்சிகள் வெற்றியடைவது சாத்தியமாகும். எமது கடல் வளம் எமக்கானதே.

# வீதியில் இறங்கியது விமானம்!



**சிறிய** விமானம் ஒன்று நியூயோர்க்கில் அவசரமாக இறங்கியுள்ளது. இதில் என்ன அதிசயம் என்கிறீர்களா? விமானம் தரையிறங்கியது, விமான நிலைய ஓடுபாதையில் அல்ல, வாகனங்கள் செல்லும் விரைவு சாலையில்!

Piper PA-28 ரக குட்டி விமானம் இது. ஒரு ஆண் விமானியும் இரு பெண் பயணிகளும் இருந்தனர். வானில் பறந்து கொண்டிருந்தபோது, விமானத்தின் எஞ்சின் இயங்குவது குறையத் தொடங்கியது. அப்படி நடந்தால் பறக்கும் பவர் குறைய தொடங்கும். விமானத்தை பறக்க வைப்பது கடினமாகிவிடும். புவியீர்ப்பு விமானத்தை தரையை நோக்கி இழுக்க, விமானம் உயரம் குறையத் தொடங்கும்.

இந்த விமானத்துக்கும் அதுதான் நடந்தது. உடனே விமானி, ஏர் ட்ராபிக் கன்ட்ரோல் டவரை ரேடியோ மூலம் தொடர்புகொண்டார். 'மேடே' (Mayday) அபாய அறிவிப்பை செய்தார்.

"எனது விமானத்தின் எஞ்சின் சக்தி இழக்கிறது" என்றார்.

டவரில் இருந்துவந்த பதில், "நீங்கள் தற்போதுள்ள பொசிஷனில் இருந்து நியூயோர்க் லகுவாடியா (LaGuardia) ஏர்போர்ட் வெறும் ஐந்தரை மைல் தொலைவில்தான் உள்ளது. அங்கு எமர்ஜென்சி லேண்டிங் செய்யுங்கள்"

"ஐந்தரை மைல்கூட இந்த விமானம் பறக்காது. வேகமாக உயரம் குறைந்து வருகிறது. தரையில் இருந்து 1000 அடி உயரத்துக்கு வந்துவிட்டது விமானம். விமான நிலையத்துக்கு வெளியே எங்கே தரையிறங்கலாம்?"

"நீங்கள் பறக்கும் பொசிஷன் உள்ள இடத்தில் எங்கே தரையிறங்குவது என்று என்னால் சொல்ல முடியாதுள்ளது. லகுவாடியா விமான நிலைய ரன்வே வரை சமாளிக்க முடியாதா?"

"முடியாது.. முடியாது.."

இதற்கிடையே விமானம் வேகமாக தரையை நோக்கி வந்துவிட்டது. எஞ்சின் முழுமையாக நின்றும் போனது.

இப்படியான நிலையில் விமானத்தை முன்னோக்கி செலுத்த முடியாது. ஆனால் திறமையான விமானியால் 'ஃபுளோட்' செய்ய முடியும். அதாவது விமானத்தை சற்று நேரம் காற்றில் மிதக்க வைக்க முடியும். அதைத்தான் செய்தார் இந்த விமானி.

சிறிது நேரம் மிதந்த நிலையில் கீழே வந்து, மரங்களை தவிர்த்து, அவரது கண்ணில் பட்ட சமதரை பகுதி, Major Deegan Expressway வீதிதான். அதில் விமானத்தை தரையை தொடவைத்தார். வீதியில் வாகனங்கள் ஏதுமில்லை என்பதை விமானி நிச்சயம் அவதானித்திருப்பார்.

ஹைவேயில் தரையை தொட்ட விமானத்தின் எஞ்சின் இயங்காத காரணத்தால், ஆட்டோ சஸ்பென்ஷன், த்ரஸ்ட் ரிவர்சர் (thrust reverser) ஏதும் இயங்காது. இந்த த்ரஸ்ட் ரிவர்சர்தான் தரையிறங்கிய விமானத்தின் வேகத்தை கட்டுப்படுத்துவது. இதனால், விமானத்தின் லேண்டிங் கியர் சேதமடைந்தது. ஆனால், விமானத்தின் மேல் பகுதியில் பெரிய சேதம் ஏதும் ஏற்படவில்லை. பயணிகளுக்கும் விமானிக்கும் சிறு காயங்களே ஏற்பட்டன.

# சறுக்கினார் வேகத்தின் நாயகன்!



வேகம் விவேகம் அல்ல என்பது நமது ஊரில் பெரியவர்களினால் சொல்லப்படும் எச்சரிக்கை வாசகம். ஆனால் வேகத்துடன், விவேகமும் இணைந்தால் மட்டுமே சாதிக்க முடியும் என்ற ஃபார்முலா 1 கார் பந்தயத்தின் நிரந்தர அடையாளமாக இருப்பவர் ஜெர்மனியின் மைக்கேல் ஷுமாக்கர்.

கிரிக்கெட்டுக்கு சச்சின் என்றால், போர்முலா 1 கார் பந்தயத்துக்கு ஷுமாக்கர்தான். போர்முலா 1 கார் பந்தயம் என்றாலே அனைவருக்கும் நினைவுக்கு வருவது ஷுமாக்கரும், அவருடைய சிவப்பு நிற பெராரி காரும்தான். ஏனெனில் அவர் 1990-களில் போர்முலா 1 போட்டியில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி யிருந்தபோதுதான் நம்பர் தொலைக் காட்சிகளில் போர்முலா 1 கார் பந்தயம் ஒளிபரப்பானது. அதுதான் இலங்கை - இந்தியா போன்ற நாடு களின் ரசிகர்களின் இதயத்தில் ஷுமாக்கர் இடம்பிடிக்கக் காரண-மானது.

ஒன்றல்ல, இரண்டல்ல...7 முறை பட்டம் வென்று போர்முலா 1 உலகின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த ஷுமாக்கர், இன்றளவிலும் உலகின் தலைசிறந்த போர்முலா 1 வீரராக போற்றப்படுகிறவர்.

கண் இமைக்கும் நேரத்தில் கார்கள் கடந்து செல்லும் இந்த போர்முலா 1 போட்டியில் நிகழ்த்தப் பட்டிருக்கும் சாதனைகளில் பெரும் பாலானவை ஷுமாக்கருக்கு சொந்த மானவையே. 7முறை பட்டம் வென்ற போதிலும், தனது காரில் உள்ள வேகக் கட்டுப்பாட்டு கருவியின் அளவைத் தாண்டி ஒருபோதும் அவர் காரை செலுத்தியது இல்லை. கார் தொழில்நுட்பத்தில் மிகுந்த அறிவு பெற்றவரான ஷுமாக்கர், 2006-ல் போர்முலா 1-லிருந்து ஓய்வு பெற்றார். 2010இல் மீண்டும் கார் பந்தயத்தில் நுழைந்தாலும் அடுத்த 3 ஆண்டுகளில் அவர் ஒரு ரேஸில்கூட வெற்றி பெற வில்லை. தலைசிறந்த கார் பந்தய வீரரான அவருக்கு இது மிகப் பெரிய ஏமாற்றமாக அமைந்தது. ஷுமாக்கரின் இந்த பின்னடைவுக்கு மெர்ஸிடஸ் கார்களில் இருந்த குறைபாடுதான் காரணம் எனக் கூறப்படுகிறது.

4 வயதில் கோ கார்ட்டிங் மூலம் தொடங்கிய ஷுமாக்கரின் கார் பந்தய வாழ்க்கையில் சாதனைகளுக்கு நிகராக சர்ச்சைகளுக்கும் இடம் உண்டு. போட்டியின்போது சண்டை போடுவது, மற்ற வீரர்களை முன்னேறவிடாமல் இடைமறிப்பது, அணியின் சகவீரர்களை ஒரு பொருட்டாக நினைக்காதது, பிட் லேனில் அதிவேகமாக காரை செலுத்தியது போன்ற விஷயங்களால் சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறார். 2012இல் கார் பந்தயத்தில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு சாகச விளை யாட்டுகளில் ஆர்வம் காட்டி வந்த ஷுமாக்கர், அண்மையில் பிரான்ஸின் அல்ப்ஸ் மலைப்பகுதியில் பனிச்சறுக் கில் ஈடுபட்டிருந்தபோது பாறையில் மோதி விபத்துக்குள்ளானார். தலை யில் பலத்த காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்.

கோமா நிலையில் இருந்து மீண்டுவிட்டாலும், அவரின் நிலை குறித்து மருத்துவர்கள் எதையும் உறுதியாக தெரிவிக்க மறுக்கின்றனர். கரணம் தப்பினால் மரணம் என்று சொல்லக்கூடிய ஆபத்து நிறைந்த கார் பந்தயத்தில் கலக்கிய ஷுமாக்கர், மோட்டார் சைக்கிள் விபத்தில் இருந்துகூட எளிதாக தப்பினார். அப்போதெல்லாம் கெட்டியாக இருந்த ஷுமாக்கரின் விதி, அல்ப்ஸ் மலையில் பனிசறுக்கின்போது சற்று சறுக்கிவிட்டதோ எனத் தோன்றுகிறது!

மருத்துவர்களின் கண்காணிப்பில் இருக்கும் ஷுமாக்கர் விரைவில் பூரண குணமடைய உலகம் முழுவதும் உள்ள அவருடைய ரசிகர்கள் எதிர் பார்த்து காத்துக் கொண்டிருக் கிறார்கள்.

# ஜெர்மன் பிரதமரின் இடுப்பு எலும்பு முறிவு

**பிரபல** கார் பந்தய வீரர் ஷுமெக்கர் பனிச்சறுக்கு விளை யாட்டின்போது ஏற்பட்ட விபத்திலிருந்து மீளாத நிலையில் ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கில் பனிச்சறுக்கு விளையாட்டின்போது எதிர்பாராமல் கீழே விழுந்ததால் இடுப்பு எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ளது.

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறையை சுவிட்சர் லாந்தில் கழித்துவரும் ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டார். அப்போது திடீரென எதிர்பாராமல் அவர் கீழே விழுந்ததால் அவருக்கு இடுப்பில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. அதனால் அவர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சோதனை செய்து பார்த்த போது அவருடைய இடுப்பு எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே அவரை மருத்துவர்கள் மூன்று வார காலம் கண்டிப் பாக ஓய்வு எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளனர்.






ஒரு மெழுகு திரி
உருகுகிறது!
இரவுகளை பகலாக்கும்
காதல் சோகத்தில் ஒரு
மெழுகுதிரியாக
அவளே உருகிக்
கொண்டிருக்கிறாள்!
என்று? எப்போது
காதலிக்க கற்றுக்
கொண்டாளோ
அன்றிலிருந்தே அவள்
இரவுகள் களவு
போய்விட்டன!

இரவுக்கும், பகலுக்கும்
இடையே உள்ள
குணமாற்றம்
கூட அவளுக்கு
மறந்துபோனது!
அவள் தான் எப்போதுமே
விழித்திருக்கிறாளே!
காதலின் துளிர்
காலத்தில் கண்களை
மூடாமலேயே கனவு
கண்டாள்!

வானத்து நட்சத்திரங்களை
எண்ணும் முயற்சியில்
இரவுகளை தேய்த்துக்
கொண்டிருந்தாள்!
பகலெல்லாம் அவன்
நினைவுகளுடன் உலா
வந்தாள்!

காதலின் மத்திய
பருவத்தில் அவர்கள்
ஒருவரை ஒருவர்
அறியும் முயற்சியில்
நெருங்கியிருந்தனர்!

அவன் கைகள் தீண்டும்
போதெல்லாம் சிலிர்த்தாள்!
அவன் இதழ்கள்
தீண்டும்போதெல்லாம்
தீயானாள்! இருகரம்
விரித்து வாவென
அழைத்து தனக்குள்
அவனை புதைத்தாள்!

"தீண்டும் போதெல்லாம்
என் காதலியே! தேனுக்குள்
விழுந்த ஈயாகிறேன்!"
என்று குழைந்தான்!

வரம்பு தாண்டுவது
தெரிந்தும், தீண்டும்
இன்பம் தேவையாக
இருந்தது! இடைதுவள
உடை நெகிழ காமன்
அங்கே கடைவிரித்தான்!

மோகம் உடைத்தது! அச்சம்
விடைபெற்றது! ஆர்வம்
மடை உடைத்தது!

பலாச்சுளையாய் இதழ்
கிடக்க பசியோடு அவன்
புசித்தாற, நிலா சொக்கி
கண்கள் செருகிற்று! எங்கும்
அவன் கரம் ஊர்ந்தது!
பொங்கும் கடல் உள்ளே
கிளர்ந்தது!
புல்லாங்குழலாய்



# நெஞ்சே நீயுமா?

தேகம்மாற - அதுவரை
கல்லாத கலையை
அவள் அறிந்தாள்!

முத்து முத்தாய்
வியர்வைத் துளி!
கொத்துக் கொத்தாய்
வியப்புக்குறி!

"சிப்பிக்குள் முத்து எடுத்து,
சத்துள்ள முத்தம்
கொடுத்து, அந்த
முத்தையே
சொத்தாக்கியவன்
நானன்றோ!" என்று
கானம் பாடினான்!
மோகத்தில் வேகம்
தணிய, மேகத்திற்குள்
நிலாவாக ஆடைக்குள்
தனை மறைத்தவள்
அச்சத்துக்குள் விழுந்து
போனாள்! "அஞ்சாதே!
ஏழேழு ஜென்மத்திலும்
இனி நீதான் என்
துணைவி!" என்றான்.

வாக்குறுதிக்குத்தான்
வயதே கிடையாதே!
எக்காலத்திலும்
இளமையோடு இருக்கும்!

ஏழேழு ஜென்மம்
இருக்கிறதோ - இல்லையோ,
இந்த ஜென்மத்தில்
வாழ்ந்தால் போதும் வாக்கு
மீறவேண்டாம்!"
என்றாள் பரிதாபமாக!

வாக்குறுதி கொடுப்பது
எத்தனையாவது முறை?
இது எத்தனையாவது மலர்,
என்பது அவனுக்கே
தெரியாது!
பால் குடித்த பூனை அதன்
பின்னர் அடுப்பங்கரைக்கு
வரவே இல்லை!

வரம்பு மீறியதால் வ்யிறு
உப்பியது! ஆழமறியாமல்
காலைவிட்டபின் அழுது
என்ன பயன்?

பகலிரவு இல்லாமல்
அழுதழுதே அந்த நிலா
தேய்ந்தது!

நெஞ்சே! நெஞ்சே!
என்னைக் கொஞ்சிய
மனிதர் நஞ்சிலும்
கொடியவர் என்பதை
நீயாகிலும் கூறியிருக்க
கூடாதா? நெஞ்சு நிதானமாக
உரைத்தது; "காமம் என்ற
கத்தி உன் புத்தியை
குத்திக் கிழித்துவிட்டது!
மோகம் என்ற கோடாரி
உன் சிந்தனையை
தகர்த்தெறிந்துவிட்டது!

ஆசை என்ற யானை உன்
மனக்கோட்டையை மோதி
உடைத்துவிட்டது!
புத்தி மழுங்கியபின்
போதனை ஏறுமோ?"

"கண்ணுக்குள்
நிறைந்தவர் காதல்
துரோகியாவார் என்று யார்
கண்டார்கள்?" என்றாள்
கண்ணீரோடு.

நெஞ்சு சிரித்தது, "வீணாக
திட்டாதே தேனாக
இனித்தவரை வீணாக
திட்டாதே!" என்றது
கேலியாக.

அவளுக்கு கோபம்
கிளர்ந்தது
ஏமாற்றியவரை எத்தர்
என்று கூறாமல் சித்தர்
என்றா கூறுவது?

"வரம்பு கடந்ததில்
இருவருக்கும் பங்குண்டு!
கடைந்த சுகத்திலும்
இருவருக்கும் பங்கிருந்தது!
இது நீயாக தேடிக்
கொண்ட தோல்வி!

கையில் கிடைத்தது
காயா?, கனியா?,
சொத்தையா? என்று
ஆராயமுன்னரே நீ
தாயாகிவிட்டாயே
பைத்தியக்காரி!"

நெஞ்சு நிஜம் உரைத்தது!
நெஞ்சு தன்னை
குற்றம் கூறுகின்றதே
என்று நினைத்தாள்
அவனை ஆதரித்து
வழக்காடுகிறதோ என்று
கொதித்தாள்.

காமத்தில் மட்டுமல்ல
கோபத்திலும் புத்தி
மழுங்கிப் போகும்.

"நெஞ்சை வசைபாடினாள் ;
நம்மிடம் காதல் இல்லாத
கல்நெஞ்சரை அறியாமல்
அனுதாபம் கொள்ளும்
நெஞ்சே நீ வாழ்க!
உன் அறியாமை வாழ்க!"

**"இருந்துள்ளி என்பரிதல்**
**நெஞ்சே பரிந்துள்ளல்**
**பைதல் நோய் செய்தார்**
**கண் இல்"**

*அதிகாரம்: 125, குறள்: 1243*




**சிந்தியா! ஜெயபாலன், மகா தமிழ் பிரபாகரன் சந்தித்த நெருக்கடிகளை, கனடா நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் சந்திக்க வில்லையே?**

**அ.விசாகன், கொழும்பு –05.**

விசாகன் - "இருக்கும் இடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் சௌக்கியமே" என்ற சினிமாப் பாடல் உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கின்றேன். அதுபோல் அவருடைய பதவி ஒரு காரணமாக இருக்கலாம்.

மறுபக்கத்தால் பார்த்தால் ராதிகா சிற்சபேசன் தமிழ்த் தேசியத்தின்மீது தீராத காதல் கொண்ட ஒருவர் அல்ல. தமிழர் என்ற வகையிலேயே இவர்களுடன் தொடர்புகளைப் பேணிவருகின்றார். இந்த உண்மை இலங்கை அரசாங்கத்திற்கு நன்கு தெரிந்தபடியால்தான் அவரை உள்ளே வரவே அனுமதித்தார்கள்.

அவர் இங்கே இருந்தபோது ஏற்பட்ட பரபரப்புக்கள் எல்லாம் எங்களின் தேசிய உணர்வாளர்கள் கொழுத்திப்போட்ட பட்டாசுகள். இந்நிலையில் இவர்களின் பட்டாசுகளுக்காக அவரைக் கைதுசெய்து சர்வதேச அரங்கில் புது நெருக்கடியை உருவாக்க அரசாங்கம் விரும்புமா?



**சிந்தியா! முல்லைத்தீவில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகிறதாமே...?**

**க.லதுசன், ஹற்றன்.**

குறுக்குவழியால் நிலபுலங்களை சம்பாதிக்க விரும்புகின்ற சிலர் வெவ்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்றுதான் தகவல்கள் சொல்கின்றன. சந்தர்ப்பம் கிடைத்தால் நிலங்களை மடக்கிப்போடவேண்டும் என்ற விருப்பம் உடையவர்களாக பலர் இருப்பதும் உண்மை.

ஆனால் திட்டமிட்ட முறையில் பாரிய நில அபகரிப்புக்களுக்கு முயற்சிப்பதான தகவல்கள் இன்னும் உறுதிப்படுத்தப்பட வில்லை.

**காணாமல் போனவர்களின் கண்ணீரின், கேள்விக்கு யாரிடமும் பதில் இல்லை போல் தெரிகிறதே சிந்தியா!**

**ம.பிரியங்கா, கிளிநொச்சி.**

பிரியங்கா உறவுகளின் நிலை அறியாது தினமும் அவர்களின் வருகைக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் பிரியமான உள்ளங்களின் வலி சொல்லில் அடங்காது என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால், கடந்த கால சாபக்கேடாக எம்மைச் சூழ்ந்திருந்த யுத்தம் எமக்கு பல இழப்புக்களையும் அழிவுகளையும்தான் பெற்றுக் கொடுத்திருக்கிறது. அந்த இழப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாக இருப்பினும் எஞ்சி இருக்கின்ற எங்களின் எதிர்காலத்துக்காக சாமர்த்தியமாகவும் ஆரோக்கியமாகவும் சிந்திக்க வேண்டிய காலச் சூழலில் இருக்கின்றோம் என்பதை நினைவில் வைத்துச் செயற்படுவது நல்லது.

**சிந்தியா! கிசுகிசுக்களில் மாட்டிக் கொண்ட நயன் ஏனைய நடிகைகளைவிட கொடிகட்டிப்பறக்கிறாரே?**

**ந.சுகந்தன், புத்தளம்.**

ஏறிச்செல்கின்ற வயதை காட்டிக் கொடுக்காத முகம், கட்டுக்குலையாத உடம்பு, சோர்வை ஏற்படுத்தாத நடிப்பு, கதைகளை தேர்வு செய்வதில் காட்டுகின்ற தெளிவு இவையெல்லாம் நயனை தொடர்ந்தும் உங்களின் கனவில் கொண்டு வந்து கொண்டிருக்கின்றது. அதனால் தமிழ்ச் சினிமாவில் தொடர்ந்தும் அவர் கொடிகட்டிப் பறக்கிறார்.

**சிந்தியா! டெனிஸ் வீராங்கனை ஷரபோவா தொடர் தோல்விகளையே சந்தித்துவருகிறாரே?**

**எம்.சைந்தவி, கோப்பாய்.**

மனித வாழ்க்கையில் வெற்றி, தோல்வி இரண்டுமே சகஜமானது என்பதற்கு ஷரபோவா மட்டும் விதிவிலக்காக இருக்கமுடியாது அல்லவா.

விளையாட்டு வீரர்களை எடுத்துக் கொண்டால் சச்சின், றொனால்டோ, றோஜர் பெடரர், வீனஸ் வில்லியம் என அனைவருக்கும் ஏற்றத்தாழ்வுகள் வந்துபோயிருக்கின்றன.

**சிந்தியா! மாமி - மருமகள் பிரச்சினைகள் காலம்காலமாக தொடர்கிறதே. இது பெண்ணுக்கும் பெண்ணுக்கும் நடக்கும் போட்டியா?**

**எஸ்.பார்கவி, மன்னார்.**

அது சாபம். அம்மாவையும், மனைவியையும் கையாளத் தெரிந்த ஆண்களின் வாழ்வில் அது சுவாரஷ்யம். மனைவி ஒரு நாள் மாமியாராகும் போது, அவர் மருமகளாக இருந்த காலங்கள் நகைச்சுவையாக மாறிவிடும்.

**சிந்தியா! அரசியலில் அரிச் சந்திரன்கள் இருக்க முடியுமா?**

**ந.அமுதா, நல்லூர்.**

சும்மா போங்கள் அமுதா, இக்கால அரசியல்வாதிகளில் பலர் சுடுகாட்டைக் கண்டால் தங்கள் சொந்தங்களின் பெயரில் உறுதி எழுதி வைப்பார்களே ஒழிய, காவல்காக்கும் அளவிற்கு அரிச்சந்திரன்போல் முட்டாள்கள் கிடையாது.


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

**மலையாள மாந்திரிக சக்தி**

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில். சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்டத் தெளிவான ஜாதகக் குறிப்புக்களுக்கு...

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13. Tel : 011 2342463/4, 011 2470615
Fax : 011 2344831 E-mail : drpksamy@sltnet.lk

நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்று மில்லை."

வணக்கமுங்கோ. கலைஞர் ஐயாவைப் பேட்டிகாண வேணுமெண்டு கோபாலபுரத்துக்குப் போனவருக்கு என்ன நடந்தது தெரியுமோ. கலைஞரின்ர துணைச் செயலாளர் எண்டு ஒருவர் வந்து செய்தியாளரையே பேட்டி கண்டாராமுங்கோ. அதென்னடா வடிவேலு சொன்னமாதிரி "வழியனுப்ப வந்தவனையே வழியனுப்பி வைக்கிறாஞ்ச" எண்டமாதிரியா எண்டு கேட்டுப் போடாதேங்கோ.

அங்க நடந்ததும் அதுதானுங்கோ. தலைவரை சந்திக்கும் நீங்கள் வேறு யாரையெல்லாம் சந்திக்கப்போறீங்கள் எண்டதுதானுங்கோ முதல் கேள்வி. கலைஞரையும், அம்மாவையும் பேட்டிகாண வேணுமெண்டு தானுங்கோ சொல்லி அனுப்பினார்கள் எண்டதும்,

தலைவரைப் பேட்டிகண்டால் வேறு யாரையும் பேட்டி காணக்கூடாது. தலைவரோடை பேட்டி உங்க பத்திரிகையில வெளியாகிய பின்பு ஒரு வாரம் கழிச்சுத்தான் யாருடய பேட்டியும் பிரசுரமாக வேணும். அதுக்குச் சம்மதமுன்னா தலைவரோடை பேட்டிக்கு ஏற்பாடு செய்யலாம். என்ன சொல்லுறீங்க எண்டு கேட்டிச் சினமாமுங்கோ.

சார் நான் இதுக்காக இலங்கையில இருந்து வந்திருக்கேனுங்கோ எண்டதுக்கு,

சிலோன்தானே! அதென்ன அம்புட்டுத் தூரமா...? ஏதோ அமெரிக்காவில இருந்துவந்த மாதிரி சொல்லுறீங்க... நீங்க சிலோன் கவர்மெண்ட் பத்திரிகையா? தமிழர் பக்கமா? அதைச் சொல்லுங்க முதலில எண்டு கேட்டிச்சினமாமுங்கோ.

என்னங்க இலங்கைத் தமிழர்களுக்காக கலைஞர் உட்பட இங்கிருக்கும் தமிழ் தலைவர்கள் அவ்வளவு ஆக்ரோஷமாக குரல் கொடுக்குறாங்க. நீங்க இப்புடி எல்லாம் கேக்கிறீங்க?

என்னப்பா சிறுபிள்ளைத்தனமாக பேசுற. இங்க இருந்து குரல் கொடுத்தாப்புல உங்களுக்கு உங்களுக்கு பிரச்சனை தீர்ந்திடுமா? ஆப்புடிப்பார்த்தா உங்க பிரச்சனை தீர்ந்து இருபது வருஷத்துக்கு மேலாகி இருக்கணுமே. ஏம்பா ஈழத்தமிழர்கள் இவ்வளவு கேனத்தனமா இருக்கிறீங்க எண்டிச்சினமாமுங்கோ.

இங்க பாருங்க கலைஞரை பார்க்க முடியுமா? முடியாதான்னு சொல்லுங்க. நான் போயஸ் காடனுக்கு போய் அம்மாவைப் பார்த்து பேசுறேன் எண்டதுக்கு.

போயஸ் காடனுக்குத்தானே தாராளமா போ. உன்னை அலாக்காத்தூக்கி மலாக்காப் போட்டு மிதிப்பானுக அப்ப தெரியும். ஐயாவா?, அம்மாவா? பேஸ்ட்டுனு. ஏதோ இவரு சிலோனில இருந்து வந்திருக்கிறதால சிகப்பு கம்பளம் விரிச்சு வரவேற்பானுகனு நெனச்சிட்டார்போலை. ஐயா கூடாது. அம்மா நல்லவுங்கனு சொல்லிக் கொண்டு திரிஞ்சவனுக்கெல்லாம் அந்தம்மா அடிச்ச ஆப்பை புடுங்க ஏலாம சீமான்மாதிரி ஆளுங்கல்லாம் அலறிக்கிட்டுத் திரியிறானுங்க. ஆமா நான் கேக்கிறேன், சீமானை விடவா சிலோனில இருக்கிற தமிழ் பக்கிங்க உங்களுக்காக குரல் கொடுக்கிறீங்க எண்டு கேட்டிச்சினமாமுங்கோ.

அப்ப கலைஞர் உடன்பிறப்புக்களே எண்டு சொல்லுறதும் பொய்யா? எண்டு கேட்டதுக்கு,

அது ஒன்னும் பொய் இல்லை. உடன்பிறப்புக்களே என்றுதான் தலைவர் சொன்னாரே தவிர ஒண்டவிட்ட பிறப்புக்களே என்று சொல்லவில்லையே. உடன்பிறப்புக்களே என்றால் இங்கே உதயசூரியனுக்கு வாக்குப்போடும் வாக்காளர்களே என்று அர்த்தம். நீங்க எப்புடி நினைச்சீங்க. உடன் பிறப்புக்களே என்றால் பாசமுள்ள ஈழத்தமிழர்களே என்றா? பக்கிகளா பக்கிகளா இப்புடியுமாடா மனுசம் மடத்தனமா இருப்பான். எண்டு அவுங்கள் ஒப்பினாகப் பேசின போதுதான் அப்பன்என் டவுண் டிக்கெட் போட்டு தமிழ்நாட்டுக்கு பேட்டி எடுக்கப்போனது எவ்வளவு பெரிய முட்டாள்தனமெண்டது பத்திரிகைக்காரருக்கு புரிஞ்சதாமுங்கோ. அதாலை தானாமுங்கோ இவ்வளவு நாளில ஒரு தடவைகூட தமிழக தலைவர்களை நேரடியாக பேட்டிகண்டு பிரசுரிக்க இங்குள்ள பத்திரிகளுக்கு முடியாமல் போயிருக்குதெண்டும் அந்த ஜூனியர் பத்திரிகையாளர் சொன்னாருங்கோ.


இவ்வளவு அவமானத்துக்குப் பிறகும்கூட பத்திரிகைத் தம்பி நாடு திரும்பப் போவதில்லை எண்டு தமிழ் நாட்டிலையே நிக்கிறாராமுங்கோ. ஏன் எண்டு கேட்டதுக்கு புரட்சித் தலைவர் இரத்தத்தின் இரத்தங்களே எண்டு சொன்னவரெல்லோ அது யாரைச் சொன்னவரெண்டு அம்மாவைப் பார்த்து கேட்டுப் போட்டுத்தானுங்கோ பெடியன் நாடு திரும்புமாம்.

வெளுத்ததெல்லாம் பாலெண்டு நம்புற வெள்ளந்தியா நம்ம ஜூனியர் இருக்கிறாரே எண்டதில எனக்கும் கவலையாகத்தானுங்கோ இருக்குது. என்ன செய்யிறது. வாழ்க்கையில இப்புடியான அனுபவங்களும் சில மனிதர்களுக்கு தேவையாகத் தானேங்கோ இருக்குது.

நம்ம ஜூனியரிடமிருந்து மேலும் பல சுவாரஸ்யங்களுக்காக நானும் புது வருஷத்தில காத்திருக்கேனுங்கோ.

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

# விதியால் முடமான மதியாளர்



விளையாட்டின் உற்சாகத்தில் - உஷ்ணத்தில் சிறு வயதிலே கால்முறிவு ஏற்பட்ட இவர் கீழே மோதித் தள்ளப்பட்டு மிதித்துத் துவைக்கப்பட்டார். அநேகமாக உயிர் போய்விட்டது என்றே சொல்லும்படியான நிலை. மூத்திரக் காய்களில் ஒன்று நசுங்கிப் போயிற்று. வலது பக்கத்து நுரையீரல் கிழிந்து போய்விட்டது. எத்தகைய கோரமான ஆபத்து! குற்றுயிரும் குலையுயிருமாக இரத்தமெல்லாம் போனநிலையிலே டாக்டரிடம் கொண்டுவந்த போது, அவர்கள் உதட்டைப் பிதுக்கி நம்பிக்கை இல்லை என்று தலையை அசைத்துவிட்டார்கள்.

மரணம் தன்னை வந்து எந்த நிமிடத்தில் தழுவப் போகிறதோ என்ற பீதியிலே பல மாதங்கள் படுத்த படுக்கையாகக் கிடந்தார். மாபெரும் இலக்கியங்களைச் சிருஷ்டித்த இந்த ஒப்பற்ற கலைஞர், இலக்கிய உலகுக்கு அவர் செய்யவேண்டிய பணி ஏராளமாக இருந்தது. ஆகவே சாவு அவரை அணுகவில்லை.

இதன்பிறகு பன்னிரண்டு வருஷங்கள் அரைமுடமாகவே இவர் வாழ்ந்தார். இந்த வருஷங்களில் தன்பெயரை உலக முழுவதும் உச்சரிக்கும்படியான திறமையை, தகுதியை தன்னிடம் வளர்த்துக்கொண்டார். விதி இப்படி இவரது காலையும் கையையும் ஒடித்து ஒன்றுக்கும் உதவாத நிலையிலே ஒப்பற்ற இலக்கிய கர்த்தாவாக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கும்போது 'வெஸ்லி'னால் என்ன செய்யமுடியும்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(09.01.2014 தொடக்கம் 15.01.2014 வரை)

## மேடம்

திருட்டுப்போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். பொதுநலச் சேவைகளைச் செய்வோர்கள் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய முறை விவசாயங்களின் மூலமாக நல்ல இலாபம் பெறுவார்கள். காதல் விசயங்களில் எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்துசேரும். வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்களது தாய்நாடு சென்று திரும்புவதற்கான வாய்ப்புகள் உள்ளது. அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப்பழகுதல் நல்லதாகும். ஒரு சிலருக்கு உற்றார் மற்றும் உறவினர்களால் எதிர்பாராத ஆதாயங்களை அடைவீர்கள். படித்த வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமாகும்.

## துலாம்

விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான நற்பலனையே செய்யும். மஹான்களின் எதிர்பாராத தரிசனங்களால் மனநிம்மதி அடைவதோடு புதிய பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்படும். ஆடம்பரச் செலவுகளைச் செய்ய எண்ணி புதிய கடன்கள் வாங்குவீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய கூட்டுத்தொழில் செய்வதற்கான முயற்சிகளில் நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம். தந்தை - மகன் உறவுகளில் இருந்துவந்துள்ள பிரச்சினைகள் குறைந்த ஒற்றுமை உண்டாகும். புதிய ஆடைகள் மற்றும் அணிகலன்களை வாங்குவதற்கு வாய்ப்பு உள்ள காலமாகும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம்.

## இடபம்

கணவன் - மனைவிக்குள் காரணமற்ற மனக்கசப்புகள் வந்துபோகும். பிரிந்துபோன உறவுகளுடன் திரும்பவும் தொடர்புகள் ஏற்படக்கூடிய காலமாகும். சகோதர சகோதரர்களின் சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பொருளாதாரத்தில் சற்று முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். மனத்தைரியமுடன் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்துமுடிக்க வாய்ப்பு உள்ள காலமாகும். காணாமற்போன பொருட்கள் நண்பர்களால் வீண் பிரச்சினைகள்வர இருப்பதால் கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும். தாயின் உடல்நிலையில் இருந்து வந்துள்ள பாதிப்புகள் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும்.

## விருச்சிகம்

காதல் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். தன்னிடம் பணி செய்யும் அடிமை ஆட்களால் பிரச்சினைகளும் பொருள் இழப்பும் வர இருப்பதால் கவனம் தேவை. தரகு மற்றும் கமிசன் தொழில் செய்வோர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லதாகும். பெண்களால் தென்திசையில் இருந்து சில நல்ல செய்திகள் கிடைக்கும். வெகு காலமாகப் பிரிந்துபோன கணவன் - மனைவி இருவரும் ஒன்றுசேருவார்கள். நீண்டநாட்களாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் பொருட்கள் திரும்பக் கை வந்துசேரும். மாணவர்கள் கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களைப் பெறுவதோடு அரசு உதவித்தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

## மிதுனம்

தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். ஒரு சிலருக்கு உத்தியோகத்தில் வீண் பிரச்சினைகள் உருவாகி பணி இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காக புதிய மருத்துவர்களை நாடுவது நல்லது. காரணமற்ற மனசஞ்சலங்கள் வர இருப்பதால் புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பது உகந்ததாகும். பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் தீர்ந்து மனநிம்மதியை அடைவீர்கள். வீடு, வாகனங்களைப் பழுது பார்ப்பதன்மூலமாகப் பொருட்செலவுகள் உண்டாகலாம். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகலாம்.

## தனுசு

ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். நண்பர்களின் வீட்டு சுப காரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் உறவினர்களின் மூலமான நல்ல செய்திகள் வந்துசேரும் அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த ஆதாயங்கள் கிடைக்கும். என்பதால் புதிய தொடர்புகளை தவிர்த்தல் நல்லது. உத்தியோகத் துறையினர்களுக்கு மேலதிகாரிகளிடம் மனக்கசப்புகள் ஏற்பட்டு பணி இடமாற்றம் ஏற்பட இருப்தால் முன்கோபத்தை தவிர்த்துப் பணியாற்றுதல் சிறந்ததாகும். பெண்களால் தென்திசையில் இருந்து சில நல்ல செய்திகள் கிடைக்கும்.

## கடகம்

சகோதர சகோதரிகளின் தடைப்பட்ட திருமண காரியங்கள் மற்றவர்களின் உதவியால் நிறைவேறும் காலமாகும். புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். புதிய வீடுகள் மற்றும் வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர்வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். ஒரு சிலருக்கு பணிசெய்யும் இடங்கள் மற்றும் வீடுகளை இடமாற்றம் செய்வீர்கள். காய்கறிகள் இலை பூ பழம் போன்ற பொருட்களை விற்பனை செய்வோர்கள், எழுத்தாளர்கள், அச்சுத்தொழில் செய்வோர்கள் ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள்.

## மகரம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவதன் மூலம் மனத்திருப்தி அடைவீர்கள். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவுகளால் எதிர்பாராத பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவுகள் ஏற்படலாம். வடதிசையில் இருந்து நற்செய்திகள் வந்து சேரும். தொழிற்சாலை மற்றும் வீடுகளை மாற்றம் செய்ய எண்ணுவீர்கள். விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும் காலமாகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக்கொள்ள வேண்டாம். பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனங்களை வாங்குவதற்காக எதிர்பார்த்த வங்கிக் கடன்கள் கை வந்துசேரும்.

## சிங்கம்

வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல செய்திகள் கிடைக்கும். நீண்டகாலமாக பிள்ளை இல்லாதவர்களுக்கு இறையருளால் புத்திர பாக்கியம் உண்டாகும். மனைவிக்கு திடீரென நோய் வாய்ப்பட்டு மருத்துவச் செலவுகள் வந்துசேர இருப்பதால் எச்சரிக்கையுடன் இருக்கவும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமாகப் பேசப் பழகுவதால் வர இருக்கும் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். உத்தியோகம் இல்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு கிடைக்கும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முயற்சிகளைச் சற்றுத் தள்ளிப்போடவும்.

## கும்பம்

காதல் சம்பந்தமான விசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. திருமண சம்பந்தமான முயற்சிகளை இன்னும் சற்றுக்கால தாமதமாகவே நடத்துவது சிறந்ததாகும். மாணவர்களுக்கு புதிய படிப்புகள் சம்பந்தமாக நல்ல தகவல்கள் கிடைக்கும். தடைப்பட்டுப்போன சகோதர சகோதரிகளின் சுபகாரிய சம்பந்தமாக நல்ல தகவல்கள் வந்துசேரும். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்துவந்த பண உதவித்தொகைகள் கிடைக்கும். வராத பணம் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். புதிய வீடு மற்றும் நிலபுலன்களை வாங்குவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள்.

## கன்னி

முன்கோபம் தவிர்த்தல் நல்லது. மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்கான முயற்சிகளில் சற்று பின்னடைவுகள் உண்டாகும். உடம்பில் கண் காது, தலை போன்ற பாகங்களில் சிற்சில உபாதைகள் வருவதன்மூலம் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். வெளிநாடு சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளில் குடும்பச் சொத்துக்களில் வெகுகாலமாக இருந்து வந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் திரும்பக் கிடைக்கும். ரேஸ் லாட்டரி போன்றவற்றின் மூலமாக திடீர் தனவரவுகள் உண்டாகும்.

## மீனம்

வேலையாட்களால் எதிர்பார்த்த ஆதாயம் இல்லை. தாயின் உடல்நிலையில் சில பாதிப்புகள் வரக்கூடுமாகையால் கவனமுடன் இருக்கவும். நீண்டகாலமாக திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமண காரியங்கள் நிறைவேறும். தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்க்கவும். கணவன்-மனைவிக்கிடையில் ஒற்றுமை மேலோங்கும். குலதெய்வ வழிபாடுகளை செய்துவருவது நல்லது. உற்றார் மற்றும் உறவினர்களால் எந்தவிதமான ஆதாயமும் இல்லை. விடுபட்டுப் போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. பெண்களுக்கு அதிர்ஷ்டம் உண்டாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)




டெல்லியில் குதுப்மினார் அருகில் இந்த இரும்பு தூண் உள்ளது. இதை உலக விஞ்ஞானிகள் ஏன் இன்னும் துருப்பிடிக்கவில்லை என ஆராய்ந்தனர். பதில் காண முடியவில்லை.

கி.பி.500ல் சந்திரகுப்த மன்னரால் வைக்கப்பட்டது. இந்த துருப்பிடிக்காத இரும்பு தயாரிப்பதை நாம் கண்டுபிடித்தால் நமது உலகக்கடன்களை எல்லாம் அடைத்து விடலாம். ஏனெனில் எவர்சில்வர் கொண்டு ராட்சச இயந்திரங்களை தயாரிக்க முடியாது செலவுமிக அதிகமாகும். முன்னோர்களின் இந்த இரகசிய கண்டுபிடிப்பை நம் முன்னோர்களே மறைத்துவிட்டனர் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

ஜப்பானியத் தலைநகர் டோக்கியோவிலுள்ள வீதியொன்றில் சுமார் 800 பேர் ஒரேவேளையில் பாதணிகளை பொலிஷ் செய்தனர். ஓரிடத்தில் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையானோர் பாதணிகளை பொலிஷ் செய்த நிகழ்வாக இது கின்னஸ் சாதனை நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் பாதணி பொலிஷ் செய்த 800 ஜப்பானியர்

ஜப்பானியத் தலைநகர் டோக்கியோவிலுள்ள வீதியொன்றில் சுமார் 800 பேர் ஒரேவேளை யில் பாதணிகளை பொலிஷ் செய்தனர். ஓரிடத்தில் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையானோர் பாதணிகளை பொலிஷ் செய்த நிகழ்வாக இது கின்னஸ் சாதனை யாகப் பதியப்பட்டுள்ளது.






புற்றுநோயால் பாதிக்கப் பட்டிருந்த இளைஞர் ஒருவர் உயிர்பிரியும் நேரத்தில் தனது செல்லப்பிராணி யான நாயிடமிருந்து விடை பெற்ற சோகமான சம்பவம் ஐக்கிய அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் இடம்பெற்றுள்ளது. மைக் பெட்ரோசினோ என்ற 21 வயது இளைஞர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு தொடர்ச்சியாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் அவருடைய உயிர் பிரியப்போவதாக வைத்தியர்கள் அறிவித்தனர். இதனை அறிந்துகொண்ட மைக், தனது செல்லப்பிராணியை பார்க்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். இதன்போது நாயை கட்டிப்பிடித்து கண்ணீர் சிந்தியதாகவும் அதனை தமது வாழ்க்கையின் சோகம் நிறைந்த தருணங்களில் ஒன்றாகக் கருதுவதாகவும் மைக்கின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். தனது செல்லப்பிராணியுடன் விடைபெற்றதையடுத்து மைக்கின் உயிர்பிரிந்ததாக அறிவிக்கப்பட்டது.....




ஜொர்ஜியாவின் டிபிலிசி நகரில் வசிப்பவர் எலிபெர் எல்ஷியேவ்(வயது 42). குத்துச்சண்டை பயிற்சியாளரான எலிபெர், அபார காந்தசக்தியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதாவது, இரும்பு பொருட்கள் இவரது உடலில் ஒட்டிக் கொள்கிறது. கடந்த 2011ஆம் ஆண்டில் தனது உடலில் 50 கரண்டிகளை ஒட்டவைத்து சாதனை நிகழ்த்தினார். சிலநாட்களுக்கு முன்பு அவரே இந்த சாதனையை முறியடித்துள்ளார். தற்போது தனது மார்பு, முதுகு பகுதியில் 53 கரண்டிகளை ஒட்டவைத்து பார்வையாளர்களை அசத்தினார். இதுபற்றி எலிபெர், காந்தசக்தி இயற்கையாகவே தனது உடலில் அமைந்துவிட்டதாகவும், எதிர்காலத்தில் வாய்ப்பு கிடைத்தால் குட்டி விமானம், காலி ரெயில் பெட்டி ஆகியவற்றை இழுத்து சாதனை படைக்க ஆசைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.




சீனாவின் ஜனாதி-பதி ஸி ஜின்பிங், ஹோட்டலில் வரிசையில் நின்று சாப்பிட்டது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங், பெய்ஜிங் நகரில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களில் நேற்று திடீரென ஆய்வு மேற்கொண்டார். அப்போது ஹோட்டல் ஒன்றுக்கு சென்றவர் அங்குள்ள உணவு வகைகளை சாப்பிட விரும்பினார். அங்கு கூட்டம் அதிகமாக இருந்ததுடன், மக்கள் வரிசையில் நின்று உணவுகளை வாங்கி சாப்பிட்டு கொண்டிருந்தனர். எனவே ஜனாதிபதியும் வரிசையில் நின்று உண-வுகளை வாங்கி ருசி பார்த்தார். பன்றி இறைச்சியால் தயாரிக்கப்பட்ட ரொட்டி வகைகள், வெங்காய பன் ரொட்டிகள், பச்சை காய்கறிகள், வறுத்த ஈரல், போன்றவற்றை வாங்கி சாப்பிட்டவர், அதற்கான பணத்தையும் கொடுத்து விட்டு சென்றுள்ளாராம். இதனை பார்த்த மக்கள் ஆச்சரியத்தில் வியந்து போயுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணியினர் தென்னாபிரிக்க கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டு புத்தாண்டை கொண்டாடுவதற்காக டிசம்பர்31ஆம் திகதி இரவு மும்பை விமான நிலையத்தில் வந்திறங்கினர். அவர்கள் வந்திறங்கிய நேரம் புத்தாண்டு பிறப்பதற்கு சிலமணி நேரங்களே இருந்ததால் தோனி முதல் அனைத்து வீரர்களும் அவசர அவசரமாக மும்பை விமான நிலையத்தில் இருந்து அவரவர் வீடுகளுக்கு சென்றனர். ஆனால் விராத் கோஹ்லி மட்டும் ஒரு நடிகையின் வீட்டிற்கு சென்றார். அந்த நடிகை யார் தெரியுமா அனுஷ்கா சர்மாதான்?

அனுஷ்கா சர்மா விராத் கோஹ்லியை அழைத்துவர BMW கார் ஒன்றை விமான நிலையத்திற்கு அனுப்பியுள்ளார். அவர் உடனே அதில் ஏறி இரவில் அனுஷ்கா சர்மா வீட்டுக்கு சென்றார். அங்கு இருவரும் விடியவிடிய உற்சாக பானம் அருந்தி புத்தாண்டை வெகு விமர்சையாக கொண்டாடினார்களாம். இந்த கொண்டாட்டத்தில் அனுஷ்கா சர்மாவின் மிக நெருங்கிய நண்பர்கள் மட்டுமே இருந்தனர்.

பின்னர் அதிகாலை நேரத்தில் தான் விராத் கோஹ்லி தனது வீட்டிற்கு சென்றுள்ளார். சமீபத்தில் இருவரும் ஒரு ஷாமபோ விளம்பரத்தில் நடித்ததில் இருந்தே காதல் வந்துவிட்டதாகவும், அதை அவ்வப்போது நேரில் சந்தித்து வளர்த்துவருகிறார்கள் என்று கூறப்படுகிறது.








Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 25 வியாழக்கிழமை (09.01.2014) பக்கங்கள் IV ஓசை - 100

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## ஆட்கொணர்வு மனு வழக்கு; ஆஜராகாத அனந்தி சசிதரன்

(முல்லைத்தீவு)

காணாமற் போனோர் தொடர்பிலான ஐந்து ஆட்கொணர்வு மனுக்கள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் எடுககபபட்டபோது எழிலன் மனைவி அனந்தி சசிதரன் மன்றில் ஆஜராகி இருக்கவில்லை.

வழக்கை எடுத்துக்கொள்ள நீதிமன்று தயாரானபோது முறையான மொழிபெயர்ப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென பிரதிவாதிகள் சார்பிலும் மனுதாரர் சார்பிலும் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக மொழிபெயர்ப்பாளர் ஒருவரை உடனடியாக நியமிக்க நீதிச்சேவை ஆணைக்குழு மூலமாக நடவடிக்கை எடுக்க முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டதுடன் வழக்கை 4.03.2014 ஆம் திகதிக்கும்

IV ஆம் பக்கம் பார்க்க


## 52 ஆவது படைத் தலைமையகம் எழுதுமட்டுவாளில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். எழுதுமட்டுவாளில் நிர்மாணிக்கப்பட்ட இராணுவத்தின் 52 ஆவது படைப்பிரிவின் தலைமையகத்தினை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ நேற்று திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஆர்.எம்.தயாரத்னாயக்க, யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர்

IV ஆம் பக்கம் பார்க்க



# போர்க்குற்ற விசாரணை இலகுவான காரியமல்ல

## யாழில் அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணையைக் கோரும் பிரேரணையை கொண்டுவருவது இலகுவான காரியமல்ல என்வும், அதற்கான ஆதரவை சர்வதேச மட்டத்தில் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் இருக்குமெனவும் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகப் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடிய அமெரிக்க விசேட தூதுவர் ஸ்ரீபன் ராப் தெரிவித்தார்.**

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்த அவர் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் கலந்துரையாடிய வேளையே இவ்வாறு தெரிவித்தார். இதன்போது கருத்துத் தெரிவித்த சிவில் சமூக பிரதிநிதிகள்,

சர்வதேச போர்க்குற்ற விசாரணையை இலங்கைமீது முன்வைக்காவிட்டால் ஆகக் குறைந்தது தமிழ் மக்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வையாவது முன்வைக்க இலங்கை மீது அழுத்தங்களைக் கொடுக்கும் தீர்மானங்களையாவது முன்வைக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர். குறிப்பாக ஏற்கனவே அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட 2 பிரேரணைகள் இலங்கை மீது அழுத்தத்தை கொடுப்பதற்கு பதில் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசாங்கம் மேலும் கடுமையான நெருக்குதல்களை ஏற்படுத்தி வருவதாக தெரிவித்தனர். யுத்தம் நிறைவடைந்து 4 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் சர்வதேசரீதியாக அழுத்தங்களை பிரயோகிக்கின்ற போதும், காணாமற் போதல்கள், கடத்தல்கள், புலனாய்வுப் பிரிவினரின் நெருக்குதல்கள், காணி அபகரிப்பு, அகதி வாழ்வு, ஊடகவியலாளர்கள் மீதான கெடுபிடிகள் எனப் பல பிரச்சினைகள் தொடர்வதாகவும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஸரீபன் ராப்பிடம் எடுத்துக் கூறினர்.

இதற்குப் பதிலளித்த ராப்,

இலங்கை மீதான சர்வதேச போர்க்குற்ற விசாரணையைக் கோரும் பிரேரணையைக் கொண்டுவருவது இலகுவான காரியம் அல்ல எனவும், அதற்கான ஆதரவை சர்வதேச மட்டத்தில் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் இருக்கும் எனவும்

IV ஆம் பக்கம் பார்க்க

## இஸ்ரேலில் ஜனாதிபதி



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மத்திய கிழக்கிற்கான விஜயத்தின் இறுதிக் கட்டமாக நேற்றுக் காலை இஸ்ரேலின் ஜெருசலேம் நகரைச் சென்றடைந்தார். ஜோர்தான் மற்றும் பலஸ்தீன் ஆகிய நாடுகளுக்கான இரண்டு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெத்லஹேமில் இருந்து ஜெருசலேம் சென்றடைந்தார்.

ஜனாதிபதி தனது

IV ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்ற அலுவலகத்தை காலி செய்தார் அமரதுங்க

(கொழும்பு)

எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற கொறடாவான ஜோன் அமரதுங்க, நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சி கொறடாவின் அலுவலகத்தில் இருந்த தனது கடிதங்கள் உள்ளிட்ட ஆவணங்களை எடுத்துச் சென்று விட்டதாக நாடாளுமன்றத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான மத்திய கிழக்கு விஜயத்திற்கு முன்னர் நாடாளுமன்றத்திற்கு வந்த ஜோன் அமரதுங்க, தனது அலுவலகத்தில் இருந்து இந்த ஆவணங்களை எடுத்துச் சென்றுள்ளார்.

புதுவருடத்தை முன்னிட்டு அலுவலகத்தை துப்புரவு

IV ஆம் பக்கம் பார்க்க

### ஆசிரிய வளத்தை தருமாறு

## ஜெயபுரம் மாணவர், பெற்றோர் கல்விப் பணிமனையில் கோரிக்கை

(பூநகரி)

பூநகரிக் கோட்டத்திலுள்ள ஜெயபுரம் மகா வித்தியாலய மாணவர்களும் பெற்றோரும் நேற்றைய தினம் கிளிநொச்சிக் கல்விப் பணிமனைக்குச் சென்று தமக்கான ஆசிரிய வளத்தைத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த (உயர்தர) மாணவர்களுக்கான ஆசிரிய வளம் தற்பொழுது இல்லாமற் போயுள்ளது. இதனால் தாம் பாதிக்கப்படுவதாக மாணவர்களும், தமது பிள்ளைகளுக்கான ஆசிரிய வளத்தை ஏற்படுத்தித் தருமாறு பெற்றோரும் கூட்டாக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பூநகரிக் கோட்டத்திலுள்ள ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் 2014 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவில் 10 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இவர்கள் இந்த ஆண்டு பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான ஆசிரிய வளம் இதுவரை அங்கே இருந்துள்ளது. ஆனால், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய இடமாற்றத்தை அடுத்து அங்கே கற்பித்த ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டனர். பதில் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் தாம் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக மாணவர்கள் வலயக்கல்விப் பணிமனைக்குச் சென்று முறையிட்டுள்ளனர்.

இதேவேளை 2015 இல் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 15 கலை மற்றும் வர்த்தகப் பிரிவு

IV ஆம் பக்கம் பார்க்க

## மக்களுக்காக எந்த சவாலையும் சந்திப்பதற்கு அரசு தயார்

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

இலங்கை மக்களுக்காக எந்த சவால்களையும் எதிர்கொள்வதற்கு தயாராகவே உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள யோசனையை சந்திக்க தயாராகவே உள்ளோம்.

அமெரிக்கா தகவல்களை எப்படி திரட்டி வருகிறது என்பதை அரசாங்கம் அறிந்து வைதுள்ளது. அந்த செயற்பாட்டில் அமெரிக்க ஈடுபட்டுள்ளதையும் அரசாங்கம் அறியும்.

IV ஆம் பக்கம் பார்க்க

# கிளிநொச்சி பொதுச் சந்தையில் கரைச்சி பிரதேச சபையின் அடாவடி

கிளிநொச்சி கரைச்சி பொதுச் சந்தையில் நேற்றுமுன்தினம் சந்தை வர்த்தக நிலையங்களில் வர்த்தகர்களால் பொருத்தப் பட்டிருந்த மின்விளக்குகள் விசிறிகள் மின் வயர்கள் என்பவற்றை கரைச்சி பிரதேச சபையினர் அத்துமீறி கழற்றி சென்றுவிட்டதாக சந்தை வர்த்தகர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது குறித்த தினத்தன்று காலை கரைச்சி பிரதேச சபையின் சுகாதார பரிசோதகர் ஒருவரின் தலைமையில் வருகைதந்த குழுவினர் சந்தை தொகுதியினுள் உள்ள வர்த்தக நிலையங்களுக்குள் புகுந்து கடைகளில் வியாபாரிகளால் பொருத்தபட்டிருந்த மின்விளக்குகள், விசிறிகள், வயர்கள் உள்ளிட்ட மின் உபகரணங்களை அறுத்தும் கழற்றியும் எடுத்துள்ளனர்

இதற்கான காரணத்தை வியாபாரிகள் கோரியபோது வியாபாரிகளால் மின்சார கட்டணம் செலுத்தப்படாமையினால் பிரதேச சபையின் தலைமையின் உத்தரவிற்கு அமைய இந் நடவடிக்கைகளில் ஈடுப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் கரைச்சி பிரதேச சபையின் இந் நடவடிக்கையினை வர்த்தகர்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர் யுத்தத்தினால் முழுமையாக பாதிக்கப்பட்டு மீண்டும் அம்பாள்குளம் சந்தையில் வியாபாரத்தை ஆரம்பித்து அங்கு போதிய வியாபாரம் இன்றி சிறுது காலம் பாதிப்புக்களை சுமந்து தற்போது அரசினால் பெரும் நிதிச் செலவில் அமைத்து தரப்பட்டுள்ள இடத்தில் வியாபாரத்தை மேற்கொண்டு வரும் நிலையில் பிரதேச சபையின் இம் மனிதாபிமானமற்ற செயல் தங்களை வியாபார ரீதியிலும் உள ரீதியிலும் பெரிதும் பாதித்துள்ளதாக குறித்த வர்த்தகர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மின் கட்டணம் செலுத்த தவறியிருப்பின் அதற்காக கால அவகாசம் வழங்கியிருக்க வேண்டும் கால அவகாசத்திலும் மின்கட்டணம் செலுத்தாத வியாபாரிகளின் வியாபார நிலையங்களுக்கான மின்சாரத்தை துண்டித்திருக்கலாம் ஆனால் அதை விடுத்து தங்களது சொந்தப் பணத்தில் கொள்வனவு செய்து பொருத்திய மின் உபகரணங்களை அறுத்தெடுத்துச் சென்றது நியாயமான செயல் அல்ல என வர்த்தகர்கள் மேலும் தெரிவிக்கின்றனர் அத்தோடு கரைச்சி பிரதேச சபையினரால் அறுத்தெடுத்துச் சென்ற மின் உபகரணங்கள் மீள ஒப்படைக்கும் பட்சத்தில் அதனை மீண்டும் பாவிக்கமுடியுமா என்பது சந்தேகமே என தெரிவிக்கும் வர்த்தகர்கள் சொந்த வர்த்தகர்களிடம் இரக்கமின்றி நடந்து கொண்டமையினையும் கண்டித்துள்ளனர். (29)

# கமரா அன்பளிப்பு

(கொழும்பு)

முதியோர்களுக்கான தேசிய செயலகம் 70 வயதை அடைந்த வறிய முதியோர்களுக்கான 1000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவை வழங்கும் பணியில் ஈடுபடும் சமூக சேவைகள் அதிகாரிகள், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் ஆகியோருக்கு அலுவலகக் கடமைக்கென புதிய கமரா ஒன்றைக் கொள்வனவு செய்து வழங்கி வருகின்றார்கள்.

கொழும்பிலுள்ள அமைச்சின் தலைமைச் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது. சென்ற 2013 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு மூலமாக இது கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்களில் முதியோர் மேம்பாட்டு உதவியாளர்கள் இல்லாதவிடத்து சமூக சேவைகள் அதிகாரிகளுக்கு கமரா வழங்கி வருகின்றனர்.

மாவட்ட ரீதியாக முதியோர் தேசிய செயலகத்தின் கடமைகளை ஒருங்கிணைக்கும் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர்களுக்கும் இக்கமரா வழங்கப்பட்டு வருகிறது (90)

## சத்துணவு வழங்கல்

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் வசிக்கும் இரண்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு வரணிப் பிரதேச வைத்தியசாலையில் வைத்து குடும்ப நல உத்தியோகத்தரால் கடந்த வாரம் சத்துணவு வழங்கப்பட்டது.

ஒரு குழந்தைக்கு 3 கிலோ கிராம் சத்துணவு வழங்கப்பட்டது. (150)

# குருநகர் தொடர்மாடி புனரமைப்பு; குழுவின் பணிகள் தொடங்கவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் ஐந்து மாடிக் கட்டடத் தொகுதியின் மீள்புனரமைப்புப் பணிகளை ஆராயும் முகமாக நியமிக்கப்பட்ட குழுவின் பணிகளை உடனடியாக தொடங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

குருநகர் பகுதிக்கு நேற்றையதினம் மீண்டும் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மேற்படி பணிப்புரையினை விடுத்துள்ளார்.



மீள்புனரமைப்புப் பணிகள் தொடர்பில் குடியிருப்பு மக்களால் தமக்கு பூரண திருப்தியில்லையென சுட்டிக்காட்டியதற்கு அமைவாக, முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களை கண்காணிக்கும் வகையில் தேசிய வீடமைப்பு, இலங்கை மின்சாரசபை அபிவிருத்தி அதிகார சபை, யாழ்.மாநகர சபை, கட்டடத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளையும் யாழ்.மாநகர சபை உறுப்பினர் இளங்கோ (றீகன்) மற்றும் மாடி வீட்டுத்திட்ட சங்க செயலாளர் ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்றை அமைச்சர் நேற்றுமுன்தினம் மாலை நியமித்திருந்தார்.

இதன்பிரகாரம் மேற்படி குழு புனரமைப்புப் பணிகளை கண்காணிக்கும் அதேவேளை, பணிகள் தொடர்பில் தமக்கு மூன்று நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது, யாழ்.மாநகர முதல்வர் உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் உடனிருந்தனர்.




# "துர்க்காபுரம்" வீடமைப்பு திட்டம் இவ்வருடத்தில் ஆரம்பம்

தெல்லிப்பளை துர்க்காபுரம் வீடமைப்புத்திட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது. துர்க்கா இல்லத்தில் தங்கி, வளர்ந்து, படித்துவந்த மாணவிகளை இவ்வீடமைப்புக்குடியேற்றத்திட்டத்தில் குடியமர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையில் ஏழரைப்பரப்புக் காணியொன்றை முன்னாள் சுங்கத் திணைக்களத்தைச்சேர்ந்த பொன்னையா குடும்பத்தினர் கடந்த திங்கட்கிழமை துர்க்கா தேவஸ்தானத்திற்கு அன்பளிப்புச் செய்திருந்தனர். இக்காணியிலேயே துர்க்காபுரம் வீடமைப்புத்திட்டம் அமையப்பெற்றுள்ளது.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் துர்க்கா இல்லத்தில் 133 பெண் பிள்ளைகள் தங்கியிருந்து தமது கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர்.

க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சையில் இவர்களில் சிலர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன், பல்கலைக்கழகம், கல்வியற்கல்லூரி போன்றவற்றிற்கும் தெரிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

துர்க்கா வீடமைப்புத்திட்டம் இந்த ஆண்டிலேயே ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# "ஞானச்சுடர் விருது"

(குருநகர்)

ஊடகவியலாளரும், எழுத்தாளருமான த.பரமலிங்கம் இன்று நடைபெறவிருக்கும் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் 2013 ஆம் ஆண்டுக்கான கலாசார விழாவில் 'கலைஞானச்சுடர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

புனைகதைத்துறைக்குக் கௌரவிக்கபபடவிருக்கும் த.பரமலிங்கம், கவிதை, கட்டுரை, பத்தி எழுத்து, விமர்சனம், வானொலி நாடகம், நாவல் என்பவற்றை எழுதிக்குவித்துள்ளார்.

'அணிதிரளும அலைகள்' என்னும் நாவல் 2001 ஆம் ஆண்டு நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது. நாடளாவிய மட்டில் நடத்தப்பட்ட கவிதை, சிறுகதைப் போட்டிகளில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பரிசுகள் பத்துக்கு மேற்படபெற்றுள்ளார்.

'கவிமணி' பட்டம் இருதடவைகள் பெற்றுள்ள இவர் இதுவரை 30 சான்றிதழ்கள், 3 வெற்றிக்கிண்ணங்கள், 3 பதக்கங்கள், 3 கேடயங்களை வென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தேவிபரமலிங்கம் 'நவாலியூர்க் கவிராயர்', மற்றம் 'மூலபாரதி' 'பட்டணைந்து' போன்ற புனைபெயர்களில் எழுதிவருகின்றார். (68)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 220 | திகதி 2014.01.07 | வர்ணம் மஞ்சள்

வெற்றி இலக்கங்கள்: 19 24 47 62 | ஆங்கில எழுத்து: F

பரிசுத் தொகை ரூபா. 10,246,480/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 10 | 500,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 215 | 215,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 451 | 451,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9499 | 569,940/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5189 | 207,560/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 124741 | 2,494,820/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17855 | 357,100/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 10,246,480/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,795,420/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 10,491,020/-

2014.01.10ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3265)

# மண்ணை நேசிக்கும் சமூகமே விரைவான முன்னேற்றம் அடையும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



(கிளிநொச்சி)

தங்களது மண்ணை நேசிக்கும் மக்கள் சமூகங்களாலேயே விரைவான முன்னேற்றத்தை அடையமுடியும் எப்பொழுதும் மக்கள் தங்கள் பிரதேசங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறையுடன் இருக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதிதலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள தொண்டமான்நகர் மற்றும் கனகாம்பிகைகுளம் கிராமத்தில் ஜரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியில் 26,28 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படுகின்ற பொது நோக்கு மண்டபங்களுக்கு நேற்றைய தினம் அடிக்கல் நாட்டி வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும தெரிவிக்கையில்,

மக்களும் மக்கள் அமைப்புகளும் அரசியல்வாதிகள் அதிகாரிகளுக்கு தொடர்ந்தும் தங்களின் தேவைகள் தொடர்பில் அழுத்தங்களை கொடுக்கவேண்டும் கிராமங்களின் முன்னேற்றங்களில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் பொது மக்களுக்கு எப்பொழுதும் பொது நலனில் அக்கறையும் விழிப்புணர்வும் அவசியம்.

தொண்டமான்நகர் கிராமத்திற்கு இதுவரை காலமும் ஒரு பொது நோக்கு மண்டபம் இல்லாமை என்பது ஒரு துரதிஷ்டவசமே. இங்குள்ள பொதுக்காணி தொடர்பில் இருந்து வந்த பிணக்கே இதற்கு காரணமாக இருந்துள்ளது.

தற்போது அந்தப் பிணக்கு பெருமளவுக்கு தீர்க்கப்பட்டு இந்த இடத்தில் ஒரு அழகான பொது நோக்கு மண்டபம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நீண்டகாலமாக ஒரு நிரந்தர கட்டடம் இல்லாமல் பல்வேறு சிரமங்களுடன் இயங்கி வந்த முன்பள்ளி, கிராம அலுவலர் அலுவலகம் என்பன இனிவரும் காலங்களில் சிறப்பாக மக்களுக்கு சேவையாற்ற முடியும்.

மக்களின் முப்பது வீத பங்களிப்புடன் அமைக்கப்படுகின்ற இந்த பொது நோக்கு மண்டபங்கள் மற்றும் ஏனைய பொதுச் சொத்துகளையும் பொறுப்புடன் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனதும் கடமை.

கனகாம்பிகைகுளம் கிராமத்திற்கு மேலும் ஒரு பொது நோக்கு மண்டபம் கிடைத்துள்ளமை இந்த பிரதேச மக்களின் தேவைகளுக்கு இலகுவாக அமையும் எனவும், இதேபோன்று கிளிநொச்சியில் இன்னும் 20 பொது நோக்கு மண்டபங்கள் அடுத்துவரும் வாரங்களில் அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், உதவித்திட்டப் பணிப்பாளர் அமல்ராஜ், கிராம அலுவலர் தர்மலிங்கம், திருமதி கனகசபை தொண்டமான்நகர் கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் இராஜேந்திரன், பொருளாளர் மகாதேவன், மாதர் அபிவிருத்தி சங்கத் தலைவி வதனி, கனகாம்பிகைகுளம் கமக்கார அமைப்பின் செயலாளர் ஆனந்தன், பொருளாளர் மயில்வாகனம் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மரக்குற்றிகள் கடத்தியவர்கள் இன்று நீதிமன்றில் ஆஜர்

(கிளிநொச்சி)

சட்டவிரோதமாக மரக்குற்றிகளை கடத்திச் சென்றதாகக் கூறப்படும் மூவரை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தவுள்ளதாக கிளிநொச்சி மாவட்டத்தின் வனவளத் திணைக்கள அதிகாரி எஸ்.பிரபாகரன் தெரிவித்தார்.

ஸ்கந்தபுரம், முட்கொம்பன் காட்டுப் பகுதியிலிருந்து நேற்று சட்டவிரோதமாக 200,000 ரூபா பெறுமதியான முதிரை மற்றும் பாலை மரக்குற்றிக்களை கன்ரர் ரக வாகனத்தில் கிளிநொச்சிக்கு கடத்திச் சென்றதாகக் கூறப்படும் மேற்படி மூவரும் புதுமுறிப்புப் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த வருடம் கிளிநொச்சி மாவட்டத்தில் 30 இற்கும் மேற்பட்ட சட்டவிரோத காட்டு மரங்கள் கடத்திய சம்பவங்கள் இடம் பெற்றன. குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றத்தினால் தண்டனைகள் வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

# அதிவிசேட சித்திபெற்ற மாணவருக்கு அனுமதி மறுப்பு

## ஜோசப் ஸ்ராலின் குற்றச்சாட்டு

புலமைப்பரிசில் பரீட்சையில் அதிவிசேட புள்ளிகள் பெற்ற மாணவர்கள் பிரபல பாடசாலைகளில் உயர் கல்வியினைத் தொடர அனுமதி மறுக்கப்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கனிஷ்ட பிரிவு கல்வியினை தெடர்வதற்கு பிரபல பாடசாலைகளில் அனுமதி கிடைக்கவில்லை.

இலங்கையில் 36 பிரபல பாடசாலைகள் இருக்கின்றன. அந்தப் பாடசாலைகளில் மாற்றுவழிகளில் தரம் 6 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

ஆனால், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிவிசேட சித்தியடைந்த மாணவர்களுக்கு அப்பாடசாலைகளில் அனுமதி மறுக்கப்படுகின்றது.

இவ்வாறு பிரபல பாடசாலைகளில் அனுமதி மறுப்பதனை தடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கும் கடந்த 3 ஆம் திகதி மாற்று வழி அனுமதிகளை தடுக்குமாறும், அவ்வாறு அனுமதி வழங்கும் அதிபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (25)

# குடாநாட்டில் தொடரும் மழை; அதிகரிக்கும் டெங்குத் தொற்று

(யாழ்ப்பாணம்)

தற்போது பெய்துவரும் மழை காரணமாக யாழ். குடாநாட்டில் டெங்குத்தொற்று அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாக சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

இந்த நோய்த் தாக்கம் காரணமாக இந்த வருடம் முதல் வாரத்தில் மட்டும் சுமார் 13 பேர் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்திசாலையில் அனுமதிக்கப் பட்டிருப்பதாக வைத்தியசாலையின் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

இறுதியாக நேற்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மிருசுவில் பகுதியிலிருந்து ஒருவரும், நேற்று முன்தினம் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து மற்றுமொருவருமாக இருவர் யாழ். போதனா வைத்திசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ். குடாநாட்டில் பரவலாக பெய்துவரும் மழை காரணமாக நீர் தேங்கக்கூடிய பகுதியில் டெங்கு நோயைப் பரப்பவல்ல நுளம்புகள் பெருகி இந்த நோய் பரவக்கூடிய நிலை உள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்கள் தேவையான தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (பா)

# கரையோர மக்களின் பாதுகாப்பு; அரச அதிபர் தலைமையில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தால் யாழ். குடாநாட்டின் கடற்கரையோரங்களில் வாழ்கின்ற மக்களின் பாதுகாப்பு தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நேற்று முன்தினம் அதிகாரிகள் ஆராய்ந்துள்ளதாக யாழ். மாநகரசபையின் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

அனர்த்தங்களின்போது கடற்கரைப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களை பாதுகாப்பது மற்றும் அவர்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளை மேற்கொள்வது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட கடற்கரையோரங்களுக்குச் சென்று இவர்கள் ஆராய்ந்ததாகவும் அவர் கூறினார்.

இதற்கமைய, அனர்த்தப் பாதுகாப்பு தொடர்பில் கரையோர மக்களுக்கு தொடர்ந்து அறிவுறுத்தல்களை வழங்குவதுடன், சுகாதாரத் துறையைப் பாதுகாப்பதற்காக கடற்கரைப் பிரதேசங்களில் குப்பைத் தொட்டிகளை அமைப்பதற்கும் மேலதிகமான தேவைகளுக்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்போது, யாழ். பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரம், யாழ். மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## வலுவிழந்தது தாழமுக்கம்

(கொழும்பு)

மன்னார் மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருந்த தாழமுக்கமானது, தற்போது வலுவிழந்து அரபிக் கடலை நோக்கி நகர்ந்து வருவதாக வளிமண்டலவியல் திணைகளம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டிற்கு அருகில் நிலைகொண்டிருந்த தாழமுக்கமானது தற்போது வலுவிழந்துள்ளமையினால், இதுவரை ஏற்பட்டிருந்த சீரற்ற வானிலையில் மாற்றம் ஏற்படும் என திணைக்களத்தின் வானிலை அதிகாரி கே.சூரியகுமாரன் தெரிவித்தார்.

# நீரிழிவு, குருதி அமுக்கம் பரிசோதனை முகாம் இன்று

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கு நீரிழிவு மற்றும் குருதி அமுக்கம் தொடர்பான பரிசோதனைகள் இன்று காலை 9.00 மணி முதல் ஒரு மணிவரை இடம்பெறும்.

மேற்படி பரிசோதனை முகாமின் ஊடாக பயன்பெறவுள்ளவர்கள் நவாலி தெற்கு கொத்துகட்டி வீதியில் உள்ள ஹேமலதா ஞாபகார்த்த இலவச ஆயுர்வேத மருத்துவ முகாமிற்கு வருமாறு டாக்டர் திருமதி அன்பரசி கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

# நினைவு தின நிகழ்வு

நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின்போது உயிரிழந்த ஒன்பது பேரின் நாற்பதாவது நினைவு தினம் நாளையதினம் யாழ்ப்பாணத்திலுள்ள வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னாலுள்ள நினைவாலயத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே இந்த நினைவுதின நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

# கேரள கஞ்சாவுடன் மன்னார்வாசி கைது

(கொழும்பு)

மன்னார்ப் பகுதியில் கேரள கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ 100 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அலுவலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

பேசாலைப் பகுதியைச் சேர்ந்த 50 வயதான ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர், மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தசாசன அமைச்சுப்பதவி; விலகவேண்டும் பிரதமர்



(கொழும்பு)

புத்தசாசன அமைச்சர் பதவியில் இருந்து பிரதமர் டி.எம். ஜயரத்ன உடனடியாக பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

சிங்கள ராவய அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு விஹார மகாதேவி பூங்காவுக்கு அருகில் நடைபெற்றது.

பௌத்த பிக்குமாருக்கு எதிராக பகிரங்கமான இடங்களில் வைத்து தவறாக பேசியமை குறித்து பிரதமர் நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என சிங்கள ராவய அமைப்பு இதன்பேது கேட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும்பாலான பிக்குமார் கலந்து கொண்டனர். பிரதமர் டி.எம். ஜயரத்னவுக்கு எதிராக பிரதமரின் அலுவலகத்திற்கு எதிரில் சிங்கள ராவய அமைப்பு நடத்திய ஆர்ப்பாட்டத்தில் மோதல் ஏற்பட்டது.

தமது ஆணையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குமார் உள்ளிட்ட குழுவினர் பிரதமரின் அலுவலகத்திற்குள் பிரவேசிக்க முயற்சித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பிக்குமார் சிலர் காயமடைந்துள்ளனர். எனினும் தாம் பிக்குமார் மீது தாக்குதல் நடத்தவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டக்கார்களை தடுக்க போடப்பட்டிருந்த வீதித் தடை ஆர்ப்பாட்டகார்கள் மீது விழுந்தத்தில் சிலர் காயமடைந்தனர் எனவும் பொலிஸார் கூறினர்.

# 76.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவு

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு கடற்பரப்பில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக கடந்த சில நாட்களில் இருந்து நேற்றுக்காலை 8.30 மணிவரையான காலப்பகுதியில் 76.3 மில்லிமீற்றர் மழை யாழ்.குடாநாட்டில் பதிவாகியிருப்பதாக திருநெல்வேலியில் அமைந்துள்ள வானிலை அவதான நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதில் நேற்று முன்தினம் காலை 8.30 மணியிலிருந்து நேற்று காலை 8.30 மணிவரையிலான காலப்பகுதியில் மட்டும் 31.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தொடர்ந்து வரும் நாட்களிலும் இந்த தாளமுக்கம் காரணமாக மழைபெய்யும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## ஜெயபுரம்...

மாணவர்களும் தமக்கான ஆசிரியவளத்தைக் கோரியுள்ளனர்.

இவர்களுக்குப் பதிலளித்த வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள், ஆசிரிய வளத்தைப் பகிர்வதில் உள்ள இடர்ப்பாடுகள் நீங்கும்வரை முழங்காவில் மகா வித்தியாலயத்துக்குச் சென்று அங்கே கல்வியைத் தொடருமாறு கேட்டுள்ளனர்.

ஆனாலும் தம் மால் ஜெயபுரத்திலிருந்து முழங்காவில் பாடசாலைக்குச் சென்று கல்வியைத் தொடரமுடியாது என்றும் எட்டு கிலோ மீற்றர் தொலைவுக்குச் சென்று கல்வியைத் தொடரக் கூடிய நிலையில் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு நெருக்கடிகள் உள்ளன எனவும் மாணவர்களும் பெற்றோரும் கல்வி அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறினர். இதனையடுத்து இந்த நிலைமை தொடர்பாக தாம் மாகாண கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவருவதாக கல்விப் பணிமனையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஆட்கொணர்வு...

ஒத்திவைத்தார். மனுதாரர் சார்பில் சட்டத்தரணி ரட்ண வேல், திருவருள் ஆகியோரும் பிரதிவாதிகள் சார்பில் அரச சட்டத்தரணி சமிந்த அத்துகோரள, கப்டன் பிரசாத் செனவிரட்ண, கப்டன் சிறிகுமார ஆகியோர் ஆஜராகி இருந்தனர். (170)

## இஸ்ரேலில்...

இஸ்ரேலுக்கான இந்த விஜயத்தின் போது அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன் யாஹுவுடன் இருதரப்பு பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார். அத்துடன் ஜெரிசலேம் பழைய நகரில் உள்ள சமயத் தலங்களுக்கும் ஜனாதிபதி சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ள வுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இஸ்ரேல் ஜனாதிபதி சிமோன் பரஸ்சை இன்றைய தினம் சந்திப்பார். ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி கமலா ரணதுங்க. ரொஷான் ரணசிங்க, ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் இலங்கைக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

## 52 ஆவது...

ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பாதுகாப்புச் செயலாளர், கிளிநொச்சி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் மத்திய ஒத்துழைப்பு மையத்தில் படை வீரர்களுக்கான நினைவுக் கல்லினைத் திரைநீக்கம் செய்தார்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி இராணுவப் படைத் தலைமையகத்தினால் உருவாக்கப்பட்ட சிவப்புப் பறவைகள் எனும் பிரிவின் செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைத்தார்.

சிவப்புப் பறவைகள் எனப்படும் பிரிவிலுள்ளவர்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கதைக்கக்கூடியவர்கள் என்பதுடன் அவசர நிலைகளின் போது, தமது ஒலிபெருக்கி பூட்டப்பட்ட சைக்கிள்களில் சென்று பொது மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவார்கள் என கிளிநொச்சி இராணுவப் படைத் தலைமையகத்தினர் தெரிவித்தனர்.

## நாடாளுமன்ற...

செய்வதாகக் கூறி அவர் ஆவணங்களை அங்கிருந்து எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

அரசாங்கத்தில் இணைந்து கொள்ளும நோக்கத்துடனேயே ஜோன் அமரதுங்க, ஜனாதிபதியுடன் மத்திய கிழக்கு விஜயத்தில் இணைந்து கொண்டதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது.

ஜோன் அமரதுங்க அடுத்த சபாநாயகராக நியமிக்கப்பட உள்ளதாகவும் அதற்காக அவர் பணிகளை முன்னெடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு நாடாளுமன்றத்தில் பிரதான கொறடாவாக பணியாற்றிய மூவர ஏற்கனவே அரசாங்கத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.

விஜயபால மெண்டிஸ், மகிந்த சமரசிங்க, வி.ஜே.எம். லொக்கு பண்டார ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி அரசாங்கத்துடன் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டாவது டெஸ்ட் போட்டி இலங்கை அணி ஆதிக்கம்

(டுபாய்)

டுபாயில் நடைபெற்றுவரும் இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியின் நேற்றைய முதல் நாள் ஆட்டநேரமுடிவில் இலங்கை அணி ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக குர்றாம் மன்சூர் 73 , பிலாவல் பட்டி ஆட்டமிழக்காமல் 24 மொஹமட் ஹபீஸ் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பாகிஸ்தான் அணியின் 7 வீரர்கள் ஒற்றைப்படை ஓட்டங்களோடு ஆட்டமிழந்திருந்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக நுவான் பிரதீப், ரங்கன ஹேரத் இருவரும் தலா 3, சுரங்க லக்மால், ஷமின்ட, எரங்க இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி, நேற்றைய ஆட்டம் போதிய வெளிச்சமின்றி இடைநிறுத்தப்பட்ட போது ஒரு விக்கெட்டை இழந்து 57 ஓட்டங்களுடன் உள்ளது. இலங்கை அணி சார்பாக திமுத் கருணாரத்ன 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, குமார் சங்கக்கார, கௌஷால் சில்வா இருவரும் தலா 12 ஓட்டங்களோடு களத்தில் உள்ளனர்.



யாழ்ப்பாணத்திற்கு நேற்றையதினம் வருகைதந்திருந்த அமெரிக்க விசேட தூதுவர் ஸ்ரீபன் ராப் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போது இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜே.சிஸன் ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர். (படஉதவி: நந்தகுமார்)

## மக்களுக்காக...

மனித உரிமை ஆணைக்குழுவில் முன்வைக்கப்படும் எந்த யோசனையாக இருந்தாலும் அதனை அரசாங்கம் ராஜதந்திர ரீதியில் எதிர்நோக்குவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது.

வெற்றியோ தோல்வியோ அரசாங்கம் அதனை எதிர்கொள்ளும். ஏற்கனவே மனித உரிமை ஆணைக்குழுவில் ஒரு முறை அரசாங்கம் வெற்றிபெற்றதுடன் ஒரு முறை தோல்வியை சந்தித்துள்ளது.

வேறு எதற்காகவும் அல்ல இலங்கை மக்களுக்காக எந்த சவால்களையும் எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகவே உள்ளது.

கடந்த முறை மனித உரிமை ஆணைக்குழுவில் முன்வைத்த இலங்கைக்கு எதிரான யோசனைக்கு இலங்கைக்கு ஆதரவாக 30 நாடுகள் வாக்களித்தன. இதனால் அது முழுமையான தோல்வியல்ல என்றார்.

## போர்க்குற்ற...

தெரிவித்ததோடு, சிரிய விடயத்தில் அமெரிக்காவின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட பின்னடைவையும் சுட்டிக் காட்டினர். அசாதாரண காலநிலை காரணமாக நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம் வந்த தூதுவர் முன்னதாக கிறீன் கிறாஸ் ஹோட்டலில் சிவில் சமூக பிரதிநிதிகளைச் சந்தித்தார். இதன்பின்னர் யாழ். ஆயர் இல்லம் சென்ற அவர் யாழ். ஆயர், மன்னார் ஆயர்களை சந்தித்து கலந்துரையாடினார். இதன் பின்னர் வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரனை சந்தித்த அவர், மீளவும் ஆயர் இல்லம் சென்று நீதிக்கும் சமாதானத்திற்குமான குழுவைச் சந்தித்தார்.

இதனையடுத்து மாலை 6.30 மணியளவில் வடமாகாண ஆளுநரை அவரது அலுவலகத்தில் சந்தித்தார். இரவு 7.30 மணிக்கு மங்கோஸ் விடுதியில் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடினார்.




இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.